இலவச இதழ்
Free Issue

# global express®

*we strive for your success!*





உலக மனிதநேய
தினச் சிறப்பிதழ்


புனித ரமழான்
சிறப்பிதழ்

Aug/Sept
2011
Volume 01
Issue 06

இலவசமானது! தரமானது! வாசிக்க இனிமையானது!

*SriLanka
Colombo - Jaffna - Mannar - Vavuniya - Batticaloa - Trincomalee - Kandy | *Overseas
Australia - Canada - France - Germany - India - Singapore - Swiss - UK - USA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

global Express
we strive for your success

#48/3 B, 1/1, Dharmarama Road,
Colombo-06, Srilanka.
T: +94 11 2 556 774-7 Fax: +94 11 2 556 773
E: info@globalexps.com
Web: www.spiyce.com

**Editorial Team**
T. Velu
M. Gowri
S. Yaalini

**Chief Coordinator**
T. Paramananthan

**Production**
**Creative & Layout Designing Team**
Global Express
S. Niraa
K. Dine

**Marketing**
R. Chenthu
A. Mithula
N. Karan

**Distributors**
Sangeetha Mobile Link (Jaffna)
Aum Saravanabava Illam (Mannar)
KPK Book Centre (Vavuniya)
Manis Café (Trinco)
Nishils Hair & Beauty Salon (Batticaloa)
Sri Lanka Traders (Kandy)

Visit to Our Magazine :
Web : www.spiyce.com/expsmag
Facebook: globalexpsmag@gmail.com

Visit to Our Websites:
www.jothidaveenai.com, www.kiribath.lk, www.tamiltaste.com

# CONTENTS

| | |
|---|---|
| Monthly Specials | Page - 02 |
| Spiritual | Page - 10 |
| Marabin Suwadugal | Page - 12 |
| Youth Achievements | Page - 22 |
| Dance | Page - 23 |
| Peaks | Page - 30 |
| Foods / Jokes | Page - 32 |
| Medical Advice | Page - 33 |
| General Knowledge | Page - 39 |
| Kids | Page - 40 |
| Sports | Page - 41 |
| Education | Page - 42 |
| Puthiya Vidiyal | Page - 44 |
| Swami Vivekanandar | Page - 45 |
| Story | Page - 46 |
| Numerology | Page - 48 |
| XPress Cinema | Page - 49 |
| Panimoottam | Page - 52 |
| Express Page | Page - 54 |
| Global Page | Page - 58 |



Page - 02



Page - 12



Page - 28



Page - 30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலக மனிதநேய தினம்

**உலக மனிதநேய தினம் World Humanitarian Day (WHD)**
**ஆண்டு தோறும் ஆகஸ்ட் மாதம் 19ம் திகதி அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.**

உலகளாவிய ரீதியில் யுத்தம், இயற்கை அனர்த்தங்கள், நோய், போஷாக்கின்மை போன்றவற்றால் பாதிக்கப்பட்ட பல இலட்சம் மக்களை நினைவுகூரும் வகையிலும், துன்பத்திலிருந்து விடுவிக்கப்படுவோருக்காகப் பணியாற்றுவோர் மற்றும் இப்பணிகளின் போது கொல்லப்பட்டோர், காயமடைந்தோர் ஆகியோரையும் நினைவுரும் வகையிலும் இத்தினத்தை அனுஷ்டிக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. 2008 டிசம்பர் 11ம் திகதி ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் A/RES/63/139 இலக்கத் தீர்மானப்படி இத்தினம் ஐக்கிய நாடுகள் சபையினால் பிரகடனப்படுத்தப்பட்டது. இதற்கமைய முதலாவது உலக மனித நேய தினம் (World Humanitarian Day) ஆகஸ்ட் 19 2009 இல் கொண்டாடப்பட்டது. இத்தினத்தை நாடுகளின் அரசாங்கங்களும், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமும், அரச சார்பற்ற நிறுவனங்களும், மனித நேயம் கொண்டவர்களும் இணைந்து உலகளாவிய ரீதியில் அனுஷ்டிக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

உலக வரலாற்றில் மனிதகுலம் பல தடைகளைத் தாண்டி முன்னேறியுள்ளது. ஆரம்பத்தில் கடற்கொந்தளிப்பு, நிலநடுக்கம், எரிமலைவெடிப்பு போன்ற இயற்கையின் சீற்றங்களிலிருந்து தம்மைக் காத்துக்கொண்டு மனிதன் வளர்ந்தான். அடுத்தபடியாக, காட்டுவாழ்க்கையில் புலி, கரடி, சிங்கம், பாம்பு போன்ற கொடிய மிருகங்களின் தாக்குதல்களைச் சமாளித்து வாழக் கற்றுக் கொண்டான். மனிதன் குடும்பமாக வாழத்தலைப்பட்டதும் சமூக வாழ்வில் புதுவித ஆபத்து மனிதனுக்கு வந்தது. மனிதர்களிலேயே பலர் மிருகங்களாக மாறி, மற்றவர்களை இனத்தின் பெயரால், நிறத்தின் தன்மையால், தேசத்தின் பெயரால், மதத்தின் பெயரால் தாக்கத் தலைப்பட்டனர். இவ்வாறு மனிதர்களால் மனிதர்களுக்குத் தரப்படும் கொடுமைதான் இன்றைய காலம் வரை நீடித்து வருகிறது.

ஆயினும் ஒவ்வொரு காலகட்டத்திலும், அன்போடு, அருளோடு, தன்னலமற்ற பொதுநலத்துடன், மனித நேயத்துடன் மற்ற உயிர்களையும் காத்து நிற்கும் உத்தமர்கள் ஒரு சிலர் இருந்த காரணத்தால்தான் மனித குலம் இன்னமும் தழைத்து நிற்கிறது. கல்வியறிவு, செல்வச் செழிப்பு, பட்டம், பதவி ஆகியவை பெருமளவில் ஒருவனுக்குக் கிடைத்திருந்தாலும், அவற்றுடன் மனித நேயம் என்பது அவனிடம் இல்லை என்றால், சேர்ந்துள்ள மற்ற வசதிகளால் அவனுக்கோ அவன் சார்ந்த சமுதாயத்துக்கோ எந்தப் பயனும் இல்லாமற் போய்விடும்.

மனிதரின் தன்மையின் உயர் போக்கினை அடிப்படையாகக் கொண்ட உலக நோக்கு மனிதநேயம் ஆகும். சிறப்பாக இயற்கை அம்சங்களில் கண்மூடித்தனமான நம்பிக்கை வைக்காமல் மனிதரின் பகுத்தறிவை, அறத்தை, ஆற்றலை மனிதநேயம் முன்னிறுத்துகின்றது. அனைத்து மனிதர்களையும் அது மதிப்போடு நோக்குகின்றது. தமிழில் மனிதநேயத்தை மனிதாபிமானம், மனிதத்துவம் என்றும் குறிப்பிடுவர்.

உலகளாவிய ரீதியில் நோக்குமிடத்து போசாக்கின்மை, இயற்கை அனர்த்தங்கள், யுத்த அனர்த்தங்கள், பயங்கர நோய்கள், வறுமை காரணமாக பாதிக்கப்பட்டுள்ள பல்லாயிரக்கணக்கான மக்களின் நிலையை ஆழமாக சிந்திக்க வேண்டியதாக உள்ளது.

மனிதன் என்று வரும்போது அனைவரும் எலும்புகளாலும் தசைகளாலும் படைக்கப்பட்டவர்கள். அனைத்து மனிதர்களின் உணர்வுகளும் ஒன்றே. ஒரு மனிதன் இயற்கையாகவோ அல்லது வேறு காரணங்களினாலோ பாதிக்கப்படும்போது அந்த மனிதனின் உள நிலைகளை சிந்திக்க வேண்டியதும், அம்மனிதர்களுக்கு உதவ வேண்டியதும் பாதிப்புக்குட்படாத மனிதர்களின் மனிதாபிமானத்தின் உயர் பண்பாகக் காணப்பட்டாலும் கூட, இதனை எத்தனை பேர் நிறைவேற்றுகின்றாகள் என்பது கேள்விக்குறியே!


முதலாளித்துவ சமூக அமைப்புக்கள் தலைவிரித்து தாண்டவமாடிக் கொண்டிருக்கும் இக்காலகட்டத்தில் பாதிக்கப்பட்ட ஒருவனுக்கு செய்யும் உதவிகள் கூட பேருக்காகவும், புகழுக்காகவும், விளம்பரத்துக்காகவும் அமைந்திருப்பது வேதனைக்குரிய ஒரு விடயமே. நவீன தொழில்நுட்ப விஞ்ஞான யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் எல்லாவற்றையும் சிந்திக்கும்போது மனிதாபிமானத்தின் அடிப்படையை உணரத் தவறுகிறோம். மனிதாபிமான சிந்தனைகள் உயரிய முறையில் முன்னெடுக்கப்படுமிடத்து இன்றைய உலகில் எத்தனையோ பிரச்சினைகளுக்கு எப்போதோ முடிவெடுத்திருக்கலாம்.

ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச மனிதாபிமான தினத்தை பிரகடனம் செய்கையில் யுத்தம், இயற்கை அனர்த்தங்கள், நோய், போஷாக்கின்மை காரணமாக பாதிக்கப்பட்டுள்ளதை கவனத்தில் எடுக்கும் தினமாகவும் இத்தகையோருக்கு உதவிகள் வழங்குவோரை கௌரவிக்கும் தினமாகவும் கொள்ள வேண்டும் என எதிர்பார்த்தது. இத்தகைய நிலைப்பாடுகளுக்கு ஒரு தினம் மாத்திரம் போதாது. பாதிக்கப்பட்டோரின் உணர்வுகளை புரிந்துகொள்ள வேண்டியது மனிதாபிமானமிக்க ஒவ்வொருவரினதும் கடமையாகும். இத்தகைய உணர்வூட்டல்கள் சமய ரீதியாக, கல்வியியல் ரீதியாக ஊட்டப்பட வேண்டியது அத்தியாவசியமான ஒன்றே.

மனித உணர்வுகளை ஓரிரு தினங்களுக்குள் மாற்றிவிட முடியாது. ஒரு மனிதனுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நிலை இயல்பாக உருவாக்கம் பெறுமிடத்து, இதனால் ஏற்படக்கூடிய பலாபலன் நிலையானது. நிச்சயமாக புகழை எதிர்நோக்காமல் இலாப நோக்கங்களைக் கருத்திற் கொள்ளாமல் இவற்றையே வியாபாரமாக்காமல் உண்மையான நோக்குடன் மனிதநேயமிக்கவர்களை கௌரவிக்க வேண்டியது கடமையே. அதேநேரம், உண்மையான நோக்கமிக்கவர்கள் இத்தகைய கௌரவங்களை எதிர்பார்க்கப் போவதுமில்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரமழான் மாதச் சிறப்பு



ரமழான் நோன்பு (**Sawm,** அரபு மொழி: صوم) என்பது இஸ்லாமிய நாட்காட்டியின் ஒன்பதாவது மாதமான ரமழான் மாதம் முழுவதும் இஸ்லாமியர்களால் நோற்கப்படும்நோன்பு ஆகும். இந்நாட்களில் நோன்பு அனுசரிப்பவர்கள் அதிகாலை முதல் மாலை வரையில், உண்ணாமல், நீரருந்தாமல், புகைக்காமல், மற்றும் வேறு தீய பழக்கங்களில் ஈடுபடாமல் இருப்பர். இது இஸ்லாமின் ஐந்து அடிப்படைக் கடமைகளில் மூன்றாவது கடமை ஆகும்.

### ரமழான் மாதச் சிறப்பு

ரம்ழான் மாதம் அருள் நிறைந்த மாதம், நன்மைகளை அதிகம் செய்யும் மாதம், பிழை பொறுப்புத் தேடும் மாதம், அல்லாஹ்வை அதிகம் நெருங்கும் வாய்ப்பைப் பெறும் மாதம், சுவர்க்கத்தின் வாசல்கள் திறக்கப்பட்டு நரகத்தின் வாசல்கள் மூடப்படும் மாதம், சாத்தான்கள் விலங்கிடப்படும் மாதம், ஆயிரம் மாதங்களை விட சிறப்புமிக்க ஒரு இரவைக் கொண்ட மாதம், நரகவாசிகள் நரகத்திலிருந்து விடுதலை பெறும் மாதம், குர்ஆனை இப்பூவுலகத்தில் இறக்குவதற்கு அல்லாஹ் தேர்ந்தெடுத்த மாதம், துஆக்கள் அங்கீகரிக்கப்படும் மாதம் என்று இந்த மதத்திற்குப் பல சிறப்புக்கள் இருப்பதாக இஸ்லாமிய மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

இம்மாதத்திலும் நன்மைகள் செய்யாதவர் எல்லா நன்மைகளையும் இழந்தவர் என்றும், இந்த மாதத்தில் அல்லாவிடம் பாவமன்னிப்புக் கேட்காதவர் அல்லாவின் அருளை விட்டுத் தொலைவில் இருப்பார்கள் என்றும் நபி(ஸல்) அவர்கள் கூறியிருக்கிறார்.

### நோன்பின் முக்கியத்துவம்

வணக்கங்களைச் செய்பவர்களுக்கு கூலியாக மறுமையில் சுவர்க்கத்தை ஏற்பாடு செய்து வைத்திருக்கின்றான் என்பது இஸ்லாமிய நம்பிக்கையாகும். இந்த வணக்கங்களின் வரிசையில் ஒன்றாக உள்ளதுதான் நோன்பு. நோன்பு என்னும் வணக்கம் மற்ற வணக்கங்களிலிருந்து எதிர்பார்க்கப்படும் தியாகங்களுக்கு முற்றிலும் மாறுபடுகின்றது. நோன்பு என்பது பசி, தாகம், இச்சை, இவைகளை இறைவனிடத்திலுள்ள நன்மையை எதிர்பார்த்தவராக நோன்பு மாதத்தின் பகல் நேரத்தில் கட்டுப்படுத்திக் கொள்வதாகும். இது ஒரு சடங்காகக் கருதாமல் வணக்கம் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் செய்வதாகக் கொள்ளப்படுகிறது. நோன்பின் நோக்கமே இறையச்சத்தை ஏற்படுத்திக் கொள்வதுதான். இறையச்சம் என்பது அல்லாவிற்குப் பயந்து, அவன் அறிவுறுத்தியவைகளைச் செய்தும், தடை செய்தவை களைத் தவிர்த்தும் நடப்பதுதான். இஸ்லாம் நோன்பாளி, யாருக்கும் தெரியாத இடத்தில் தனிமையில் இருக்கும் போதும் பசியுள்ளவராக இருந்தும் தன்னிடத்திலுள்ள உணவை உண்ணக் கூடாது. தாகமுள்ளவராக இருந்தும் எதையும் குடிக்கக் கூடாது. இச்சை இருந்தும் அதை நிறைவேற்றக் கூடாது. எல்லா வணக்கங்களும் அல்லாவுக்கே உரியன. அவனே எல்லா வணக்கங்களுக்கும் கூலி கொடுக்கின்றான். ரம்ழான் நோன்பு உண்மையான இறையச்சத்தோடும் மனத்தூய்மையுடனும் இருப்பதால் அது தனித்துவப்படுத்தப்பட்டுள்ளது. பசியோடும், தாகத்தோடும் இருப்பது மட்டும் நோன்பாகாது. இவைகளைக் கட்டுப்படுத்துவது போல் மற்ற எல்லா பாவங்களையும் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த நோன்பை ஒரு சடங்காகச் செய்பவர்களுக்கு எந்தவித பலனும் இல்லை. ஒருவர் கெட்ட பேச்சுக்களையும், கெட்ட செயல்களையும் விட்டுவிடாமல் உணவை விடுவதிலும், குடியை விடுவதிலும் மட்டும் ஆர்வம் கொள்வதால் பயனை அடைய முடியாது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

### நோன்பும் விதிவிலக்கும்

பருவமடைந்த இஸ்லாம் ஆண், பெண் அனைவரும் நோன்பு இருப்பது கடமையாகும். இருப்பினும் சில அவசியங்களின் அடிப்படையில் நோன்பு இருப்பதிலிருந்து கீழ்க்காணும் நிலையில் விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

முதுமை மற்றும் நீங்காத நோயின் காரணத்தினால் நோன்பு நோற்க முடியாதவர்கள் ஒவ்வொரு நோன்பிற்குப் பதிலாக ஒரு ஏழைக்கு உணவளிக்க வேண்டும். பைத்தியக்காரர்கள், நன்மை-தீமையைப் பிரித்தறிய முடியாத மூளை வளர்ச்சி குன்றியவர்கள், வயோதிபத்தால் புத்தி பேதலித்தவர்கள் ஆகியோர் நோன்பு நோற்பது கடமையில்லை. நோன்புக்கு பதிலாக ஏழைகளுக்கு உணவு ஏதும் கொடுக்க வேண்டியதுமில்லை. சில நாட்களில் நீங்கிவிடும் என்று எதிர்பார்க்கப்படும் நோயாக இருந்தால் அந்த நோயின் காரணமாகவும் நோன்பை விட்டுவிட அனுமதியுள்ளது. நோய் நீங்கியபின் விடுபட்ட நோன்புகளை நோற்க வேண்டும். பயணம் செய்பவர்களுக்கு நோன்பை விட்டுவிட அனுமதி யுள்ளது. ஊர் திரும்பியபின் விடுபட்ட நோன்புகளை நோற்க வேண்டும். கர்ப்பமாக இருக்கும் பெண், அல்லது பாலூட்டிக் கொண்டிருக்கும் பெண் நோன்பு நோற்பதால் தனக்கோ அல்லது குழந்தைக்கோ ஏதேனும் துன்பம் வரலாம் என்று பயந்தால் நோன்பை விட்டுவிட அனுமதியுள்ளது. அந்தப்பயம் நீங்கியபின் விடுபட்ட நோன்புகளை நோற்க வேண்டும். மாதவிடாய் அல்லது பிரசவ இரத்தம் வந்துவிட்டால் நோன்பு நோற்கக்கூடாது. இரத்தம் நின்ற பிறகு விடுபட்ட நோன்புகளை நோற்க வேண்டும். "தீ" மற்றும் நீரில் மூழ்குதல் போன்ற ஆபத்துக்குள்ளானவர்களைக் காப்பாற்றுவதற்காக நோன்பை விட்டுவிட அனுமதியுள்ளது. பிறகு அந்த நோன்பை நோற்க வேண்டும்.

### நோன்பை முறிக்கும் செயல்கள்

1. சாப்பிடுதல், குடித்தல் போன்றவற்றால் (அவைகள் உடலுக்கு பயன்தராத புகைபிடித்தல் போன்றவையாக இருந்தாலும் சரியே) நோன்பு முறிந்து விடும்.

2. முத்தமிடுதல், அணைத்தல், சுய இன்பம் போன்றவற்றால் இந்திரியம் வெளியானால் நோன்பு முறிந்து விடும். தூக்கத்தில் தானாகவே இந்திரியம் வெளியானால் நோன்பு முறியாது.

3. வேண்டுமென்று வாந்தி எடுத்தால் நோன்பு முறிந்து விடும். தானாகவே வாந்தி வந்தால் நோன்பு முறியாது.

4. உணவைப் போன்று சக்தியூட்டக்கூடிய பொருட்களை (மருந்து, குளுக்கோஸ் போன்றவைகளை) ஊசி போன்றவற்றின் மூலம் உடம்புக்கு செலுத்தினாலும் நோன்பு முறிந்து விடும்.

5. மாதவிடாய் மற்றும் பிரசவ இரத்தம் வந்துவிட்டால் நோன்பு முறிந்து விடும்.

### நோன்பின் அனுமதிகள்

1. நோன்பின்போது காயங்களுக்கு மருந்து போடுதல், பல் பிடுங்குதல், கண், காதுகளுக்கு சொட்டு மருந்திடுதல் போன்வற்றிற்கு அனுமதியுள்ளது.

2. காயங்கள், சிறுமூக்கு உடைதல், பல்பிடுங்குதல்

போன்றவற்றால் இரத்தம் வெளியானால் நோன்பு முறியாது.

3. நோன்பு நாட்களின் பகற்பொழுதில் பல் துலக்குவது தவறில்லை. மாறாக அது நோன்பல்லாத நாட்களில் சுன்னத்தாக இருப்பது போன்றே நோன்பு நாட்களிலும் சுன்னத்தாகும்.

4. குளிப்பு கடமையான நிலையில் ஸஹர் செய்வதில் தவறில்லை. அதற்கு அடுத்து வரும் சுப்ஹு தொழுகைக்காக குளித்துக் கொண்டாலே போதுமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. கடும் வெயிலின் காரணமாகக் குளிர்ந்த நீரை உடலில் ஊற்றிக்கொள்வதோ, குளிர் சாதனங்களை உடல்மீது பயன்படுத்துவதோ பகல் மற்றும் மாலைபொழுதில் குளித்துக் கொள்வதோ தவறில்லை.

6. நோன்பு திறக்க எதுவும் கிடைக்காவிட்டால் நோன்பு திறக்கும் நேரத்தில், நோன்பு திறப்பதாக எண்ணிக்கொண்டு பிறகு வாய்ப்புக் கிடைக்கும் போது சாப்பிட்டுக் கொண்டால் போதுமானது.

7. வாய் கொப்பளிக்கும் போது தன்னை அறியாது தண்ணீர் தொண்டையில் இறங்கிவிட்டால் நோன்பு முறியாது. ஆனால் அடித்தொண்டைவரை தண்ணீரைச் செலுத்தாமல் இருக்க வேண்டும்.

8. நேரம் தெரியாமல் சூரியன் மறைந்து விட்டது என்று நினைத்துச் சூரியன் மறைவதற்கு முன்னரோ, அல்லது ஃபஜ்ர் நேரம் வரவில்லை என்று நினைத்து, ஃபஜ்ர் நேரம் வந்ததற்குப் பிறகு சாப்பிட்டு விட்டாலோ நோன்பு முறியாது. எனினும் சரியான நேரம் தெரிந்து விட்டால் உடனே நிறுத்திக் கொள்ள வேண்டும்.

9. மறந்து அல்லது தெரியாமல் சாப்பிட்டோ குடித்தோ விட்டால் நோன்பு முறியாது. ஆனால் நோன்பின் நினைவு வந்தவுடனே நிறுத்திகொள்ள வேண்டும்.

நோன்பின் ஒழுங்குகள்

1. ஃபஜ்ருக்கு சற்று முன்பு ஸஹர் உணவு உண்பதும் சூரியன் மறைந்த உடனே தாமதப்படுத்தாது நோன்பு திறப்பதும் சுன்னத்தாகும்.

2. பேரீச்சம் பழத்தைக் கொண்டு நோன்பு திறப்பது. அது கிடைக்கவில்லையெனில் தண்ணீரைக்கொண்டு நோன்பு திறப்பது சுன்னத்தாகும்.

3. ஸஹர் நேரத்தில் தாமதமாக எழுந்து ஃபஜ்ருடைய நேரம் வந்துவிட்டது என தெரிந்தும் விடிஸஹர் என்ற பெயரில் எதையேனும் உண்பது தவறாகும். ஃபஜ்ர் நேரம் வந்துவிட்டால் எதையும் உண்ணக்கூடாது. இது போன்ற நிலைகளில் ஸஹர் செய்யாமலேயே நோன்பு நோற்க வேண்டும்.

4. ஹலால் என்னும் இஸ்லாத்தில் அனுமதிக்கப்பட்ட உணவையே உட்கொள்ள வேண்டும்.

5. நோன்பாளி அதிகமான வணக்க வழிபாடுகளில் ஈடுபடவேண்டும், அல்லாஹ் தடுத்தவைகளை விட்டும் முழுமையாக தவிர்த்து கொள்ள வேண்டும். பொய், புறம், கோள் சொல்லுதல், ஏமாற்றுதல், ஹராமான வழியில் பொருளீட்டல் போன்ற தவறான அனைத்து சொல், செயல்களை விட்டும் தவிர்த்திருத்தல் கட்டாயக் கடமையாகும்.

6. ரமழான் கடைசிப் பத்து நாட்களில் அதிலும் குறிப்பாக ஒற்றைப்பட இரவுகள் அனைத்திலும் இரவு முழுவதும் வணக்க வழிபாட்டில் ஈடுபட்டு லைலத்துல் கத்ர் இரவை தேடிக்கொள்ள வேண்டும்.

7. பெருநாள் தொழுகைக்கு முன்பு ஸதகத்துல் ஃபித்ர் எனும் பெருநாள் தர்மத்தை முறையாகக் கொடுக்க வேண்டும்.

# பெருக்க மரம்



போபாப் மரங்கள் ஆரிக்காவில் காணப்படுகின்றன. இதன் தண்டுகள் (Stem) வீங்கி இருக்கும். இதன் தண்டுகள் சுமார் 30 அடி அகலம் கொண்டது. ஆனால், இந்த மரம் மிகவும் குட்டையானது. இதன் பழங்கள் பெரிதாகவும், சுவையானதாகவும் இருக்கும். இதி லிருந்து பழச்சாறு தயாரிக்கின்றனர். இதன் பட்டை கயிறு மற்றும் துணிகள் தயாரிக்கப்பயன்படுகிறது. இந்த மரம் மென்மையாகவும், கனம் குறைந்ததாகவும் இருக்கும். இதனால், இது வீடு கட்டப் பயன்படுகிறது. இதன் இலைகள் பால்மெட்லி காம்பௌண்ட் இலை வகையைச் சார்ந்தது. பாம்பிக்ஸ் என்ற மரத்திற்கும் இந்த வகை இலைகள் உண்டு. சிக்யுயா ஜெய்ன்றிகா (Secuia Giantica) என்பது தான் உலகத்திலேயே பெரிய மரமாகும். இது சுமார் நாலாயிரம் ஆண்டுகள் வாழும். இது ஒரு அதிசய மரமாகும். இது இலங்கை யில் மன்னார் நகரப் பகுதியில் நகரத்தில் உள்நுளைகையில் அல்லது வெளியேறும் இடத்தில் பாலத்திற்கு அருகில் மூர்வீதியில் ஏறத்தாழ 1 கிலோமீட்டர் தொலைவில் சித்திவிநாயகர் கல்லூரிக்குச் சற்றே அப்பால் (பெருக்கமரம்) ஒன்றுள்ளது. இது பருமனில் பெருத்தவண்ணமுள்ளது. இதை அருகில் உள்ள தேவாலயம் ஒன்று பராமரித்து வருகின்றது. இது நீண்ட வயதும் அடி பெருத்ததுமானதாக இருக்கின்றது. ஆயிரம் வருசத்துக்கும் அதிகமான காலம் இந்த வகை மரங்கள் வாழ்கின்றன. இந்த மரங்களைக் குதிரை களுக்கான உணவுக்காக அந்நாளில் அரேபியர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள் என்பது வரலாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயதான பெற்றோரை கவனிப்பீர்........

பாசத்துக்காகவும், அரவணைப்புக்காகவும் ஏங்கும் நிலை. திருமண விழா ஒன்றில் பங்கேற்கச் சென்றபோது அங்கு ஒரு துண்டுப் பிரசுரத்தை அளித்தார்கள். ஏதோ வாழ்த்து மடல் என்றெண்ணிப் படித்தபோது, இன்றைய பெற்றோர் பலரின் மனநிலையைப் பிரதிபலிக்கும் வாசகங்கள் அதில் இடம்பெற்றிருந்தன. அது இதுதான்.

என் அருமை மகனே, மகளே, நான் முதுமையால் தள்ளாடும் நாள்களில், நான் உண்ணும்போது, உடை அழுக்கானால்.. நான் உடையணிய முடியாதிருந்தால்..

பொறுமையைக் கடைப்பிடி. நீ குழந்தையாய் இருந்தபோது, அவற்றைக் கற்றுத் தர நான் செலவிட்ட பல மணி நேரங்களை எண்ணிப் பார்.

நான் குளிக்க விரும்பாதபோது என்னை அவமானப்படுத்தாதே, கோபித்துக் கொள்ளாதே, உன்னைக் குளிப்பாட்ட ஆயிரம் கற்பனைக் காரணங்களைச் சொல்லி உன் பின்னால் ஓடி வந்த நாள்களை நினைத்துப்பார்.

சொன்னதையே திரும்பத் திரும்ப நான் சொன்னாலும், அதைக் கவனித்துக் கேள். உனக்குத் தூக்கம் வரும்வரை திரும்பத் திரும்ப ஒரே கதையைச் சொன்னது நானல்லவா.

என் கால்கள் தளரும்போது உன் கரங்களால் என்னைத் தாங்கு. நீ நடை பழக என் கரங்கள் உன் பிஞ்சுப் பாதங்களைத் தாங்கி நின்றதை அப்போது நினைத்துக்கொள்.

மறதி என்னை ஆட்கொள்ளும்போதெல்லாம் என்னிடம் சிடுசிடுக்காதே. என் உரையாடலைவிட, நான் உன்னுடன் இருப்பதும், நீ என்னைக் கவனித்துக் கொள்வதுமே முக்கியம்".

வயதான தாய், தந்தையரைத் தொட்டிலில் அமர்த்தி தனது இரு தோள்களில் சுமந்த நம் நாட்டில்தான் இந்த ஏக்கப் பெருமூச்சு வார்த்தைகள் உதித்துள்ளன.


இன்று பணமும், பகட்டும் மனிதனின் வாழ்க்கை முறையை மாற்றிவிட்டது.

இதற்காக இன்றைய இளைய தலைமுறையைச் சேர்ந்த கணவன், மனைவி வேலைவாய்ப்பைத் தேடி வெளிநாடுகளுக்கும், வெளிமாநிலங்களுக்கும் செல்லும் போக்கு அதிகரித்துள்ளது.

தனிக் குடித்தனம் என்ற புதிய சிந்தாந்தம் இன்றைய இளைய தலைமுறை பெண்களிடம் வேரூன்றிவிட்டது. இதனால் கிராமப்புறங்களில்கூட கூட்டுக்குடும்ப வாழ்க்கை மெல்லச் சிதைந்து வருகிறது. இத்தகைய சூழலில் பெற்றோர் வயதான காலத்தில் தனித்து விடப்படும் நிலை உருவாவதைத் தடுக்க முடியவில்லை. ஒண்டுக் குடித்தனம், உல்லாச வாழ்க்கை,

வயதான பெற்றோரின் அறிவுரையை ஏற்க இயலாத மனப்போக்கு, அவர்களைப் பராமரிக்க நேரத்தைச் செலவிட மனமின்மை போன்ற காரணங்களால் இன்றைக்கு முதியோர் இல்லங்களின் எண்ணிக்கை நாட்டில் அதிகரிக்கத் தொடங்கியுள்ளது.

அமெரிக்க நாட்டின் கலாசாரச் சீரழிவால், இன்றைக்கு 17 ஆயிரம் முதியோர் இல்லங்கள் அமைக்கப்பட்டு 1.5 கோடி முதியோரைப் பராமரிக்கும் நிலை உருவெடுத்துள்ளது. மேலைநாட்டுக் கலாசாரம் மெல்ல நம்மிடையே பரவும் நிலையில் இங்கேயும் முதியோர் இல்லங்களின் எண்ணிக்கை அதிகரிப்பதில் வியப்பில்லைதான். இன்றைக்கு நாட்டில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட முதியோர் இல்லங்கள் இருப்பினும், அவற்றில் பெரும்பாலானவை லாபநோக்குடனும், விளம்பர நோக்குடனும் பராமரிக்கப்படுபவையாகவே உள்ளன. இத்தகைய நிலை வருவது தலைக்குனிவுதான் இன்றைய தலைமுறைக்கு. வெளிஇடங்களிலும், வெளிநாடுகளிலும் பணம் சம்பாதிக்கக் குடியேறும் இளைய தலைமுறையினர் பலர் ஏனோ தனது பெற்றோரைத் தன்னோடு வைத்துப் பாதுகாக்கத் தவறுகின்றனர். இதனால் தனித்துவிடப்படும் பெற்றோர், தனது மகனின், மகளின் பாசத்துக் காகவும், அரவணைப்புக்காகவும் ஏங்கும் நிலை அதிகரித்து வருகிறது. முதியோர் இல்லங்களில் என்னதான் பராமரித்தாலும், அவற்றை அண்டி வாழும் பெற்றோரின் இறுதிக்காலம் மகிழ்ச்சிகரமாக இருக்க வாய்ப்பில்லை. செல்ல நாய்க்குட்டியைப் பராமரிக் கவும், பாசத்தைக் காட்டவும் நேரம் ஒதுக்க முடிந்த இன்றைய தலைமுறையினர் பெற்றோர் விஷயத்திலும் கவனம் செலுத்த வேண்டும். இன்றைய இயந்திரமயமான வாழ்க்கை, கணவன்-மனைவி கட்டாயம் வேலைக்குச் செல்லும் மனப்போக்கு, குழந்தைகளிடம் இருந்து பெற்றோரைப் பிரித்துவிடுகிறது. இதில் இன்றைய தலைமுறை உடனடியாகக் கவனம் செலுத்தியாக வேண்டும். இல்லையெனில், அவர்களும் முதியோர் இல்லங்களை எதிர்காலத்தில் நாட வேண்டியிருக்கும்.



நன்றி. இணையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## குட்டிக் கேள்வி குட்டிப் பதில்

வெகுவிரைவில் வெற்றி T.V.ல் ஆரம்பமாகவிருக்கும் தொலைக்காட்சி நாடகத் தொடர் எந்த நேரத்தில் ஆரம்பமாகும் என நேரத்தை ஊகித்து எமக்கு அனுப்பி வையுங்கள்.


(காலை நேரம், மாலை நேரம் குறிப்பிடத்தவறாதீர்கள்)

**வர்ணப்புடவை இலவசம்**

எழுதியனுப்பவேண்டிய முகவரி:

Spice Global Pvt. Ltd
#48/3 B, 1/1, Dharmarama Road,
Colombo-06, Sri Lanka.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கடமையே கடவுள்... கீதை
கடமையில் தவறிழைப்பவன் பாவி... பைபிள்
தவறுக்கு துணை போகின்றவன் குற்றவாளி... குர் ஆன்

# விரதங்கள்...

விரதங்கள் எல்லாவற்றிற்கும் கூடுதலான விதிமுறைகள் பொதுவானதாகவே இருக்கும். விரதத்திற்கு முதல் நாளன்றே வீட்டினைக் கழுவிச் சுத்தப்படுத்தி மஞ்சள் நீர் தெளித்தல் அவசியம். விரத நாளன்று அதிகாலையில் துயிலெழுந்து நீராடி தோய்த்துலர்ந்த ஆடைகளை அணிந்து, காலையும் மாலையும் வீட்டின் சுவாமி அறையில் விளக்கேற்றி, விபூதி பூசி, தேவாரங்கள் பாடுதல் வேண்டும். அத்துடன் கோயில் வழிபாடு செய்தல் மிகவும் நன்று.

ஒவ்வொரு விரதத்திற்கும் வித்தியாசமான உணவு முறைக் கட்டுப்பாடுகள் உண்டு. அதற்கு ஏற்றபடி உணவினை உட்கொள்ளுதல் நன்று. பாறணை நாளன்று உரிய நேரத்தில் சமைத்துச் சாப்பிடுதல் வேண்டும். சிலர் உதயத்திற்கு முன் விரதத்திற்குரிய பாறணையை முடித்துவிடுவதுண்டு. ஆனால் சூரிய உதயத்திற்கு முன் பாறணை செய்தல் விதியன்று.

விரத பூர்த்தியாகிய பாறணை செய்யும் தினத்தன்று வேறு விரதம் சேர்ந்தால் (எடுத்துக்காட்டு: கேதாரகௌரி நோன்பின் மறுநாள் கந்தசஷ்டி விரதாரம்பம்) காலையில் நீராடி பூசை முடித்துத் தீர்த்தத்தை உட்கொண்டு அதன் பின் மற்றைய விரதத்தைக் கடைப்பிடிக்கவும்.

சமையல் பாத்திரங்கள் விரதத்திற்கு எனத் தனியாக சுத்தமாக இருக்க வேண்டும். ஏற்கனவே சமைத்ததாகவோ, அசைவ உணவுகளைச் சமைத்த பாத்திரங்களாகவோ இருக்கக் கூடாது. முதல் நாள் சமைத்த உணவுகள் ஒதுக்கி வைக்கப்படல் வேண்டும்.

நோயாளிகளும், அசௌகரியமுடையோரும், பாலகர்களும், மாதவிலக்கான பெண்களும் விரதம் இருப்பதற்குத் தகுதி இல்லாதவர்கள். இவர்கள் விரதம் கைக்கொள்ள வேண்டுமாயின் தமக்காக வேறு ஒருவரை நியமித்துக் கொள்ளவேண்டும். பெண்கள் தம் கணவரை அல்லது மகனை அனுட்டிக்க வைக்கலாம். மற்றும் பெற்றோர்கள் தங்களது சிறு பிள்ளைகளுக்காக விரதம் கடைப்பிடிக்கலாம். விரத சம்ஹிதை என்னும் நூல் நோயாளிகள், மிகவும் வயதானவர்கள், குழந்தைகள் போன்றோர் விரதப் பூசைகளில் கலந்து கொண்டால் போதும் என்கிறது. பெண்கள் மாத விலக்காகி ஏழு தினங்கள் ஆன பின்பே விரதம் மேற்கொள்ளலாம்.

மேலும் குழந்தை பிறந்து நாற்பத்து எட்டு தினங்களுக்குப் பிறகே குழந்தை பெற்ற பெண்கள் விரதம் கடைப்பிடிக்கலாம். குடும்ப உறுப்பினர் எவரேனும் இறந்தால், அவர்கள் இறந்து மூன்று மாதங்களுக்குப் பிறகே குடும்பத்திலுள்ள மற்ற உறுப்பினர்கள் விரதங்களைக் கடைப்பிடிக்க வேண்டும்.

விரதங்கள் இருப்பவர்கள் ஆணாக இருந்தால் முதலில் குடும்பத்தாரின் அனுமதி பெற்றே விரதம் இருக்க வேண்டும். கன்னிப் பெண்களாயின் பெற்றோரின் அனுமதியுடனும், மணமான பெண்கள் கணவனின் தாயாரான மாமியாரின் அனுமதி பெற்ற பின்னும் விரதம் இருக்க வேண்டும். பிறருக்கு உடன்பாடு இல்லாத சூழ்நிலையில் இருக்கும் விரதங்களால் முழுப்பலனையும் பெறமுடியாது.

**விரதம் இருப்பவர்கள் பிறர் மீது கோபப்படுதல், பிறரைப் பற்றித் தவறாகப் பேசுதல், பிறர் மனம் புண்படும்படி கேலி செய்தல், பிறரிடம் பேசாதிருத்தல், அதிகமாகப் பேசுதல் ஆகிய எதுவுமே செய்யக் கூடாது.**

விரதம் என்ற பெயரை வைத்துக் கொண்டு அடிக்கடி நீராகாரம் சாப்பிடக்கூடாது. ஓய்வு தேவை என்று பகலில் படுத்துத் தூங்கக்கூடாது. நாம் விழித்திருந்து இறைவழிபாட்டில் நமது சிந்தனையைச் செலுத்த வேண்டும். விரதம் இருப்போர் தாம்பத்திய உறவில் ஈடுபடுதல், தவறான உணர்ச்சிகளை உருவாக்கும் நிகழ்ச்சிகளைப் பார்த்தல், கேட்டல் கூடாது. விரதத்தின் போது அசைவ உணவுகளை சாப்பிடுதல், பிறருக்கு சமைத்துக் கொடுப்பது கூட தவறாகும். வெற்றிலை பாக்கு மெல்லுதல், புகைப்பிடித்தல், மது அருந்துதல், சூதாடுதல் ஆகியவையும் கூடாது.

விரதம் இருப்பவர் விரத நிபந்தனைகளை முழுமனதோடு ஏற்று அதன் விதிமுறைக்கு உட்பட்டு உபவாசம் இருப்பதற்கு தயாராக வேண்டும். விரத பூசையின் போது ஒவ்வொரு முறையும் பிள்ளையாருக்குப் பூசை செய்த பின்பே விரதத்திற்கான தெய்வங்களுக்குப் பூசை செய்ய வேண்டும். விரதங்களில் குறிப்பிட்ட முறைப்படியே பூசை விதிகளையும், விதி முறைகளையும் கடைப்பிடிக்க வேண்டும். ஒவ்வொரு தெய்வங்களுக்கும் குறிப்பிட்டுள்ள மலர்களையே பயன்படுத்த வேண்டும். மாற்று மலர்கள் பயன்படுத்தக் கூடாது. இது விரதங்களுக்குப் பங்கம் ஏற்படுத்தும் என்பது முன்னோர் நம்பிக்கை.

இவை விரதம் இருக்கும் பொது விதிகளாகும். இவற்றோடு சம்பிரதாய பூர்வமாக தமது பிரதேசங்களில் நிகழும் நடைமுறைகளையும், குருமூலமாக உபதேசிக்கப் பட்டவற்றையும் சேர்த்து முழுமனதாக விரதத்தை நம்பிக்கையோடு கடைப்பிடித்தலே முறையாகும்.

விரதம் இருப்பவர்கள் ஒவ்வொருவரும் செய்ய வேண்டியவற்றை மனதில் உறுதியாகக் கொள்ளுவதையே விரதம் என்பார்கள். இவ்விதம் விரதம் கடைப் பிடிக்கின்றபோது எதனைச் செய்ய வேண்டும், எதனைச் செய்யக்கூடாது என்பதனை புராணங்கள் தெளிவு படக்கூறுகின்றன. இவற்றை நாம் முறைப்படி கைக்கொண்டால் விரதத்தின் முழுப் பயனையும் பெற்றுக்கொள்ளலாம்.

## மாதம் ஒரு மணிக்குறள்


அதிகாரம் – கடவுள் வாழ்த்து — குறள்-7

தனக்கு உவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

தனக்கு நிகர் இல்லாதவராகிய இறைவனின் திருவடிகளை இடைவிடாமல் நினைப்பவர்க்கு அல்லாமல் மற்றவர்க்கு மனத்தில் நிகழும் துன்பங்களைப் போக்கிக் கொள்ளல் இயலாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மரபின் சுவடுகள்

### வடபுலப்பார்வை

# திருக்கேதீச்சரம்

திருக்கேதீச்சரம் இலங்கையின் மேற்குக் கடற்கரைப் பகுதியிலுள்ள ஒரு சிவன் கோயிலாகும். இது மன்னார் மாவட்டத்திலுள்ள சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த துறைமுக நகரமான மாதோட்டத்தில் அமைந்துள்ளது. நாயன்மார்களின் தேவாரப் பாடல் பெற்ற இரண்டு இலங்கைத் தலங்களில் இதுவும் ஒன்றாகும்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும், சுந்தரமூர்த்தி நாயனாரும் இத்தலத்தின் மீது பதிகம் பாடியுள்ளார்கள். சூரபதுமனின் மனையாளின் பேரனார் துவட்டா. துவட்டா பிள்ளைப் பேறின்றித் திருக்கேதீச்சரத்தில் உள்ள பாலாவித் தீர்த்தத்தில் நீராடிக் கேதீச்சரத்தானை வழிபட்டமையால் திருவருள் கைகூடிப் பிள்ளைப் பேறு பெற்றார். துவட்டாவில் உருவாகியமையால் துவட்டாவெனவும் காலப் போக்கில் பெருநகரமாய் திகழ்ந்தமையால் மாதுவட்டாவெனவும் வழங்கிவந்தது. இத் தலத்திலமைந்துள்ள பாலாவித் தீர்த்தத்தில் நீராடி இறுதிக்கடன் புரிவோர்க்குப் புண்ணியம் கிட்டுமெனவும், இத் தீர்த்தத்தில் நீராடுவோருக்குப் பிரமகத்தி போன்ற பாவங்கள் தீருமென்பதும் ஐதீகம். சோழ, பாண்டிய மன்னர்கள் பல திருப்பணிகளை இத்திருக்கோயிலிற்காற்றிய பெருமையும், வன்னி, யாழ்ப்பாண அரசர்கள் நித்திய நைமித்தியங்கள் இடையறாது செய்த பெருமையுங் கொண்ட திருத்தலம் இதுவாகும்.

கி.பி ஏழாம், எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞான சம்பந்த மூர்த்தி நாயானாராலும், சுந்தரமூர்த்தி நாயனாராலும் போற்றிப் புகழ்ந்து திருப்பதிகம் பாடப் பெற்ற சிறப்புடைய தலமிதுவாகும். அருள்மிகு திருநாவுக்கரசு சுவாமிகள் அவர்களின் திருதாண்டகத்திலும், சேக்கிழார் பெருமானின் பெரியபுராணத்திலும் இத்திருத்தலம் சுட்டப்பட்டிருக்கிறது. இத்திருத்தலத்தை அண்டிய பகுதிகளில் பல சிவாலயங்களிருந்தமையை அகழ்வாய்வுத் தரவுகள் மூலமறிய முடிகின்றது. அன்றியும் இத்திருவிடம் உலகப் புகழ்பெற்ற பெருநகரமாகவும், பல்துறைத் தொழில் வல்லவர்கள் வாழ்ந்த நகரமாகவும், சிற்பம், கலை நுணுக்கம் நிறைந்த ஆற்றல் மிக்க கலைஞர்களைக் கொண்டு திகழ்ந்த அழகு நகரமாகவும் மிளிர்ந்ததாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

காலப்போக்கில் இத்திருகோயிலிற்கென ஓர் சபை உருவாக்கப்பட்டு அதன் முதலாவது தலைவராக சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரம் அவர்களும் பொதுச் செயலாளராக நீராவியடி பண்டிதர் அ.சிற்றம்பலம் அவர்களும் தெரிவு செய்யப்பட்டு உயர்ந்த பல குறிக்கோளுடன் சபை செயற்பட யாப்பு அமைக்கப்பட்டது

1.) சைவக் கொள்கைகட்கு அமைய மறுசீரமைக்கப்படுதல். ஆலயத்தையுஞ் சொத்துக்களையும் யாதொரு குறையுமின்றிப் பாதுகாத்தல்.
2.)மேற்கூறிய கொள்கை கோட்பாடு வரையறைகட்கு மாறில்லாத வகையில் செயற்படுதல். ஏனைய இறை வணக்கத் தலங்களை உருவாக்குதலும் துணைபுரிதலும்
3.) மக்கள் தங்குமடங்கள், கல்விக் கூடங்கள், சமூக நிலையங்கள் போன்ற அன்றாட வளர்ச்சிப் பணிகளை முன்னெடுத்தல் போன்ற பல அரிய செயல்களைப் புரியச் சபையைத் தயார்ப்படுத்தல் போன்ற உயரிய செயல்களை விரைந்து நடைமுறைப் படுத்த முயற்சிப்பதென உறுதி பூணப்பட்டது.

1951 பெப்ரவரி 10 இல் பொது உடைமைச் சட்டத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட சபையாகத் திகழ்ந்தது. சபையாகப் பதிவுசெய்யப்பட்டதன் பின்பும் கோயில் உரிமைகள் நாட்டுக்கோட்டை நகரப் பெரியார்களிடமே இருந்து வந்தது. காலப்போக்கில் 1951 செப்ரம்பர் 14இல் நாட்டுக்கோட்டை நகரத்தார் உளமகிழ்வுடனும் நல் இணக்கத்துடனும் திருப்பணிச் சபையாரிடம் பரிபாலனம் கைமாற்றப்பட்டது. இச்சபையின் தீர்மானப்படி காசிவாசி சிவஸ்ரீ ஈசான சிவாச்சாரியார், அச்சுவேலி சிவஸ்ரீ குமாரசாமிக் குருக்கள், சைவப்பெரியார் சு.சிவபாதசுந்தரம், கட்டடக்கலைஞர் வி.நரசிம்மன் ஆகியோரின் ஆகம விதிகளுக்கமைவான அறிவுறுத் தல்களுடன் தமிழ்நாடு திருவாளர்கள் செல்லக்கண்ணு ஸ்தபதியார், மு.வைத்தியநாத ஸ்தபதியார் ஆகியவர்களால் முறைப்படி சுவாமி, அம்பாள் கருவறைகள் கருங்கல்லாலும், சுதை, காரைகளாலும் விமான வேலைகளும் கோபுரங்களும் உலக சைவப்பெருமக்களின் பேருதவி கொண்டு அமைக்கப்பட்டது. இத்திருத்தலம் உருவாக அருள்வாக்கு நல்கிய நல்லூர் திருப்பெருந்திரு ஆறுமுகநாவர் ஐயா அவர்கள் "திருக்கேதீச்சரம் எனுந் தேன்பொந்து ஒன்று உளது. அங்கு மருந்தொன்று மறைந்துள்ளது. அதனைச் சென்றடையுங்கள்" என அருள்ஞான சம்பந்தர் சுட்டிக்காட்டியது போல அறிவுறுத்தருளினார்.

1894ஆம் ஆண்டு வண்ணைச் சைவப்பெரியார் சி.த.மு.பசுபதிச் செட்டியார், திருவாளர்கள் இ.இராமுப்பிள்ளை வைத்தியர் வை.ஆறுமுகம்பிள்ளை, தா. இராகவப்பிள்ளை ஆகியோரின் அயராத முயற்சியினால் 13 ஜூன் 1894 அன்று பழைய ஆலயம் இருந்த திருவிடமும், தீர்த்தக் கிணறும் முன் நிறுவப்பட்டிருந்த இலிங்கம் ஒன்றும் திருநந்தி சோமாஸ்கந்தர், கணேசர் ஆகிய மூர்த்திகளின் சிலைகள் கண்டெடுக்கப் பட்டன. இவற்றை நிறுவிப் பூசை அரச்சனை அபிடேகங்கள் இயற்ற வேண்டி இன்றுள்ள கோயிலிருக்குமிடத்தில் சிறு கோயிலமைத்து கண்டெடுக்கப்பட்ட மூர்த்திகளை உரிய இடங்களில் நிறுவி 28 ஜூன் 1903 ஆம் ஆண்டில் நல்வேளையில் முதலாவது குடமுழுக்கு விழா நடத்தப்பட்டுச் சிறப்பாகச் செய்யப்பட்டது.

மூலக் கருவறையில் எழுந்தருள வைக்கப் பெற்ற சிவலிங்கம் காசியிலிருந்து வருவிக்கப்பட்டதென திரு. இராமேச்சர வரலாற்றுத் தரவினாலறிய முடிகின்றது. இதனைத் தொடர்ந்து பல திருப்பணிகளாற்றப்பட்டு 1920ஆம் ஆண்டிலும் மற்றோர் திருக்குடமுழுக்கு விழாச் செய்யப்பட்டது.

புதிதாக அமைக்கப்பட்ட ஆலயம் காடடர்ந்து அழிந்த நிலைகண்டு நாட்டின் சைவப் பெருமக்களின் உள்ளத்தை விழிப்படைவும் பழைய உயர் நிலைக்குத் திருக்கோயில் வளரவும் வேண்டுமென்ற நினைப்பினாலும், உந்துதலினாலும் 1948 ஆம் ஆண்டு இத்திருவிடத்தில் ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத்தினரால் சைவப் பெரு மாநாடொன்று கூட்டப்பட்டது. இம் மாநாட்டைக் கூட்ட முன்னின்று உழைத்த பெருமக்கள் வரிசையில் வேலணையூர் வி.கே. செல்லப்பாச் சுவாமியார், திருவாசக முதல்வர் சி.சரவணமுத்து அடிகள், சட்டத்தரணி சு.சிவசுப்பிரமணியம் ஆகியோராவர்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ் இந்துக் கல்லூரி ....

**யாழ் இந்துக் கல்லூரி** யாழ்ப்பாணத்தில் புகழ்பெற்ற கல்லூரிகளில் ஒன்று. இது மாணவர்களுக்குக் கல்வி புகட்டும் ஒரு பாடசாலையாக மட்டுமன்றி ஒரு தேசிய எழுச்சியின் ஒரு சின்னமாகவும் விளங்குகிறது. 1887 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இக் கல்லூரி கடந்த சில பத்தாண்டுகளாகப் பல்கலைக்கழகங்களின் பல துறைகளுக்கும் பெருமளவில் யாழ்ப்பாண மாணவர்களை அனுப்பும் முதன்மை நிறுவனமாகவும் உள்ளது. இதனால், நாட்டில் அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பல உயர் பதவிகளையும் இக் கல்லூரியின் பழைய மாணவர்கள் வகித்து வருகிறார்கள்.



இன்று பெருமளவில் யாழ்ப்பாணத்து மக்கள் வெளிநாடுகளில் வாழ்ந்து வருவதால் இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கங்களும் பல நாடுகளில் காணப்படுகின்றன. 1960களில் பெரும்பாலான பாடசாலைகள் பொதுவுடைமை ஆக்கப்பட்டதில் இருந்து இலங்கை அரசின் பொறுப்பில் இயங்கி வரும் யாழ் இந்துக்கல்லூரியில் கல்வி கற்பதற்கு மாணவர்களிடையே கடும் போட்டி உள்ளது.

19 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து யாழ்ப்பாணத்தில் உருவான பாடசாலைகள் அனைத்தும் கிறிஸ்தவ மிஷன்களாலேயே நடத்தப்பட்டு வந்தன. இப் பாடசாலைகள் மேனாட்டுக் கல்விமுறையை அறிமுகப்படுத்தின. ஆங்கில மொழி மூலம் கல்வி புகட்டிய இப் பாடசாலைகள் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டிருந்தன.

இதனை எதிர்த்துத் தமிழ் மாணவர்களுக்கு அவர்களது பண்பாட்டுப் பின்னணியிலேயே கல்வி புகட்ட வேண்டும் என்ற முனைப்புடன் செயற்பட்டவர்களில் முதன்மையானவர் ஆறுமுக நாவலர். இவர் இதற்காகச் சைவத் தமிழ்ப் பாடசாலைகளை உருவாக்கினார். எனினும் இவை எதிர்பார்த்த அளவு வெற்றியைத் தரவில்லை. அக்காலத்தில் நிலவிய சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு மேனாட்டுக் கல்விமுறை, ஆங்கிலக் கல்வி என்பவற்றையும் தக்க வைத்துக்கொண்டே சொந்தப் பண்பாட்டையும் முன்னிலைப் படுத்த வேண்டும் என்ற நிலை உணரப்பட்டது. 1888 ஆம் ஆண்டில் ஆறுமுக நாவலரின் முயற்சியால் உருவான யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை, தனது நோக்கங்களில் ஒன்றாக இந்து சமயச் சூழலில் ஆங்கில வழிக் கல்வி புகட்டும் பாடசாலைகளை உருவாக்கும் எண்ணத்தை வெளியிட்டிருந்தது. எனினும் கிறிஸ்தவ மிஷன்களின் எதிர்ப்புக் காரணமாக இவ்வாறான பாடசாலைகளை அமைப்பது இயலாத ஒன்றாக இருந்தது.

இவ்வாறான பாடசாலை ஒன்றைத் தொடங்க வேண்டும் என்ற உள்ளூர் மக்களின் நோக்கம் எதிர்பாராத ஒரு முறையில் நிறைவேறியது. 1887 ஆம் ஆண்டில் வில்லியம் நெவின்ஸ் முத்துக்குமாரு சிதம்பரப்பிள்ளை என்னும் யாழ்ப்பாணத் தமிழ்க் கிறிஸ்தவர் ஒருவர் தேசிய நகர உயர் பாடசாலை (Native Town High School) என்னும் பெயரில் ஆங்கிலப் பாடசாலை ஒன்றைக் கிறிஸ்தவ மிஷன் தொடர்புகள் ஏதுமின்றித் தனியாகவே தொடங்கினார். இப் பாடசாலை யாழ்ப்பாணத்தின் கிறிஸ்தவப் பெரும்பான்மைப் பகுதியான பிரதான வீதிப் பகுதியிலேயே அமைக்கப்பட்டது. எனினும் இதனை நடத்துவதில் உள்ள பொருளாதாரப் பிரச்சினை காரணமாக, அக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் பெயர் பெற்ற வழக்கறிஞர்களில் ஒருவரும், பண வசதி படைத்தவருமான எஸ். நாகலிங்கம் என்பாரின் துணையைச் சிதம்பரப்பிள்ளை நாடினார். அதனை ஏற்றுக்கொண்ட நாகலிங்கம், அதன் காப்பாளராக இருந்து அதன் நடவடிக்கைகளில் மிகுந்த அக்கறை காட்டிவந்தார். 1889 ஆம் ஆண்டில் பாடசாலையை நாகலிங்கம் அவர்களிடம் முழுதாகவே ஒப்படைத்தார் சிதம்பரப்பிள்ளை. பாடசாலையின் புதிய உரிமையாளரான நாகலிங்கம், பாடசாலையை உள்ளூர் இந்து மக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த வண்ணார்பண்ணைப் பகுதிக்கு இடம் மாற்றினார். இதன் பெயரும் நாகலிங்கம் நகர உயர் பாடசாலை (Nagalingam Town High School) எனப் பெயர் மாற்றப்பட்டது.

நாகலிங்கம் இந்து சமயத்தவர். சைவ பரிபாலன சபையை உருவாக்குவதில் முன்னின்று உழைத்தவர். இதனால் அவர் தனது பாடசாலையைச் சைவ பரிபாலன சபையின் மேலாண்மையின் கீழ்க் கொண்டுவர விரும்பினார். இதற்கிணங்க 1890 ஆகஸ்ட் 19 ஆம் தேதி சபையின் தலைவர் தா. செல்லப்பாபிள்ளை என்பவரின் தலைமையில் கூடிய சபையின் செயற்குழு பாடசாலையைப் பொறுப்பேற்க முடிவெடுத்தது. படசாலையின் பெயரும் அவ்வாண்டிலேயே இந்து உயர் பாடசாலை (Hindu High School) என மாற்றப்பட்டு தற்போதுள்ள இடத்தில் ஒரு தற்காலிக கட்டடத்துக்கு இடம்பெயர்ந்தது. நாகலிங்கம் அவர்களே இதன் முதல் மேலாளராகவும் பொறுப்பேற்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# HANIYA
## EDUCATION



**Study MBBS at Yerevan State Medical University in Armenia (YSMU)**
**Recognized by (SLMC, WHO and EU)**

| | |
|---|---|
| **Qualification** | : **A/L Biology** |
| **Medium** | : **English** |
| **Duration** | : **06 years** |
| **University charges** | : **US$ 3000 + US$ 500 ( with accommodation )** |

**Study at Boston Business School in Singapore**

Study 8 months with 6 months work experience at a Fivestar hotel

The only qualification needed is your G.C.E. Ordinary Level (Contact for more details)

**Work and study at College of Tourism and Hotel Management, Cyprus**

(Earn up to 500 euro per month and many more)

Entry requirements: Minimum 03 passes in Advance level Science or Maths

Also we provide student placement services to Universities and Colleges in **Canada, Malaysia, Singapore, UK, Newzealand and India**

**Also presently conducting a MEDICAL ENGLISH class**

**Study ENGINEERING at State Engineering University of Armenia**

**Study at PSNA college of Engineering and Technology in INDIA**

**Sponsorship will be provided by our company**
**Contact us for further information**

**HANIYA EDUCATION**
NO: 22, INITIUM ROAD, DEHIWALA
HOTLINE: 0770 531 050 TEL: 0112 728 489
WEBSITE: www.haniyaeu.com

HANIYA EDUCATION

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MY DREAM VEHICLE Audi A1 1.4 TFSI




**Move over Mini – the new Audi A1 is finally here.**

It only took them 10 years to catch up with BMW's success story. You have to wonder why it took so long for the A1 to come to market. This isn't anything like as radical as the old aluminium A2. It's basically a reskinned Polo with better engines and a posher cabin.

**What's under the Audi A1's bonnet?**

There are three engines: an 85bhp 1.2 petrol turbo, 120bhp 1.4 petrol turbo and a 104bhp turbodiesel, likely to be the biggest seller. We've already been impressed by the 1.4 petrol in the Golf and installed in the much lighter A1, it delivers 0-62mph in 8.9sec. This is the version we drove today, a Mini Cooper rival and more warm- than hot hatch.

The new 2010 Audi A1 feels spritely but never quick and the optional seven-speed dual clutch 'box fitted to out car probably helped mask some of the sensation of speed. It also made a bit of worn-bearing din around town and struggled to take up the drive smoothly when we jumped on the power for a smart getaway at traffic lights.

**What about the quality? This is an Audi after all. What's the A1 like inside?**

Step out of an A4 or a TT into the A1 and you'd be hard pressed to find anything to suggest you're in a car that costs half as much. Think Boxster and 911: they've got the same quality feel – and share many components – but one costs twice as much as the other. The A1's dash and door casings are covered in soft-touch plastics and every switch feels as good as it looks.

**Premium small car? Premium price?**

The new Audi A1 range starts at just over £13k for the basic 1.2SE and rises to nearly £20k for a 1.6 TDi S-Line with navigation, LED lights and a few other trinkets. Even the most basic car comes fairly well equipped. SE spec means air conditioning, sports steering wheel, 16-inch alloys and a brace of airbags; Sport adds more heavily bolstered seats, 17s and stiffer suspension, while S-Line means leather seats and various bits of aluminium trim.

**An S-Line Audi... does that mean juddering ride?**

Judging by our experience on the horrendous roads of Berlin, it means you'll have to put up with the usual S-Line concrete-tyres ride quality, yes. The A1 in this guise really doesn't like potholes and transverse ridges or anything other than nice smooth tarmac. The upside of course is good body control on smooth roads.

**So is the new Audi A1 better than the Mini?**

It's a more rounded car, that's for sure. It's much roomier in the back seats and the cabin feels substantially more expensive. But it doesn't quite have that same cheekiness when it comes to dynamics. The steering is quick but can't quite match the Mini for immediacy. The A1 is fun to drive, to a point. It's no more entertaining than a Fiesta and certainly far less comfortable than the honest Polo on which it's based (at least in S-line spec).

If it's proper hot hatch thrills you're after, you're going to have to wait for the sporty S1, or better still, just stop putting off the inevitable and buy a Renault Clio 200. If, on the other hand, you want a fun small car that feels special to sit in and you're bored of the Mini, this is your car.

**Verdict**

It's hard to see the Audi A1 being anything other than a runaway success. There's nothing revolutionary about it but it looks good and is beautifully put together and promises Mini-beating residuals and great economy.










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












# இனிமையான சமையல் இனிதே ஆரம்பம்...

இல்லத்தரசிகளே தினமும் சமையல் உங்கள் போராட்டமா? வெப்பம், தீ, புகை, கரிபடர்ந்த பாத்திரங்களோடு தினமும் போராடுகின்றீர்களா? தினமும் உயரும் எரிவாயுவின் விலை, எரிவாயு சிலின்டர்களை எடுத்துச் சென்று நிரப்பும் வேலை என்பன சமையலை மேலும் சிரமமாக்குகின்றதா? சில வீடுகளில் விறகு அடுப்புகளுடன் போராட்டமா? இவற்றை எல்லாம் விட்டு விட்டு மின்சார அடுப்பைப் பயன்படுத்த நினைத்தால் மின்சாரப்பட்டியல் (Electricity bill) உங்களைப் பயமுறுத்துகின்றதா? இதற்கு தீர்வு இந்த நவீன விஞ்ஞான உலகில் இல்லையா? இதற்கு பதில் இருக்கிறது என்பது தான்.

### அப்படி என்றால் அது என்ன?

அது தான் **INDUCTION COOKER,** என்று அழைக்கப்படும் புதுமையான மின்காந்த அடுப்பு. **INDUCTION COOKER** (மின்காந்த அடுப்பு) என்றால் என்ன? இது ஒரு புதுமையான மின்சார அடுப்பு. மின்சார சக்தியை குறைவாகப் பயன்படுத்திச் சமையல் செய்வதற்கு அதிகமான வெப்பத்தை வழங்குகிறது.

### இது எவ்வாறு தொழிற்படுகின்றது?

இந்த மின்காந்த அடுப்பில் மூலாமிடப்பட்ட செப்புக்கம்பிச் சுருள்கள் இருக்கின்றது. (Copper coil) இந்தச் சுருள்களின் ஊடாக மாறுபடும் மின்காந்த ஓட்டம் (Ossicating Current Flow) செலுத்தப்படும் போது அந்த செப்புச்சுருளில் மின்காந்த அலைகள் பிறப்பிக்கப்படுகின்றது. இந்த மின்காந்த அலைகள் அடுப்பின் மீது வைக்கப்பட்டுள்ள இரும்பக்காந்த பாத்திரங்களின்(Ferro magnative pot) (உதாரணமாக- இரும்புப்பாத்திரம், steelபாத்திரம், எவர்சில்வர்ப்பாத்திரம்) ஊடாக செல்லும் போது வெப்பத்தை பிறப்பிக்கின்றது.($I^2R$). இங்கு நன்கு உற்று நோக்கும் போது வெப்பமானது பாத்திரத்தின் அடிப்பகுதியிலேயே பிறப்பிக்கப்படுகின்றது. அடுப்பில் அல்ல. இவ்வாறு பாத்திரத்தின் அடிப்பகுதியில் பிறப்பிக்கப்படும் வெப்பமானது அப்பாத்திரத்துடன் தொடுகையில் உள்ள உணவிற்கு கடத்தல் முறை மூலம் பரவுகின்றது. இதனால் பிறப்பிக்கப்படும் வெப்பம் முழுவதும் சமையலுக்கே உபயோகமாகின்றது. இதன் போது அடுப்போ, பாத்திரத்தின் மேற்பகுதிகளோ, சூழலோ வெப்பம் அடைவதில்லை.இதன் காரணமாக நாம் பாவிக்கும் மின்சார சக்தியில் 95**%** ஆனது சமையலுக்கே பயன்படுத்தப்படுகிறன்து.

### மின்காந்த அடுப்பின் (INDUCTION COOKER) அனுகூலங்கள்:

இந்த அடுப்பில் சமையல் செய்யும் போது மிக விரைவாக சமையல் செய்ய முடியும். இதன் மூலம் வேலைக்குச் செல்லும் பெண்களுக்கு சமையல் செய்வதற்கான நேரம் சரி பாதியாகக் (50%) குறைகின்றது.இவ் அடுப்பில் சமையல் செய்வதற்கான செலவானது மிகவும் குறைவு. சாதாரணமாக இலங்கையில் அநேகமான வீடுகளில் எரிவாயு அடுப்பே பாவிக்கப்படுகின்றது. இவ் எரிவாயு அடுப்புடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது செலவு சரி பாதியாக (50%) குறைகின்றது. இந்த அடுப்பில் இருந்து வெப்பம் சூழலுக்கு இழக்கப்படுவதில்லை.

இதனால் சமையல் செய்பவரின் உடல் வெப்பத்தினால் பாதிக்கப்படுவதில்லை. அத்துடன் குளிரூட்டப்பட்ட அறையிலும் (A/C Room) கூட இதனைப் பயன்படுத்தலாம்.

இந்த அடுப்பிலிருந்து புகை வெளிவருவதில்லை. பாத்திரங்கள் கரிபிடிப்பதில்லை.

இவ் அடுப்பு மிகவும் பாதுகாப்பானது. தீக் காயங்கள், மின் ஒழுக்கு என்பன ஏற்படாது. ஏனெனில் நாம் சமையல் செய்யும் போது அடுப்போ பாத்திரத்தின் மேற்பகுதியோ வெப்பமடைவதில்லை. இதனால் சிறுவர்கள் உள்ள இடத்திலும் பயன்படுத்தலாம்.

இந்த அடுப்பில் உள்ள தானியங்கி ஆளிகள் (Automatic buttons) பால்(Milk), சூப்(Soup), அரிசி(Rice), நீர்(Water) போன்றவற்றை நீங்கள் அருகில் இல்லாமலேயே சமையல் செய்து தரும்.

இது மிகவும் பாரம் குறைந்தது. இதனால் இதனை நாங்கள் செல்லும் இடங்களிற்கு இலகுவாக எடுத்துச்செல்லலாம். அத்தோடு பார்ப்பதற்கு மிகவும் அழகானது. இந்த அடுப்பை ஆன்(ON) செய்து விட்டு நாம் மறந்தாலோ அல்லது இரண்டு மணி நேரம் தொடர்ச்சியாக வேலை செய்தாலோ இது தானாகவே OFF ஆகிவிடும். இதன் காரணமாக இவ் அடுப்பு மிகவும் பாதுகாப்பானது.இந்த அடுப்பில் எமது சமையலுக்கு ஏற்றவாறு வெப்பத்தைக் கூட்டிக் குறைத்துப் பாவிக்கமுடியும். இந்த மின்சார அடுப்பில் இருந்து பிறப்பிக்கப்படும் மின்காந்த அலைகளால் உடலுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை. ஏனெனில் வீடுகளில் உள்ள மின்சார கம்பிகளின் ஊடாக மின்சாரம் பாயும் போது அதனைச் சூழ மின்காந்த அலைகள் உள்ளது. அது மட்டுமல்லாமல் நாம் நாளாந்தம் பாவிக்கும் மின்விசிறி, மின்மோட்டர் என்பவற்றிலும் மின்காந்த அலைகள் உண்டு. இப்போதுதான் இலங்கை போன்ற வளர்முக நாடுகளின் மக்கள் கைக்கு எட்டும் விலைக்குத் தயாரிக்கப் பட்டு இறக்குமதி செய்யப்படுகின்றது.

இந்த மின்காந்த அடுப்பானது (INDUCTION COOKER) இலங்கையிலும் பெரும் வரவேற்பைப் பெற்று விற்பனையாகி கொண்டு இருக்கின்றது. இலங்கையிலே இது பல விலைகளில் கிடைக்கும். எங்களிடம் இருக்கும் மின்காந்த அடுப்பானது இலங்கை மக்களிற்காக விசேடமாக தரம் மிக்கதாகத் தயாரிக்கப்பட்டது. இதன் காரணமாக இதன் விலை மற்றைய மின்காந்த அடுப்புகளை விடச் சற்று வித்தியாசமானது. எம்மிடமும் சாதாரணமான மின்காந்த அடுப்புக்களையும் பெற்றுக்கொள்ள முடியும்.

இந்த மின்காந்த அடுப்பை இலங்கைக்கு இறக்குமதி செய்து அறிமுகப்படுத்திய ஏகவிநியோகஸ்தர்கள் என்ற பெருமைக்குரியவர்கள் **AP KITCHEN LAPTOP™** நிறுவனத்தினர்.

**NO.368/1, Galle Road, Wellawatte, Colombo 06.**

**Tel: 011 2364696, 011 2455565**

**Branch: No.124, Palaly Road, Jaffna.**

**Tel: 021 222 4749**

**Hotline: 0772 35 95 35**

**E-mail: kitchenlaptop@sltnet.lk**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## காற்றில் அசையும் கொடிகள்

போராட்டம் எனும் பெயரில்
இன்றைய சந்ததியைத் தான் அழித்தீகள்
பரவாயில்லை போகட்டும்......
நாளைய விரியத்துடிக்கும் மொட்டுக்கள்
என்ன பாவம் செய்தன ? பிழைக்கட்டும் விட்டுவிடுங்கள் !

இனவாதத்தை தூண்டி
அனுமானத்தைத் தாண்டி ஊறும்
உதிரப் பெருக்கில் உய்யுமா உலகம்,
மனிதர்க்குள் வேண்டுமோ துவேச மனப்பாங்கு
தார்ப்பரியம் மறந்த மனிதர்கள் சிலரால்
தங்கமான மனிதர்கள் தவிடு பொடி ஆக்கப்படுகிறார்கள்
கசங்கிய மலர்கள் முனகிக் கொண்டிருக்கும் போதே உயிர்த்த
மொட்டுகள் கருகிவிடுகிறனவே காற்றில் அசையும் கொடிகளே
நீங்கள் வெறும் காகிதப் பக்கங்கள் தானா ?

உருக்குலைந்த உருவம் உணர்விழந்த உடம்பு
சறுக்கென்று வழியும் வியர்வை நெஞ்சுக்குழியில் விறுக்கென்று
வேர்விட்டுப் பிரியும். இது எங்கே வேந்தனுக்குப் புரியும் ? நரிக்கும்
வரிக்கும் நடந்த விரகில் நாகணவாய் வீணாகத்
தோட்டாக்குப் போகியம் !

அணுவாய் அள்ளூண்ட மண்ணைத் தன்
விரல்களால் கிள்ளி எடுத்து மெய்பூசி
புலன்களால் பூரித்து; விம்மிப் புடைத்த தரையில்
எம்பிப் புதைக்கும் ஏரும் ஓட்டி நடக்கும் காலும் என
புறப்படும் புற்றீசல் போல் அவனுக்கு மட்டும்
எங்கிருந்து வருகிறதோ அவ்வளவு தன்னம்பிக்கை ?

வாழ்வு கொடுத்த மண்ணில் விழ்ந்து மடிதல் நேரிலும்
வேளாண்மை விதைக்காமல் விழமாட்டேன் என்று
துயர்துடைத்த தூய மண்ணை மலர்தூவி பசியப் பட்டுடுத்த
நினைக்கும் அந்த வெண்மை விவசாயி காண்! தமிழனவன்
கோவணத்தைக் கூட
முள்வேலி கிழித்திருக்கிறதே,காற்றில் அசையும் கொடிகளே
நீங்கள் வெறும் கைக்குட்டைகள் தானா?

அந்த இருட்டு மிக மோசமானது
"வட்ட வட்ட வெண்ணிலாவும் வானத்து அம்புலியாம்
கிட்ட வந்து உனைப்பிடிக்க என் செல்லக்
கிளிக்கிறக்கை ரண்டு பூட்டிவைப்பேன்"
என்று நிலாச்சோறு ஊட்டிக்கொண்டிருந்தாள் என் அன்னை
குழைத்து வைத்த ஒருபிடி சோறு
தொண்டைக் குழிக்குள் புரை எடுக்கவே
துடித்துக் கொண்டு நீர் மொண்டு வர
சமையலறைக்குள் நுழைந்தாய்

அம்மா எனக்கு விக்கல் நின்று விட்டது
இன்னமும் நீ வரவில்லையே?
என் மழலைக்கு இல்லா விட்டாலும்
அழுகைக்கு ஓடி வந்து இறுக்க அணைப்பாயே
இன்னமும் நீ வரவில்லையே !
எனக்கு அன்னம் ஊட்டிய கை ஈரம் காயமுன்னே
உன் உயிருக்கு கன்னமிட்டதே பீரங்கி ஏனம்மா?
இறக்கைதனைப் பூட்டிவிட்டு பறக்க
கற்றுத்தராமலேயே போய்விட்டாயே,
கற்றிருந்தால் உன்னோடே வந்திருப்பேன
இனி என் சிறகுகள் சிராய்க்கப்படுமே ?

நீ குங்குமம் வைத்து நான் பார்த்ததில்லை
இருப்பினும் குறையில்லாமல் என்னை வளர்த்தாயே
இனி கம்பி வேலிக்குள் கனவுகளை தூக்கிப் போட்டுவிட்டு
ஏக்கங்களுடன் ஏமார வேண்டி வருமே.
இன்று விடுதலை நாளை விடுதலை என....
காற்றில் அசையும் கொடிகளேநீங்கள் வெறும் கைவிணைப்
பொம்மைகள் தானா ?



மண்ணின் சுகம் விசாரிக்கும் விழுதுகள்
தென்றல்கவி பு.நிசாந்

## வாழ்ந்து பார்க்கலாமா?

வாழ்க்கை என்பது என்ன! அதில் எப்படி வாழ வேண்டும்! மிகவும் சந்தோஷமாக வாழ வேண்டிய, அமைதியாக வாழ வேண்டிய, நிறைவுடன் வாழ வேண்டிய வாழ்வை நாம் எப்படி வாழ்கிறோம், வாழ்க்கை என்பது கோழைகளுக்கும், சோம்பேறிகளுக்கும் சொந்தமான தல்ல, முதலில் உங்களைச் சுறுசுறுப்பானவர்களாக மாற்றிக் கொள்ளுங்கள். சுறுசுறுப்பு இருந்தால்தான் செய்யும் வேலையில் ஆர்வம் ஏற்படும். சோம்பலும், கோழைத்தனமும் கலந்த மனிதனால் நிஜ உலகில் எதுவும் சாத்தியப்படாது.

நல்ல நண்பர்களை அமைத்துக்கொள்ள வேண்டும், நல்ல நண்பர்களோடு சேர்ந்து யாருக்கும் தீங்கிழைக்காமல். கூட்டாக வாழும் வாழ்க்கை எல்லோருக்கும் அமையாது அப்படி அமைத்துக் கொண்டவர்கள் பாக்கியசாலிகளே. நம்மிடமுள்ள எந்தப் பழக்கம் மற்றவர்களை வெறுப்படையச் செய்கிறதோ அதை முடிந்தவரையிலும் திருத்திக்கொள்ள வேண்டும்.

நாம் பார்க்கும் அனைத்திலிருந்தும் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும், சின்னச் சின்ன விஷயங்கள் கூடப் பெரிய பாடங்களைக் கற்றுக் கொடுக்கும். பறவைகள், பட்டாம் பூச்சி, தாவரங்கள் என்று அனைத்தும் ஏதோ ஒன்றை நமக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறது. வாழ்க்கையைக் கற்றுக்கொள்ள யாரைத்தேடியும் போக வேண்டியதில்லை, கண்ணைத்திறந்து வைத்திருந்தாலே போதும்.

நாம் கூர்ந்து கவனித்தால் எது வேண்டுமானாலும் ஆசானாக இருந்து வாழ்க்கை முறையினைச் சொல்லிக்கொடுக்கும். மிருகங்களிடமிருந்து கூட அன்பை, நன்றியைக் கற்றுக் கொள்ள முடியும். கற்றுக்கொண்ட விஷயங்களில் நன்மை எது, தீமை எது என்று ஆராய்ந்து நன்மையானதைத் தேர்ந்தெடுப்பவன் வாழக்கற்றுக் கொள்கின்றான்.

சுறுசுறுப்பும், மகிழ்ச்சியும் இருந்தால் மட்டும் போதாது, அதனைத்தக்க வைத்துக்கொள்ள வேண்டுமானால் நல்லவனாக இருக்க வேண்டும். மகிழ்ச்சி வேண்டும் என்பதற்காகப் பிறரைத் துன்பப்படுத்தி மகிழக்கூடாது. முகத்திற்கு நேராக புகழ்ந்து பின்னால் தூற்றித் திரிந்தால் கெடுவது உங்கள் மகிழ்ச்சிதான். சுயநிலத்திற்காகப் பிறருக்கு தீங்கிழைக்காமல் வாழ்ந்தால். எதற்கும் அஞ்ச வேண்டிய தேவையில்லை, யாரையும் பார்த்துத் தலை குனிந்து நிற்க வேண்டிய தில்லை.

உண்மை என்பதைப் பற்றி பிடித்துக்கொள்ள வேண்டும். உண்மையின் வலிமை மிகப்பெரியது. வாழ்க்கை முறைக்கு உண்மை பேசுவது அல்லது பிறருக்கு உண்மையாக நடப்பது மிகவும் இன்றியமையாததாகும். நீங்கள் உயரமோ, குள்ளமோ, கறுப்போ, சிவப்போ அதுவெல்லாம் முக்கியம் கிடையாது. உங்களை நம்பலாம், நம்பி எதை கொடுத்தாலும் உண்மையாக செய்து முடிப்பீர்கள் என்ற நம்பிக்கை ஏற்படும் வகையில் நடந்து கொள்வதுதான் உண்மையான அழகு அதற்கு உங்களில்உண்மை இருக்க வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக இறை நம்பிக்கை இருக்க வேண்டும். இறைவனின் பார்வையில் நல்லவனாக இருக்க வேண்டும். உங்களுக்கு இறை நம்பிக்கை இல்லையென்றாலும் உண்மையைக் கைவிடாதீர்கள். ஏனெனில் உண்மைதான் கடவுள். அதை உறுதியுடன் பற்றிக்கொண்டாலே போதும் வாழ்க்கையில் விளக்கமுடியாத அனுபவங்களையெல்லாம் கண்டு கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழந்தமிழரும் கூத்துக்கலையும்



தமிழினம் பிறப்பு முதல் இறப்பு வரை இசையோடு ஒன்றிய வாழ்வைக் கொண்டிருந்த பெருமைக்குரியதாகும்.

**பண்டைத் தமிழ் நூல்களான**

• அகத்தியம், • செயிற்றியம், • சயந்தம், • குணநூல்

போன்ற நூல்களில் தமிழ்க் கூத்து வகைகள் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. இசையும், கூத்தும், பிரிக்க இயலாத வகையில் பின்னிப் பிணைந்தே மக்களை மகிழ்வித்து வருவதாகக் கூறலாம். இசை, ஆட்டம், தாளம் ஆகிய மூன்றும் சேர்ந்ததுவே "கூத்து" எனலாம். பொதுவாகச் சிலப்பதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு கூத்தினை, வேத்தியல் (மன்னர்களுக்காக ஆடுவது), பொதுவியல் (பொது மக்களுக்காக ஆடுவது) என இருவகைப்படுத்தலாம். சிலப்பதிகாரத்தின் அரங்கேற்றுக்காதை "அபிநயம்" பற்றி விளக்குகிறது. பெண்கள் ஐந்து வயதிலிருந்து பன்னிரெண்டு வயதுவரை (7 ஆண்டுகள்) பரதநாட்டியம் கற்றனர். பாடலின் பொருளை முகபாவம், அங்க அசைவுகள் போன்றவற்றின் வாயிலாக விளக்குவதே நடனம் / கூத்து என வரலாற்று ஆய்வாளரான என்.சுப்பிரமணியன் விளக்கம் தருகிறார்.

**கூத்தன் வகைகளும் கூத்தர்களும்:**

நடனமாடும் ஆண்மகன் • கூத்தன் • ஆடுமகன், • ஆடுகளமகன் எனப்பட்டான்.

நடமாடும் பெண்மகள் • நடனமகள், • விறலி, • கூத்தி, • ஆடுமகள், • ஆடுகளமகள் எனப்பட்டாள்.

**இவர்கள் நடனமாடும் அரங்கம் "ஆடுகளம்" எனப்பட்டது.**

• வீரம், • அச்சம், • இழிவு, • வியப்பு, • இன்பம், • துன்பம், • நகை, • நடுவுநிலை, • வெகுளி

என்னும் ஒன்பது சுவைகள் நடனத்துக்குரியவையாகக் கருதப்பட்டன. "சந்திக்கூத்து" எனப்படும் கூத்தை ஆடியவர்கள் "கண்ணுளர்" எனப்பட்டனர்.

• பரதம், • பரதசேனாபதியம், • குணநூல், • முறுவல், • சயந்தம், • கூத்தநூல், • இந்திரகாளியம், • செயிற்றியம், • இசை நுணுக்கம், • அகத்தியம், • மதிவாணனார் நாடகத்தமிழ், • பஞ்சமரபு போன்றவற்றைச் சங்க காலத்தில் இருந்த கூத்து நூல்களாக வகைப்படுத்தலாம்.

**கூத்துக்கலை பற்றிய ஆதாரங்கள்:**

கல்வெட்டு ஆய்வாளரான என்.இராமசந்திரன் 1962ல் அங்கல்லூர் (நல்லமலை) என்ற இடத்தில் கண்டறிந்த கல்வெட்டானது தொல்தமிழரின் நடனம் பற்றி விளக்குகிறது. இதன் காலம் கி.பி. 3ம் நூற்றாண்டு என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதன் நடனக் குறியீடுகள் "சமணத்துறவி" ஒருவரால் பொறிக்கப்பட்டிருக்கலாம் என்று கருதப்படுகிறது. கி.பி.7ம் நூற்றாண்டில் வரையப்பெற்ற "சித்தன்ன வாசல் ஓவியங்கள்" வாயிலாக பல்லவர் நடனக்கலையின் சிறப்பம்சத்தினை உணரலாம். இங்குள்ள பரதநாட்டிய அபிநயங்களில் "ஹஸ்த அபிநயச் சிற்பம்" குறிப்பிடத் தக்கதாகும். இராஜராஜசோழன் 108 பரதநாட்டிய கரணங்களை, பிரகதீஸ்வரர் ஆலயத்தின் உச்சியில் வரையுமாறு செய்ததில் இருந்து அம் மன்னனுக்கு நாட்டியத்தின் மீது கொண்ட ஈடுபாடு விளங்கும்.

**கூத்துக்கலையும் தேவதாசிகளும்:**

இந்தியாவில் கோயில்களில் தெய்வப்பணி புரிவதற்காக ஆண்டவர்க்கு அணங்குகளை அர்ப்பணிக்கும் வழக்கம் எப்போது தொடங்கியது என்பதை வரையறுத்துக்கூற இயலாது. ஆனால், தமிழகத்தில் தேவதாசி முறையைப் புகுத்தியவர்கள் "சோழர்கள்" என்பர்.

"பொட்டுக்கட்டுதல்" என்னும் வழக்கத்தின் வாயிலாக கோயிலுக்கு பெண்கள் (தேவரடியார்கள்) காணிக்கை ஆக்கப்பட்டனர். பெரும்பாலும் 14 வயதுக்கு உட்பட்ட பெண் குழந்தைகளுக்கு பொட்டுக்கட்டுதல் என்னும் சடங்கு ஏறக்குறைய திருமண நிகழ்ச்சி போலவே ஏற்பாடு செய்யப்பட்டு, கோயிலில் சேர்க்கப்பட்டனர்.

"பொட்டுத்தாலி" என்னும் ஒருவகை மங்கலநாண் அணிவித்து பெண்கள் கோயிலில் பணிசெய்ய அமர்த்தப்பட்டனர். பொட்டுத்தாலியை கோயிலின் இறைவனுக்குப் பதிலாகக் கோயில் அந்தணர் / பூசாரியே நேர்ந்து விடப்பட்ட பெண்ணுக்குக் கட்டினார். இச் சடங்குக்குப்பின் குறிப்பிட்ட பெண் கோயிலுக்குச் சொந்தமானவளாகக் கருதப்பட்டாள். இல்வாழ்க்கையில் ஈடுபட அவர்களுக்கு அனுமதி இல்லை.

கோயிலுக்குப் பொட்டுக்கட்டிவிடும் இவ்வழக்கம் சிரியா நாட்டு "ஹேலியோ போலி" மற்றும் ஆர்மீனியா, மேற்கு சிற்றாசியாவில் உள்ள லிடியா மற்றும் கிரேக்க நாட்டின் கோசின்னித் (Cuzinith) என்ற நகரிலும் நிலை கொண்டிருந்தது. மொசப்பட்டோமியாவிலும் இதே முறை பின்பற்றப்பட்டு வந்தது. "மர்துக்" மற்றும் போன்ற கடவுளர்களுக்கு அங்குள்ள மகளிர் மணம் செய்து வைக்கப்பட்டனர். (மேலும் பார்க்க - http://www.kamat.com/kalranga/women/devadasi.htm)

கோயிலில் நடனமாடுதல் மட்டுமல்லாது, கோயிலில் திருவலகிடுதல், திருமெழுகிடுதல், படையல் அரிசியைத் தூய்மைப்படுத்துதல், திருப்பதிகம் பாடல் போன்ற பணிகளையும் தேவரடியார் செய்துவந்தனர். பல்லவர்கள் காலத்தில் தேவதாசிகள் விற்கிருதை, பிரத்தியை, பக்தை, கிருதை, அலங்கரி, ருத்திரகணிகை, கோபிகை என ஏழு வகைப் பிரிவினராக இருந்தனர். தேவரடியார் / தேவதாசிகள் திருநீறுத்தட்டும், பத்தளிகை போன்றவற்றை விழாக்காலங்களில் எடுத்துச்செல்வர். அம்மன் மற்றும் சுவாமிக்கு இவர்கள் "கவரி" வீசவும் செய்ததால் "கவரிப்பிணா" என்றும் அழைக்கப்பட்டனர். சிவன் கோயிலில் பணி செய்து வந்தவர்கள் ரிபத்தளியலார் என்றும், • வைணவக் கோயில்களில் இருந்தவர்கள் ஸ்ரீவைஷ்ணவ மாணிக்கம் எனவும் அழைக்கப்பட்டதாக கல்வெட்டுகள் தெரிவிக்கின்றன. முதலாம் இராசராசன், தஞ்சைப் பெரிய கோயிலின் இறை பணிக்காகவும், இசை நடனத்தை வளர்க்கவும் ஆடல், பாடல்களில் வல்ல 400 பெண்களை வரவழைத்தான். அவர்கள் தளிச்சேரிப் பெண்கள் (தளி - கோயில்) எனப்பட்டனர். அவர்கள் தங்கியிருந்த இடம் "தளிச்சேரி" எனப்பட்டது.

முதலாம் இராசராசனால் குடியமர்த்தப்பட்ட பெண்கள் அனைவரும் சோழர் பழந் தலைநகரமான "பழையாறையின்" வடதளி, தென்தளி எனப்படும் சிவாலயங்களைச் சேர்ந்தவர்களாவர். முதலாம் இராசேந்திரன் கங்கை கொண்ட சோழபுரக்கோயிலைச் சேர்ந்த 24 தேவதாசிகளுக்கு நிலமும், பொன்னும் கொடையாக அளிக்கப்பட்ட செய்தியை "குளம்பந்தல் கல்வெட்டு" வாயிலாக அறியலாம்.

• தலைக்கோலி, • காவிதிகானை பேரான், • காவிதிதாங்கி போன்ற பட்டங்கள் தேவரடியார்களுக்கு வழங்கப்பட்டன. "தலைக்கோல்" என்பது ஏழுசாண் நீளத்தில் மூங்கிலால் ஆனதாகும். கணுக்கள் தோறும் மணிகள் பதிக்கப்பட்டு இடையிடையே "பொன்கட்டு" இடப்பட்டிருந்தது. இந்திர விழாவின்போது தலைக்கோலுக்குப் பூசை நடத்தப்பட்டு ஆடல் மகளிருக்கு இக்கோல் வழங்கப்பட்டது. இக்கோலைப் பெற்றவள், "தலைக்கோலி" எனவும், நட்டுவன் "தலைக்கோலாசான்" எனவும் பாடல் பாடியோர் "தோரியமடந்தை" என்றும் அறியப்பட்டனர். தேவரடியார்களில் சிலர் அறப்பணியும் மேற்கொண்டனர் என்பதற்கு ஆதாரமாக, சடையவர்மன் வீரபாண்டியன் (13ம் நூற்றாண்டு) ஆட்சி காலத்தில் தேவரடியார்களில் ஒருத்தியான துக்கையாண்டி மகள் நாச்சி குடுமியான்மலை தடைவரையின் தெற்குப் பக்கத்தில் உள்ள "சவுந்திரநாயகி அம்மன்" கோயிலைக் கட்டியிருக்கிறாள் என அறியப்படுகிறது.

கோயில் கலைப்பணிக்காக நியமிக்கப்பட்ட தேவரடியார்கள் அமைப்பு காலப்போக்கில் மாறுதல் அடைந்தது. அம்முறை பின் ஒழிக்கப்பட்டது. தமிழக் கூத்துக்கலையிலிருந்து பிரிந்து உருவான பரதம் இன்றளவிலும் ஓரளவு சிறப்புப் பெற்றிருப்பினும் பிற கூத்து நடனங்கள் ஆதரவின்றி அழியக்கூடிய தருவாயில் உள்ளன என்பது மறுக்க இயலாத உண்மையாகும். நலிந்து வரும் கூத்துக் கலைஞர்களுக்கு ஆதரவளித்து, கூத்துக்கலையைக் காப்பதன் வாயிலாகவே தமிழர் பண்பாட்டை உலக அரங்கில் மிளிரச்செய்ய இயலும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# Creative Education

*We create knowledge*

| | |
|---|---|
| **Advanced Level(G.C.E) 2012/2013 Science, Maths & Commerce** | Physics, Chemistry, Biology, Combined maths, Accounts, Eco, BS, Commerce & Statistics |
| **London AS & A2 Classes (Edexcel & Cambridge)** | Physics, Maths, Chemistry, Biology, BS, Economics, ICT, Accounts, Further Maths |
| **Edexcel & Cambridge IGCSE Classes(Grade 8 - 10)** | Physics, Maths, Chemistry, Biology, H.Bio, Acc, Eco, BS, Commerce, French, English, English.Lit & ICT |
| **Grade 4 - 7(All Subjects)** | Maths, Science, English, History, English.Lit, Health Science |
| **Language Classes** | English, English Literature Sinhala, French |

- Experienced & Graduate Teachers,
- Limited number of students,
- Individual Attention
- Monthly Exams

## Creative Education

No: 31 Lilly Avenue. Colombo - 6, T.P:- 077 44 787 88,
Email:- cre.education@gmail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டக்களப்பில் 70 வருடங்களுக்கு மேலாக
வாடிக்கையாளர்களின் மனதை வென்ற TIP TOP குழும நிறுவனத்தின்
FOURAMS
CITY CENTRE
CITY CENTRE
உணவுப்பொருட்கள்
அலங்காரப்பொருட்கள்
காகிதாதிகள் பொருட்கள்
மளிகைப் பொருட்கள்
குழந்தைகளுக்கான
பராமரிப்பு பொருட்கள்
விளையாட்டு பொருட்கள்
மரக்கறி என்பவற்றை
ஒரே கூரையின் கீழ்
பெற்றிடுங்கள்
Discount
Delivery Service
Gifts
* Condition Apply
இல.16, மத்திய வீதி,
மட்டக்களப்பு.
தொ.பே : (+94) 065-2222722
(வாகனத் தரிப்பிட வசதியுடன் முற்றிலும் குளிரூட்டப்பட்டது)
No.16,Central Road, Batticaloa Tel : (+94) 065-2222722
Fax : (+94) 065-2225237 E.mail : tocitycenter@gmail.com

## பேராசிரியர்

# கார்த்திகேசு சிவத்தம்பி



தமிழ் கூறும் நல்லுலகின் இலக்கிய விமர்சகரும் திறனாய்வாளரும் சமூக சிந்தனையாளருமான பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்கள் பண்டிதரும் சைவப்புலவருமான த.பி. கார்த்திகேசு வள்ளியம்மை தம்பதியினருக்குப் புதல்வராகப் பிறந்தார். இவர் ஆரம்பக்கல்வியை யாழ்ப்பாணம் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் கற்ற இவர் தனது இடை நிலைக்கல்வியை கொழும்பு ஸாகிராக் கல்லூரியில் கற்றதுடன் அக்கல்லூரியிலேயே ஆரம்பத்தில் ஆசிரியராகவும் பணி புரிந்தார். ரூபாவதி நடராஜாவை திருமணம் செய்து கொண்ட இவர் மூன்று பிள்ளைகளின் தந்தையாவார், இலக்கிய வாதியாகவும், சமூக ஆர்வலராகவும், தமிழ் பேசும் சமூகங்கள் வாழ்கின்ற இடங்களில் எல்லாம் நன்கு அறியப்பட்டவராக விளங்கியவர்.

பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் இளமாணிப் பட்டத்தையும் பின்னர் அதே பல்கலைகழகத்தில் பயின்று முதுமாணிப்பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். ஐக்கிய இராச்சியத்திலுள்ள பேர்மிங் காம் பல்கலைக்கழகத்தில் ஆய்வுப்படிப்பை மேற்கொண்டு முனைவர் பட்டத்தையும் பெற்றுக் கொண்டார். 1978ம் ஆண்டு தொடக்கம் சுமார் 17 ஆண்டுகள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பணியாற்றினார். பின்னர் மட்டக்களப்பில் கிழக்குப் பலகலைக்கழகத்தின் அழைப்பின் பேரில் இரண்டு ஆண்டுகள் அங்கு பணியாற்றினார். தொடர்ந்து தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வருகைப் பேராசிரியராகவும் ஓராண்டுவரை பணிபுரிந்தார். இந்தியா, இங்கிலாந்து, ஜேர்மனி போன்ற பல்வேறு நாடுகளிலுமுள்ள பல்கலைக்கழகங்களிலும் வருகைப் பேராசிரியராகவும் இருந்துள்ளார். கலைப்பங்களிப்பாக பல்கலைக்கழக காலத்தில் மேடை நாடகங்களில் நடித்ததோடு, பின்னர் வானொலி நாடகங்களிலும் நடித்துப் புகழ் பெற்றவர். இலங்கையர்கோன் எழுதிய "விதானையார் வீட்டில்" தொடர் நாடகத்தில் இவரே முக்கிய பாத்திரத்தில் நடித்தார்.

### ஆக்கங்கள்

பல்வேறு துறைகளிலும், ஆய்வுக்கட்டுரைகள், நூல்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட ஆக்கங்களை ஆங்கிலம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் உருவாக்கியவர். இவர் முதன்மையாகப் பயின்ற துறைகளுக்கு புறம்பாகவும் பல துறைகளில் ஆர்வம் கொண்டிருந்தார். இவரது ஆர்வம் தமிழ், சமயம், சமூகவியல், மானிடவியல், அரசியல், வரலாறு, கவின்கலை எனப் பல்துறைகளையும் தழுவியிருந்தது. மார்க்ஸிஸ் சிந்தனை போக்குடைய அவர் யாழ்ப்பாண சமுதாயத்தின் பல்வேறு குறைபாடுகளையும் கடுமையாக விமர்சித்தார்.

### இவர் பற்றிய படைப்புக்கள்


தமிழக அரசின் திரு வி.க. விருது அளிக்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்ட ஈழத் தமிழ் அறிஞர் பேராசிரியர் கா.சிவத்தம்பியின் ஆளுமை ஊற்றுக்களை பதிவு செய்யும் வகையில் "கரவையூற்று" எனும் தலைப்பில் யாழ்ப்பாணம் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளை நூல் ஒன்றை வெளியிட்டுள்ளது.

### இவருடைய நூல்கள்

இலங்கைத்தமிழர் யார் எவர்?, யாழ்ப்பாணத்தின் புலமைத்துவ மரபு, தமிழில் இலக்கிய வரலாறு, இலக்கணமும் சமூக உறவுகளும், மதமும் கவிதையும், தமிழ் கற்பித்தலின் உன்னதம், சுவாமி விபுலானந்தரின் சிந்தனை நெறிகள், திராவிட இயக்கக்கருத்து நிலையின் இன்றைய பொருத்தப்பாடு, தமிழ் பண்பாட்டில் சினிமா (மக்கள் வெளியீடு), மற்றும் பண்டைத் தமிழ்ச்சமூகம் வரலாற்றுப் புரிதலை நோக்கி போன்ற பல்வேறான நூல்களையும் ஆய்வு கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.இப்படித் தமிழ்ப் பணியாற்றி வந்த பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் தமிழ் கூறும் நல்லுலகிலிருந்து தனது 79வது வயதில் இயற்கை எய்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈரம்



## உலக மனிதநேய தின

# சிறப்பு நேர்காணல்....

திரு.திருமதி துரைசிங்கம் செல்வநாயகி தம்பதிகளுக்கு 1953ல் மாத்தளையில் பிறந்த செல்வி கனகரஞ்சிதம் தனது கல்வியை மாத்தளை BMS பெண்கள் பாடசாலையில் 1974 வரை கல்விபயின்று 1980ல் பேராதனை விவசாயத் திணைக்களகத்தில் வேலை செய்யும் போதே பேராதனை பல்கலைக்கழகத்தில் கலைப்பிரிவில் வெளிவாரிப் பட்ட படிப்பை மேற்கொண்டு 1987ல். B.A.பட்டதாரியானார்.

நாட்டில் ஏற்பட்ட யுத்தசூழலால் 1989ல் வெளிநாடு சென்ற இவர் ஒருவருடம் முடிவதற்குள் மீண்டும் 1990ல் இலங்கை திரும்பினார். இலங்கைக்கு வந்த இவர் அதே வருடத்தில் கொழும்பு, வெள்ளவத்தை இராமகிருஸ்ண மிசனுடனும், சாரதா மிசனுடனும் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டார். இதன் மூலம் அதிகளவிலான போதனைகளுடன், மனித வாழக்கை வரலாறுகளைக் கற்றுத் தேர்ச்சி கண்டார். இவ்விடயங்களில் கற்றுக் கொண்ட பாடங்களின் மூலம் சமூக சேவை பற்றிய ஆர்வம் மேலிட்டதால் தனக்கென வாழாமல் பிறருக்காக வாழவேண்டும் என்ற எண்ணம் மனதில் வேரூன்றியது. இந்த எண்ணம் தோன்றக் காரணமாக இருந்தவர்கள் எனக்கு குருவாக இருந்தவர்களான சுவாமி ஆத்மகணானந்த ஜீ அவர்களும் சுவாமி ராஜேஸ்வரானந்த ஜீ அவர்களும் ஆவார்கள்.

இப்படியான காலகட்டத்தில் இந்திய நாட்டிற்குப் பயணம் மேற்கொண்ட இவர் வயோதிபர்களுக்கு அங்குள்ள ஆச்சிரமங்களின் சேவைகளைக் கண்ணுற்ற இவருக்கு மனதிலும் அப்படியானவொரு எண்ணம் தோன்றியது. நாமும் ஏன் இப்படியான சேவையை நமது நாட்டிலும் செய்யக் கூடாது என தனது மனதில் தோன்றிய அவ்வெண்ணத்தை இங்கு 2000ம் ஆண்டு முதலாவது வயோதிபர் இல்லத்தைக் தெஹிவளையில் ஆரம்பித்தார். ஆரம்பத்தில் இது இவருக்கு முன் அனுபவம் இல்லாததால் கொஞ்சம் சிரமமாகவும், கடினமாகவும் இருந்ததாகவும், ஆனால் தன்மனதில் இந்தச் சேவையைச் செய்ய வேண்டும் என்ற மன உறுதியுடன் இராமகிருஸ்ணர் போதனையில் உள்ளபடி " எதுவும் நான் செய்யவில்லை இறைவனே செய்கின்றான்" என்ற கடவுளின் நம்பிக்கையுடன் செயலாற்றியதால் தனக்கு அதிகமான வயோதிபர்கள் வந்து சேர்ந்ததாகவும் இதனால் இச்சேவையைச் சிறப்புடன் செய்யக் கூடியதாக இருந்ததாகவும் கூறினார். இதற்குத் தனது சகோதரர்களும் உதவி புரிந்ததாகவும் கூறினார். வேறுயாருடைய உதவியும் கிடைக்கவில்லை. இருப்பினும் ஆரம்பத்தில் 16 வயோதிபர்களும் பிறகு எனது சேவையை அறிந்து அதிகமான வயோதிபர்கள் வந்து சேர்ந்தார்கள். இது எனக்கு மிக மகிழ்ச்சி அளித்ததாகவும் கூறினார்.

அடுத்து தான் 2002ம் ஆண்டு வெள்ளவத்தை பெரேரா ஒழுங்கையில் ஒரு முதியோர் இல்லத்தை ஆரம்பித்ததாகவும், இவ்வில்லத்திற்கு14 வயோதிபர்கள் வந்து சேர்ந்ததாகவும் கூறினார். 2004ம் ஆண்டு வலது குறைந்த பிள்ளைகளுக்காக ஒரு இல்லத்தை ஆரம்பித்ததாகவும் ஆனால் தான் செய்த விளம்பரத்தில் சிறு தவறு ஏற்பட்டதால் சிறுவர்களும், பெரியவர்களும் வந்து சேர்ந்ததாகவும் கூறினார். அப்படி வந்து சேர்ந்த இரண்டு சிறுவர்களில் ஒரு சிறுவன் கால் ஊனமுற்றவன். அந்தச் சிறுவன் இங்கு இருந்த காலத்தில் மருத்துவம் செய்து அதன் மூலம் அந்தச் சிறுவன் நடக்கவும் ஆரம்பித்தான். சிலகாலத்திற்குப் பிறகு அந்த இல்லத்தை மூடவேண்டிய தேவை ஏற்பட்டது.அதன் பிறகு 2008ம் ஆண்டு வெள்ள வத்தை கார்மஸ் ஒழுங்கையில் ஆரம்பித்த முதியோர் இல்லத்தில் 13 பேர் இருந்தார்கள். பெரேரா ஒழுங்கையில் உள்ளவர்களில் சிலர் மரக்கறியும் சிலர் மாமிச உணவு சாப்பிடுபவர்களாகவும், அதேபோல் காமர்ஸ் ஒழுங்கையில் உள்ளவர்களும் இருந்தபடியால். ஒரு இல்லத்தை மரக்கறி சாப்பிடுபவர்களுக்காகவும் மற்றதை மாமிசம் சாப்பிடுபவர்களுக்காகவும் அமைத்து நடத்த வேண்டிய தேவை ஏற்பட்டது.

2004ம் ஆண்டு மனித உரிமைப் பாட நெறியைக் கற்ற தாகவும் கூறினார். அத்துடன் சமூக சேவைத் திணைக் களக் கருத்தரங்குகளுக்குச் சென்று சேவை செய்யக்கூடிய கற்கைகளைக் கற்றதாகவும் அதனால் சமூக சேவை ஊழியர்கள் எமது இல்லங்களுக்கு வந்து பார்வையிட்டு எமது இல்லங்களைச் சிறந்த இல்லங்களாகத் தெரிவு செய்தனர் என்பதுவும் தனக்குப் பெருமையளித்ததாகவும் சொன்னார். இந்த இல்லங்களுக்குத் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவக மாணவர்களும் இங்கு வந்து பயிற்சயினையும் ஆய்வினையும் செய்ய 2005ம் ஆண்டு முதல் 2010ம் ஆண்டு வரை மேற்கொண்டதாகவும் கூறினார். தேசிய முதியோர் செயலகத்தில் நடைபெறும் எல்லாக் கருத்தரங்குகளுக்கும் தனக்கு அழைப்பு வருவதாகவும், அங்கு சென்று கருத்தரங்குகளில் கலந்து கொள்வதினால் முதியோர் பற்றிய அறிவைத் தெரிந்து கொள்வதோடு, புத்தகங்களிருந்து வாசித்தும் தானாகவே பல விடயங்களைக் கற்றுக் கொண்டதாகவும், மருத்துவம் பற்றிய அறிவை மிசனால் நடத்தப்படும் முகாம்கள் மூலமாகவும், புத்தகங்கள் மூலமாகவும் அறிந்து சேவை செய்வதாகவும, தன்னால் முதியவர்களுக்குச் செய்யும் சேவைகளினால் தனக்கு ஒரு பூரண மனத்திருப்தி ஏற்படுவதாகவும் கூறினார்.

ஒரு தாய், ஒரு நாள் தன்னிடம் வந்து அம்மா ஒரு தாய்க்குப் பல பிள்ளைகள் இருப்பார்கள் ஆனால் இங்கு பல தாய்மாருக்கு ஒரு தாயாய் நீங்கள் இருக்கின்றீர்கள் என்று கூறினார். ஏனென்றால் எல்லோரும் என்னை அம்மா என்று தான் அழைப்பார்கள். எனது உணர்வுகளையும், அவர்களது அன்பையும் வாயால் சொல்லமுடியாது. எவ்வ ளவுதான் நாங்கள் சேவை செய்தாலும், அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்தாலும் அவர்களுக்குத் தங்கள் மனதில் பிள்ளைகளைப் பிரிந்து வந்த மனக்கவலை இருக்கத்தான் செய்கின்றது. இங்குள்ள வயோதிபர்கள் பல்வேறுபட்ட மனநிலை உள்ளவர்கள். குழந்தையைப் போலவும் இருக்கின்றார்கள். இவற்றையெல்லாம் சகித்துக்கொண்டு சேவை செய்து வருகின்றோம். என்னுடன் உதவியாளர்களாக ஏழு பேர் உள்ளனர்.

இங்கு தங்கள் தாய்மார்களைக் கொண்டு வந்து விடும் பிள்ளைகளில் சிலர் மிகவும் அக்கறையுடன் இருக்கின்றார்கள். ஆனால் பலர் கொண்டுபோய் விட்டுவிட்டோம, இனி நமக்குக் கவலையில்லை என்ற மனப்போக்கில் இருக்கின்றார்கள். தனது 11 வருட கால அனுபவத்தில் தான் நிறையக் கற்றுக் கொண்டதாகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுபவத்தில் தான் நிறையக் கற்றுக் கொண்டதாகவும், அனுபவமும் பெரிது என்று சொல்வதில் குறைவில்லை. அன்பிற்காக ஏங்கும் வயோதிபர்களுக்கு ஆலமரமாய் நின்று சேவை செய்வதுதான் தனது கடமை என்பதையும் தெளிவாகச் சொன்னார்.

இங்கு கொண்டு வரப்படும் வயோதிபர்கள் அனைவரும் அன்புக்காக ஏங்குகின்றவர்களாவே இருக்கின்றார்கள். இதற்கான காரணம் சில பிள்ளைகள் தமது பெற்றோரைப் பராமரிக்க முடியாமல், வயோதிபர் இல்ல ங்களில் கொண்டு போய் விடுவதால் தங்களுக்குச் சிரமம் குறைவு என்றும் ஆகையால் பெற்றவர்களைக் கொண்டு போய் விட்டால் போதும் என்ற எண்ணத்தில் அவர்களை அங்கு சேர்த்துப் பணத்தைக் கொடுத்து விட்டு வந்து விடுகிறார்கள். அதன் பிறகு அவர்களுடன் எந்தவிதமான தொடர்புகளையும் சிலர் மேற்கொள்ளாமல் இருந்து விடுவார்கள். இப்படியான பெற்றோர்கள்தான் அன்புக்காக ஏங்குகிறவர்களாக இருக்கின்றார்கள். இந்த மாதிரியான பெற்றோர்களின் மனம் திருப்தியடைய இந்த வயோதிப இல்லங்களை ஆன்மீக நிலையில் நிறுத்திச் செயல்பட்டு வருவதனால் இங்குள்ள வயோதிபர்கள் தங்களது துயரங்களை மறந்து நிம்மதியுடன் வாழ்ந்து வருகிறார்கள். நான் பிள்ளைகளிடம் வேண்டிக்கொள்வதெல்லாம். “தயவுசெய்து பெற்றோர்களை வயோதிபர் இல்லங்களுக்கு அனுப்பாதீர்கள். அப்படி நீங்கள் அனுப்பிவிட்டாலும் அவர்களுக்கு நீங்கள் செய்ய வேண்டிய சேவைகளைத் திறம்படச் செய்யுங்கள். பணம் கொடுத்து அன்பைப் பெற்றுவிடலாம் என்ற மன நிலையை மாற்றிக்கொள்ளுங்கள்” உங்கள் பெற்றோர்கள் எங்கிருந்தாலும் உங்கள் அன்பைச்செலுத்துங்கள், அவர்கள் நிம்மதியுடன் இருப்பார்கள்.

எதிர்காலத்தில் அங்கொடையில் கைவிடப்பட்ட அநாதரவற்றவர்கள், குறிப்பாக எவராலும் பராமரிக்கப்படாமல் இருக்கின்றவர்களில் சிலரை அதிலும் குறிப்பாக தமிழர்களை இங்குள்ள வயோதிபர் களுடன் இணைத்துக்கொள்ள எண்ணியுள்ளேன். வெளியிடத்திலிருந்து இங்கு வந்து விழாக்களை நடத்தி இங்குள்ளவர்களைச் சந்தோசப்படுத்தும் அதேவேளை அவர்கள் மனநிறைவுடன் இருப்பதைக் காணும் போது தனக்கு மகிழ்ச்சியாக இருப்பதாகவும் கூறினார்.

தமது இலக்காக இவ்வயோதிப இல்லங்களை உலகம் போற்ற இதற்குள்ள தடைகளை நீக்கிச் சிறந்த இல்லமாக இருக்கவும், இருப்பவர்களை மன நிறைவுடன் வைத்திருக்கவும் வேண்டுமென்பதே எனது அவாவாகும். சாரதா மிசனிலுள்ள உயர் உத்தியோகத்தவர்கள் இங்குள்ள சிறுவர்களுக்கு நிறையவே சேவை செய்கின்றார்கள். மாத்தளையிலும் ஒரு வயோதிபர் இல்லத்தை அமைத்துள்ளோம். அத்தோடு சிங்கள சகோதரர்களின் வீடுகளுக்குச் சென்றும் சேவை செய்கின்றோம். அத்துடன் தெஹிவளையில் அமைந்துள்ள சமூக சேவை நிலையத்தில் வாராவாரம் அங்கு சென்று மதிய உணவு வழங்குவதாகவும் சேவை செய்யும் போது தான் சாதி, மத, பேதம் பாராமல்

தேவை செய்வதாகவும் கூறிய இவர் எதிர்காலத்தில் முடிந்த வரையில் இதற்கும் கூடுதலான சமூக சேவையில் ஈடுபட உள்ளதாகவும் கூறினார். இவர் எமக்கும், தன்னைச் செவ்வி கண்டதன் மூலம் இச்சஞ்சிகையை வாசிப்பவர்கள் தனது சேவையை புரிந்து கொள்வார்கள் என்ற நம்பிக்கையுடன் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

**நன்றி !**
**Global Express** **ற்காக வெள்ளவத்தை அன்னையர் இல்ல நிருவாகி செல்வி.கனகரத்தினம் துரைசிங்கம்**

**நேர்காணல் : R.செந்து**



***“தயவுசெய்து பெற்றோர்களை வயோதிபர் இல்லங்களுக்கு அனுப்பாதீர்கள். அப்படி நீங்கள் அனுப்பிவிட்டாலும் அவர்களுக்கு நீங்கள் செய்ய வேண்டிய சேவைகளை திறம்பட செய்யுங்கள். பணம் கொடுத்து அன்பைப் பெற்றுவிடலாம் என்ற மன நிலையை மாற்றிக்கொள்ளுங்கள்”***





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமையல்

## மொச்சைக் கொட்டைக் கருவாட்டுக் குழம்பு

**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| மொச்சைப்பயறு | 1 கையளவு |
| கருவாடு | சிறிதளவு |
| கத்தரிக்காய் | 1/4 கிலோ |
| வெங்காயம் | 200 கிராம் |
| தக்காளி | 100 கிராம் |
| மஞ்சள்தூள் | 1/4 டீஸ்பூன் |
| காய்ந்த மிளகாய் | 8 |
| கறிவேப்பிலை | 2 கொத்து |
| தனியாத்தூள் | 2 டீஸ்பூன் |
| உப்பு | தேவையான அளவு |
| எண்ணெய் | 1/2 குழிக்கரண்டி |
| புளி | எலுமிச்சம் பழ அளவு |
| கடுகு | சிறிதளவு |

**செய்முறை:**

* மொச்சைப் பயற்றை வேக வைத்துக் கொள்ளவும்.
* கருவாட்டை மண் போக நன்கு அலசிக் கொள்ளவும்.
* கத்தரிக்காய், வெங்காயம், தக்காளியை நறுக்கிக் கொள்ளவும். காய்ந்த மிளகாய், கறிவேப்பிலையை வறுத்து அரைத்துக் கொள்ளவும். புளியைச் கரைத்துக் கொள்ளவும்.
* ஒரு கடாயில் எண்ணெய் ஊற்றிக் காய்ந்ததும் கடுகு, சிறிதளவு கறிவேப்பிலை போட்டுத் தாளிக்கவும்.
* நறுக்கிய வெங்காயம், தக்காளியை வதக்கவும்.
* இப்போது தனியாத்தூள், மஞ்சள்தூள், அரைத்த மசாலா, தேவையான அளவு உப்பு சேர்த்து சிறிது நீர் ஊற்றவும். கத்தரிக்காய் சேர்த்து வேக வைக்கவும்.
* காய் வெந்ததும், புளிக்கரைசலை ஊற்றிக் கொதிக்க வைக்கவும். கொதித்ததும் வேக வைத்த மொச்சைக்கொட்டை, கருவாடு இவற்றை சேர்க்கவும்.
* உப்பைச் சரி பார்த்துக் குழம்பு கெட்டியாக வந்ததும் இறக்கி விடவும்.

## நண்டு புளிக்குழம்பு

**தேவையான பொருட்கள்**

| | |
|---|---|
| நண்டு | 1/2 கிலோ |
| புளி | எலுமிச்சம் பழ அளவு |
| மிளகாய்த் தூள் | 2 டீஸ்பூன் |
| தனியாத் தூள் | 3 டீஸ்பூன் |
| மஞ்சள் தூள் | 1/2 டீஸ்பூன் |
| வெங்காயம், தக்காளி | 150 கிராம் |
| உப்பு | தேவையான அளவு |
| எண்ணெய் | 1/2 குழிக்கரண்டி |

**தாளிக்க:** கடுகு 1 டீஸ்பூன், வெந்தயம் 1/2 டீஸ்பூன் காய்ந்த மிளகாய் 2, கறிவேப்பிலை சிறிதளவு

**செய்முறை:**

* நண்டைச் சுத்தம் செய்து நறுக்கிக் கொள்ளவும்.
* புளியைக் கரைத்து அதில் மிளகாய்த்தூள், தனியாத்தூள், மஞ்சள்தூள், போதுமான அளவு உப்புச் சேர்த்துக் கலந்து கொள்ளவும்.
* அகலமான வாணலியில் எண்ணெய் ஊற்றிக் காய்ந்ததும் கடுகு, வெந்தயம், கறிவேப்பிலை, காய்ந்த மிளகாய் ஆகியவற்றை ஒன்றன்பின் ஒன்றாகச் சேர்த்து தாளிக்கவும்.
* நறுக்கிய வெங்காயம், தக்காளி இவற்றை வதக்கவும்.
* பிறகு புளிக்கரைசல், மசாலாவை சேர்த்துத் கொதிக்க விடவும்.
* மேற்கண்ட கலவை கொதித்ததும் நண்டைச் சேர்த்துக் குழம்பு கெட்டியாக வந்ததும், இறக்கி விடவும்.
* ருசிக்க சுவையான நண்டுப் புளிக் குழம்பு தயார்.

# நகைச்சுவை

கபாலி.... நீ தினமும் ஸ்டேஷனுக்கு வந்து கையெழுத்து போடணும்னு சொன்னேனே.... ஏன் வரலை?

எந்த ஸ்டேஷன்னு சொல்லவேயில்ல நீங்க.

நேற்று ரயில்வே ஸ்டேஷனுக்குப் போயிட்டேன் சார்!"

அது என்ன கோல்ட் சாம்பார்

இந்த சாம்பார்ல 24 காரட் போட்டுருக்கு அதான்

உங்களுக்கு சொந்த ஊர் எது?

அந்த அளவுக்கு எனக்கு வசதியில்லீங்க. சொந்த வீடு கூட எனக்கு வாங்க வசதியில்லை....எப்படி சொந்த ஊர்...

திரும்ப திரும்ப என் வீட்டுல எலி வருது சார். என்ன பண்ணலாம்?

சிம்பில் மேட்டர், திரும்பாதீங்க....

## வானொலியில் தொலைபேசி வழி நேயர் விருப்பத்தில் ஒரு உரையாடல்.....

| | |
|---|---|
| நேயர் | ஹலோ வணக்கம்! |
| அறிவிப்பாளர் | வணக்கம்!... சொல்லுங்க... |
| நேயர் | வணக்கம்தான் சொல்லிட்டேனே எத்தனை தடவை சொல்றது? |
| அறிவிப்பாளர் | அதில்லைங்க" |
| நேயர். | எது இல்லை? |
| அறிவிப்பாளர் | சரி நீங்க எங்க இருந்து பேசறீங்க? |
| நேயர் | வீட்டுல இருந்துதான் பேசுறேன்" |
| அறிவிப்பாளர் | சரிங்க உங்க வீடு எங்க இருக்கு? |
| நேயர் | தரையிலதான். |
| அறிவிப்பாளர் | சரி என்ன பாட்டு வேணும்?" |
| நேயர் | சினிமா பாட்டுதான்" |
| அறிவிப்பாளர் | சரி எந்த படத்துல இருந்து?" |
| நேயர் | தமிழ் படத்துல இருந்துதான்" |
| அறிவிப்பாளர் | தலைவா! நீங்க ரொம்பவும் கலாக்கிறிங்க. தமிழ் பாட்டு போடுறம். தமிழ் படத்தின் பெயரை சற்று கூறுகின்றீர்களா? |
| நேயர் | அதான் சொன்னன்ல, **"தமிழ் படம்"** என்று. லேட்டஸ்சா வந்த நகைச்சுவை படம் சார். அருமையான தமிழ் பாட்டு சார். காதல இந்த பாட்டுல தான் அருமையாக சொல்லி இருக்காங்க. ஒவ்வொரு வார்த்தையிலும் காதல் மணம் கமழும் சார். இன்றைய இளைஞர் சமுதாயத்தின் காதல் உணர்வை அழகாக அற்புதமாக எல்லோரும் இலகுவாக புரிந்து கொள்ளும் விதத்தில் அருமையாக வடிவமைச்சிருக்காரு கவிஞர். என்ன சார் இன்னுமா பாட்டு என்னன்னு புரியல்ல. சரி நான் பாடி காட்டுறன் போடுங்க. **"ஓ மக சீயா ஓ மக சீயா, நாக்கு முக்கு நாக்கோ....** |

(சரி நேயர் யாருன்னு நமக்கு முக்கியமில்ல. வாங்கி கட்டிக்கிட்ட அறிவிப்பாளர் யாராக இருக்கும்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மாதவிடாய் / Mensus

பெண்களில் Oestrogen, Progesterone என்னும் ஓமோன்களின் தொழிற்பாட்டின் காரணமாக மாதவிடாய் ஏற்படுகின்றது. கருக்கட்டப்படாத முட்டை (சூல்), தடிப்படைந்த கருப்பையின் அகவணி, கர்ப்பப்பையின் குருதிக்குழாய்கள் என்பன சிதைவடைந்து பெண்குறியின் ஊடாக அல்லது யோனி வழியினூடாக (Vagina) வெளியேறுதலே மாதவிடாய் எனப்படும். இதன் போது அண்ணளவாக 70ml - 80ml குருதி வெளியேறும். இது அநேகமாக 3 தொடக்கம் 5 நாட்கள் வரை இடம்பெறும். இது அநேகமான பெண்களில் 28 நாட்களுக்கு ஒருமுறை இடம்பெறும் செயற்பாடாகும். மாதவிடாய்க்கு முன்னரான அறிகுறி அல்லது மாதவிடாய்க்கு முன்னரான மன இறுக்கம். (Pre- Menstrual Syndrome) அதிகமான பெண்கள் மாதவிடாய்க்கு முன்னர் உடலியல், உளவியல் ரீதியிலான மாற்றங்களை அனுபவிக்கின்றனர். 2 - 5% ஆன பெண்கள் இத்தகைய அறிகுறிகளைக் காண்பிக்கின்றனர். 85% மான பெண்கள் ஏதாவது ஒரு அறிகுறியையாவது தமது மாதவிடாயின் போது கொண்டிருப்பர். உ+ம் வயது 24 பெண். மாணவி பொதுவாக அமைதியான சுபாவம் உள்ளவர். வீட்டில் சமையல் உட்பட எல்லா வேலைகளையும் செய்யும் சுறுசுறுப்பான பொறுப்புள்ள பெண். ஆனால் இவர் குறிப்பிட்ட சில நாட்கள் சோர்ந்த மனநிலையுடன் காணப்படுபவராகவும், தனது குடும்பத்தினருடன் சிறிய விடயங்களுக்குக்கூடக் கோபப்பட்டு வாக்குவாதத்தில் ஈடுபடுபவராகவும், பொறுமையின்மை, எதிரான மனநிலை போன்றவற்றையும் கொண்டிருந்தார். இவற்றைவிட கடுமையான தலையிடி, கடுமையான வயிற்றுநோ, நித்திரையின்மை போன்ற உடலியல் அறிகுறிகளும் இவரிடம் காணப்பட்டது. இத்தகைய அறிகுறிகள் ஒவ்வொரு மாதமும் ஒரு குறிப்பிட்ட சில தினங்களுக்கு வெளிப்பட்டதை அவதானிக்கக் கூடியதாய் இருந்தது. இந்த அறிகுறிகளுக்கிடையில் ஒரு பொதுத்தன்மையும் காணப்பட்டது. அதாவது தனக்கு ஒவ்வொரு மாதமும் மாதவிடாய் ஏற்படும் ஒரு சில தினங்களுக்கு முன்பாகவே இத்தகைய அறிகுறிகள் வெளிப்படுவதாக அவர் குறிப்பிட்டார். இந்தப் பெண்ணுக்கு ஏற்பட்டுள்ள உளவியல, உடலியல் ரீதியான இத்தகைய அறிகுறிகள் மாதவிடாய்க்கு முந்திய அறிகுறி மாதவிடாய்க்கு முன் ஏற்படும் உணர்ச்சி இறுக்கம் எனப்படும். (Permenstrual Syndrome / Permenstrual Tension (PMC/PMT) என அழைக்கப்படுகின்றது. இந்நிலையில் மாதவிடாய்ச் சுழற்சியின் இரண்டாவது பகுதியில் பலவிதமான உடல், உள சம்பந்தமான இந்த அறிகுறிகள் தோன்றுகின்றது. இந்தப்பெண்ணைப் பொறுத்தவரை இத்தகைய தினங்களில் அவரது சாதாரண உணர்வு நிலையிலிருந்து மாறுபட்ட உணர்வு நிலைகளை வெளிப்படுத்தி வருகின்றார். இது 30 - 45 வயதுள்ளவர்களில் அதிகமாக காணப்படுவதாக குறிப்பிடப்படுகின்றது. எனினும் இந்தப்பெண் போன்ற இளம் பெண்களிலும் ஏற்படலாம் என ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. மாதவிடாய்க்கு முன்னரான மன இறுக்கம் இன்றைய காலகட்டத்தில் வாழுகின்ற பெண்களுக்கு முன்னரான அறிகுறி மிகப்பாரதூரமான பிரச்சினையாக உள்ளது. இப் பிரச்சினையினை அவர்களைச் சார்ந்தவர்களால் கூடக்கையாள முடியாமல் உள்ளது. மேலும் பெண்கள் கர்ப்பிணியாகும் காலத்தை விடப் பொதுவாக பெண்கள் மாதவிடாய் சம்பந்தமான பிரச்சினைகளைத் தமது வாழ்நாளில் ஒரு வருடத்தில் பத்திலிருந்து இருபது தடவைகள் வரை முகம் கொடுக்க வேண்டியுள்ளது. ஆனால் பெண்ணானவள் இரண்டிற்கும் நான்கிற்கும் இடைப்பட்ட பிள்ளைகளைப் பெற்றால் அவள் தனது சிறுபிள்ளைக்காலத்தில் (பன்னிரெண்டு வயது) இருந்து ஐம்பதுக்கும் நானூறுக்கும் இடைப்பட்ட அளவு மாதவிடாய்க்கு முன்னரான அறிகுறி சம்பந்தமான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. அதே நேரம் பிள்ளைகளைப் பெறமுடியாத பெண் தனது வாழ்நாளில் ஐந்நூறு தடவைகள் இது தொடர்பான அறிகுறிகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது. 1950களுக்கு முன்னர் அதாவது பெண் கர்ப்பமாவதைத் தடுப்பதற்கான மாத்திரைகள் அறிமுகத்திற்கு வருவதற்கு முன்னர் அவள் உணர்ச்சிப்படுகின்ற உணர்வு நிலை கூடிக்குறையும் என்பதனை யாரும் அவதானிக்கவில்லை. மாதவிாய் வந்து முடிவடைந்த பிறகு பெண்களினுடைய மாதவிடாய்க்கு முன்னரான அறிகுறிகள் தானாகவே மறைந்து விடும். ஆனால் மாதவிடாய் வருவதற்கு முன்னரான அறிகுறி காணப்படுகின்ற வேளையில் அதிக கோபம், வன்செயல்களைச் செய்யத்தூண்டும் எண்ணம் என்பன மட்டுமன்றித் தற்கொலையே செய்யத்தூண்டுகின்ற மன எண்ணமும் காணப்படும். பெண்களால் மேற்கொள்ளப்படும் குற்றச் செயல்களில் பெரும்பாலானவை பொதுவாக மாதவிடாய்க்கு முன்னரான அறிகுறி காணப்படும் காலப்பகுதியிலேயே இடம்பெற்றுள்ளன என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. சிறையில் இருக்கும் 50% பெண்களில் அவர்கள் செய்த கொலையோ, அல்லது குற்றவியல் வன்முறைச் செயல்களோ இக்காலப்பகுதியில் தான் செய்துள்ளனர் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. இக்காலப் பகுதியில் இவர்கள் தங்களைத் தாங்களே கட்டுப்படுத்த முடியாதவர்களாக (Loosing Control ) மிகவும் பைத்தியக் காரத்தனமாகச் செயற்படுபவர்களாக (Going Crazy) காணப்படுகிறார்கள். இந்நேரங்களில் இவர்களின் ஈஸ்ரோஜன் என்ற ஓமோனானது இவர்களை மிகக் கொடூரமான பெண்களாக மாற்றமடையச் செய்கின்றது. சில நாடுகளில் நீதிபதிகள், பெண்களின் குற்றம் தொடர்பாகத் தண்டனை விதிக்கையில் மாதவிடாய்க்கு முன்னரான அறிகுறி உள்ள நேரத்திலா? அல்லது சாதரண நேரத்திலா? இக்குற்றம் செய்யப்பட்டது என்பதனை கருத்தில் கொண்டே தமது தீர்ப்பை வழங்குகின்றனர். அமெரிக்க உள மருத்துவச் சங்கத்தின் (APA, 87 ) நோய் நிர்ணயக் கைந்நூலில் Late luteal Phase dysphoric disorders என்ற பதத்தால் விளக்கப்படுகின்ற இந்த மாதவிடாய்க்கு முன்னான அறிகுறி என்ற நிலையின்பால் கடந்த காலத்தில் கணிசமானளவு கவனம் அதிகரித்துள்ளது. இவ்வறிகுறிகள் மாதவிடாய் வருவதற்கு 2 - 14 நாட்களுக்கு முன்னர் எப்பொழுதாவது தோன்றி மாதவிடாய் ஏற்படுவதற்கு 7 நாட்களுக்கு முன்னர் மிக அதிகமாகி மாதவிடாய் ஏற்பட்ட பின்னர் இவை மறைகின்றன. இத்தகைய அறிகுறிகள் 3 வகையாக பிரிக்கப்படுகின்றன.

**காரணிகள்**

மாதவிடாய்க்கு முந்திய அறிகுறிக்கான காரணி அறியப்படாத போதும் உயிரியற் காரணிகளான ஓமோனின் சமநிலையின்மை அதிரினல் ஓமோன் பிறழ்வு, குருதிக்குறைவு, குருதியில் குளுக்கோசின் அளவு குறைவடைதல் (Hypoglycemia ) விற்றமின் குறைபாடு, என்டோபின் நரம்புக்கடத்தியின் பிறழ்வு போன்றவை குறிப்பிடப்பட்டுள்ளன. மாதவிடாய்க்குச் சற்று முன்னர் உள்ள காலத்தில் ஈஸ்திரோஜன் (Oestrogen) புரெஜெஸ்திரோன் (Progesterone) ஆகிய ஓமோன்களினதும் மட்டங்கள் குறைவடைவதால் இத்தகைய அறிகுறிகள் ஏற்படலாம். மாதவிடாய்க்கு முன்னர் (Beta - endorphin) பீற்றா என்டோபினில் குறிப்பிடளவு குறைவு இருந்தாலும் இத்தகைய அறிகுறிகள் ஏற்படலாம். ஏனெனில் அநேகமான பெண்களில் மாதவிடாய்க்கு முன்னர் எதிரான சிடுசிடுப்பான மனநிலை காணப்படுகின்றது. என்டோபின் (Endorphin) மனநிலையுடன் தொடர்புடையது ஆதலால் இது ஏற்பட்டிருக்கலாம். புகையிலை உள்ளெடுத்தல், குடும்பத்தில் தாய் அல்லது உறவினருக்கு இவ்வறிகுறி இருத்தல், Seratonin என்னும் நரம்புக்கடத்தியின் குறைபாடு போன்றவையும் இதற்கு காரணம் எனக் குறிப்பிடுகின்றன.

**தீர்வுகள் :-**

மாதவிடாய்க்கு முன்னரான அறிகுறி உள்ளவர்களுக்கு மருத்துவர்களாலும் உளவியலாளர்களாலும் பின்வரும் தீர்வுகள் பரிந்துரைக்கப்படுகின்றன.

1.கபின் (Caffaine) உள்ளெடுத்தலை குறைத்தல். கோப்பியில் உள்ள கபீன் (Caffain) உறுத்துணர்ச்சி, மனச்சோர்வு, பதட்டம் என்பவற்றை ஏற்படுத்துவதனால் இதனை உள்ளெடுப்பதைத் தவிர்ப்பது அல்லது குறைப்பது நன்று.
2. விற்றமின் B அதிகமுள்ள உணவுகளை உள்ளெடுத்தல்
3.உணவில் கொழுப்புச்சத்து, உப்பு என்பவற்றை அதிகமாக உள்ளெடுப்பதைத்தவிர்த்தல்.
4.தியானம் (Meditation), தளர்வுப்பயிற்சி (Relaxation), உடற்பயிற்சி (Exercise) என்பவற்றை மேற்கொள்ளலாம்.
5.நெருக்கீட்டைக் கட்டுப்படுத்த நெருக்கீட்டு முகாமைத்துவத்தினை (Stress Management ) மேற்கொள்ளலாம்.
6. வயிற்றில் சுடுநீர் ஒத்தடம் கொடுத்தல்.
7. ஓய்வு எடுத்தல், நித்திரை என்பன அவசியம்.
8. வலி நிவாரணிகளைப் பயன்படுத்தலாம். இவற்றை மருத்துவ ஆலோசனையுடன் பயன்படுத்துவதே நல்லது. (Ponstan, Panadol)

தொகுத்தளித்தவர்: K. Gauthaman
( B.A. Hons in Psychology) Visiting Lecturer (Psychology) Univercity of Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூலிகைகள்

## தமிழர் வாழ்க்கை முறையில்

### பயன்பாட்டில் இருந்து வரும் பல்வேறு மூலிகைகளைப் பற்றிய தகவல்கள்

துளசி
குப்பை மேனி
தூதுவளை
பிரண்டை
ஓரிதழ் தாமரை
வல்லாரை
கரிசலாங்கண்ணி
கடுக்காய்
வேம்பு
திருநீற்றுப்பச்சிலை
அறுகம்புல்
ஆவாரை
பசளக் கீரை
சோற்றுக்கற்றாழை
முருங்கை
வில்வம்
மருதோன்றி
கண்டங்கத்தரி
நாயுருவி
கறிவேப்பிலை
பொன்னாங்காணி
நெல்லிக் காய்
நெருஞ்சில்
கீழாநெல்லி
பப்பாளி
இஞ்சி-சுக்கு













கற்பூரவள்ளி
நாவல்
அத்தி
அரசு
ஆல்
சீரகம்
செம்பருத்தி
மஞ்சள்
எலுமிச்சை
ஆடாதோடை
நன்னாரி
கொத்தமல்லி
வெற்றிலை
புதினா
சங்கு
தாமரை
அம்மான்
பச்சரிசி
பொடுதலை
தும்பை
அகத்தி
கிராம்பு
முடக்கத்தான்
அவுரி



## துளசியின் பலன்

துளசி இலைக்கு மன இறுக்கம், நரம்புக் கோளாறு, ஞாபக சக்தி இன்மை,ஆஸ்துமா,இருமல் மற்றும் பிற தொண்டை நோய்களை உடனுக்குடன் குணமாக்கும் சக்தி உண்டு. துளசி இலைச் சாற்றில் தேன், இஞ்சி முதலியன கலந்து ஒரு தேக்கரண்டி அருந்தலாம். சளி, இருமல் உள்ள குழந்தைகளுக்கு தினமும் மூன்று வேளை மூன்று தேக்கரண்டி துளசிக்கசாயம் கொடுத்தால் போதும்.ஆங்கில மருத்துவத்தில் தரப்படும் ஆன்டிபயாட்டிக்குகள் நல்லதல்ல.

1) வேறு பெயர்கள்: துழாய், திவ்யா, பிரியா, துளவம், மாலலங்கல், விஷ்ணுபிரியா, பிருந்தா, கிருஷ்ணதுளசி, ஸ்ரீதுளசி, ராமதுளசி

2) இனங்கள் : நல்துளசி, கருந்துளசி, செந்துளசி, கற்துளசி, முட்துளசி, நாய்த்துளசி (கஞ்சாங்கோரை, திருத்துழாய்)

3) தாவரப்பெயர்கள்: Ocimum, Sanctum, Linn Lamiaccac, Labiatac (Family)

4) வளரும் தன்மை: வடிகால் வசதியுள்ள குறுமண் மற்றும் செம்மண், வண்டல்மண், களி கலந்த மணற்பாங்கான இருமண். பாட்டு நிலம் தேவை. கற்பூரமணம் பொருந்திய இலைகளையும் கதிராக வளர்ந்த பூங்கொத்துகளையும் உடைய சிறுசெடி. தமிழகமெங்கும் தானே வளர்கின்றது. துளசியின் தாயகம் இந்தியா. அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுக்கும் பரவியுள்ளது. துளசியை விதை மற்றும் இளம் தண்டுக் குச்சிகள் மூலம் பயிர் பெருக்கம் செய்யலாம். மண்ணில் கார அமில நிலை 6.5 - 7.5 வரை இருக்கலாம். வெப்பம் 25 டிகிரி முதல் 35 டிரிகி.

5) பயன் தரும் பாகங்கள்: இலை, தண்டு, பூ, வேர் அனைத்துப் பகுதிகளும் மருத்துவ குணம் வாய்ந்தவை.

6) பயன்கள்: தெய்வீக மூலிகையும், கல்ப மூலிகையும் ஆகும். வீட்டு உபயோகம், மருந்து, வாசமுடைய பூச்சி மருந்துகள், வாசனைப் பொருட்கள். துளசியின் கசாயம் இட்டும், சூரணம் செய்தும் சாப்பிடலாம். இருமல், சளி, ஜலதோசம் மற்றும் தொற்று நீக்கி, கிருமி நாசினி, பல்வேறு வியாதிகளையும், பூச்சிகளையும் கட்டுப்படுத்தும் தடுக்கும் ஆற்றல் படைத்தது. துளசி நம் உடலில் வெப்பத்தை உண்டாக்கி கோழையை அகற்றி உடலின் உள்ளே இருக்கின்ற வெப்பத்தை தணிக்கக்கூடிய தன்மை உடையது. வியர்வையை அதிகமாகப் பெருக்கக் கூடிய குணமும் இதற்கு உண்டு. இது குழந்தைகளுக்கு ஏற்படும் சளி, இருமல் போக துளசி சாற்றுடன் சிறிது தேன் கலந்து கொடுத்தால் குணமாகும். உடம்பில் ஏற்படுகின்ற கொப்புளங்களுக்குத் துளசி இலையை நீர்விட்டு அரைத்து பூசி வந்தால் அவை எளிதில் குணமாகும். சரும நோய்களுக்கு துளசிச்சாறு ஒரு சிறந்த நிவாரணி.

இலைகளைப் ஆவியில் அவித்துப் பிழிந்து சாறு 5மி.லி. காலை, மாலை சாப்பிட்டு வர பசியை அதிகரிக்கும். இதயம் கல்லீரல் ஆகியவற்றை பலப்படுத்தும். சளியை அகற்றும், தாய்பாலை மிகுக்கும். இலை கதிர்களுடன் வாட்டி பிழிந்த சாறு காலை மாலை 2 துளி வீதம் காதில் விட்டு வர 10 நாட்களில் காது மந்தம் தீரும். விதைச் சூரணம் 5 அரிசி எடை தாம்பூலத்துடன் கொள்ள தாது கட்டும். மழைக் காலத்தில் துளசி இலையை தேநீர் போலக் காய்ச்சி குடித்து வந்தால் மலேரியா, விஷக்காய்ச்சல் போன்ற நோய்கள் வராது. தொண்டையில் புண் ஏற்பட்டு துன்பப்படுகிறவர்கள் துளசி இலைக் கசாயத்தைக் குடித்து வந்தால் நல்ல பலன் கிடைக்கும்.

தொடரும்.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பரதநாட்டியம்

## பரதம் பவித்ரம்

பரதத்தின் லலித கலைகளுள் தலையாய கலையாக நடனம் சிறப்புப் பெறுகிறது. இதன் வரலாற்று பின்னணி பெரும் சிறப்பு பெறுகிறது. ஞானிகளும் தெய்வ சான்னித்தியம் பெற்ற பெரியாருமே புரிந்து கொள்ளக் கூடிய உயரிய தத்துவங்களை எல்லாம் இலாவகமாக முத்திரைமூலமும் நளினமான பாவத்தின் மூலமும் பாமரருக்கும் புரிந்துக் கொள்ளக் கூடிய உயரிய சாதனம் நடனம் என்பது பண்டைய தமிழர் அறிந்த உண்மையே. வேதங்களும், உபநிடதங்களும் நாட்டியத்தை பற்றி பல விடயங்களில் பேசுகின்றன. அசுவமேத யாகம் முற்றுப்பெற்றதும் அக்னிகுண்டலத்தைச் சுற்றிப் பல பெண்டிர் சிரசிலே கலசமேந்தி நடனமாடும் மரபினை ரிக், யசூர் வேதங்களில் காண்கின்றோம். வேத கால பிரதான கடவுளான ருத்ரசிவனை நாட்டிய கோலத்தில் காட்டுகிறது ஒரு சுலோகம். வேத காலத்தில் காண்கின்ற நாட்டிய கலை தொடக்கம் நீண்டதொரு தொடர்கதை போல் பிராந்தியங்களில் பலவேறுபாடுகளை அடைந்து இன்று அனேக பிரிவுகளைக் கொண்டுள்ளதாக விளங்கி வருகின்றது.

பரதரின் நாட்டிய சாஸ்திரம் நடனக்கலையின் அகராதியென மதிப்பிடத்தக்கது. அவர் காலத்தில் நடைமுறையில் இருந்து வந்த பல நடன வகைகளை சீர்ப்படுத்தித்தொடுத்த பெருமைக்குரியவர் பரதர். நாட்டியக் கலையை ஒரு தெய்வீக வரப்பிரசாதமாகக் கருதிய பண்டைய இந்து சமூகத்தினர் தாம் வணங்கும் கடவுள் அனைவரையும் நடனமாட செய்து மகிழ்ந்தனர். நர்த்தன கணபதி, நடராஜர், காளிங்க நர்த்தனமாடும் கிருஸ்ணர், சிவனோடு ஆடிய காளி என்றெல்லாம் பல தெய்வங்களை ஆடவைத்து வழிபட்டனர்.

கலையையும், சமயத்தையும் இரண்டறக் கலக்க வைத்து அக்கலையின் மூலமே அவ்விரண்டுக்கும் ஒருங்கே தொண்டு புரிந்தார். பண்டைய காவியம் சிலப்பதிகாரத்தில் சிவனின்-கொடு கொட்டி, பாரதியின்- பாண்டுரங்கியல் விஸ்ணு-மல்லாடல், முருகனின்- குடைக்கூத்து, கண்ணனின்-குடக்கூத்து, மன்மதனின்- பேடி, துர்க்கையின்- மரக்கால், லக்ஷ்மியின்- பாவைக்கூத்து, இந்திராணியின் - கடயம். இவற்றில் கலையுலகில் கௌரவிக்கப்பட்டு வருவது சிவனின் நடராஜ திருவுருவமே. ஸந்தியா தாண்டவமானது லோகமாதாவை பொன்னாசனத்தில் அமரச்செய்து அந்தி மயங்கும் நேரத்தில் ஆடிய ஆட்டமே ஆகும். தாமஸ தாண்டவம் சிவனால் இடுகாட்டில் ஆடப்பட்டது. 10 கரங்களுடனும் சாம்பலை உடலெங்கும் பூசி கோர பைரவ வடிவத்தில் ஸௌம்யம் மட்டுமின்றி உக்ர வடிவமும் உண்டு என்பதை காட்டுமோர் உயரிய திருக்கோலம். ஆனந்த தாண்டவமே கலையுலகில் கூடுதலாக பரவியதாகும். இந்த நூற்றாண்டுவரையும் இனியும் நடைபெறும் ரங்கப் பிரதேசங்களில் மேடையின் முன் இடது மூலையில் கௌரியின் பக்கம் நிற்பார் நடராஜர். ஆலயங்கள் தோறும் ஒரு குறிப்பிட்ட தேவதாசி மரபில் இருந்த நடன கலைக்கு சோழர் காலமே பொற்காலமாக திகழ்ந்தது. கோயில்களில் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட சுவாமி பூஜையின் போது ஆடற்கலைஞர்கள், தேவதாசிகள் என்றும் அரண்மனையில் ராஜஸ்தானங்களில் ஆடல் புரிந்து மன்னரை மகிழ்வித்தனர்.

நங்கையர் ராஜதாசிகள் என்றும் சமூக விழாக்கள், முகூர்த்தங்களில் பங்கேற்ற நடன நங்கையர் அலங்கார தாசிகள் என்றும் குறிப்பிட்டனர். இக்குறிப்பிட்ட தேவதாசிகளிடமிருந்து 1947ல் தேவதாசி ஒழிப்பு சட்டத்தில் முற்றாக நீக்கப்பட்டு சமூகத்தில் ஒரு சிறந்த மேடைக்கலையாகவும் நல்ல குடும்பத்தை சேர்ந்தவர்களும் இக்கலையை கற்கலாம் என்னும் அங்கீகாரத்தைப் பெற்றுதந்ததில் ஸ்ரீமதி ருக்மணி தேவி அருண்டேல், கனம் கிருஸ்ணையர் போன்றோர் மறக்க முடியாதவர்கள்.

இவர்கள் நாட்டிய கலையை புனிதமாகவும் தெய்வீகமாகவும் போற்றும்படி செய்த பரத நாட்டியம் மீண்டும் கேலியாகவும், கேவலமாகவும் தள்ளப்படாமல் பார்த்துக்கொள்ள ஒவ்வொரு நாட்டிய கலைஞருக்கும் பொறுப்புண்டு. தமிழ் கலாச்சாரம் பேணுவதும், புனிதத்தன்மை அடைந்ததை புழுதியில் விடுவதும் மிகவும் மனவருத்தத்திற்குரிய செயலாகும்.

நாட்டியம் தெய்வத்தன்மை பொருந்தியது என்று மேடையில் கத்திவிட்டு பிரமுகர்களை வரவேற்பதற்கு வீதிதோறும் நடனமாடுங்கள் என்பது பொருத்தமற்றது. இதைவிட பிரபல நட்சத்திர ஹோட்டல்களில் வேற்று நாட்டவரை மகிழ்விக்க அவர்கள் உணவருந்தும் வேளை பரதநாட்டியம் இடம் பெறும். இதுவும் மனவருத்தத்திற்குரிய செயல். நம்முன்னோர் போராடிக் கட்டிக்காத்த புனித கலையை மீண்டும் அவல நிலைக்கு தள்ளாதிருப்பதே தெய்வீக கலைக்கு நாம் செய்யும் சிறந்த தொண்டாகும்.


சிற்பங்களும், சித்திரங்களும் நடனக்கலையை கௌரவிப்பது போல உலகில் வேறு எந்த நாட்டுக் கலையும் நாட்டியத்தை சிறப்பிக்கவில்லை. நாட்டியக்கலை வாழ்க்கையோடு ஒன்றியது எளிமையானது ஆன்மீகத்தத்துவத்தில் ஊறியது. பரம்பொருளோடு பேசும் பாஷை சன்னிதானத்தில் தோன்றி வளர்ந்தது. இதை நாம் உணர்ந்து கடைப்பிடித்துவரும் கடைசி நடனக்கலைஞர் இருக்கும் வரை அதன் பெருமைக்கோ, புகழுக்கோ, தெய்வீகத்துக்கோ குறைவில்லை.

வாழ்க பரதக்கலை.

பரதசூடாமணி
ஸ்ரீமதி சுபித்திரா கிருபாகரன்
மட்டக்களப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BRIGHTEN REST

# HOTEL BRIGHTEN REST

## தலை நகரில் புதுப் பொழிவுடன்

- 400 பேர் வரை உள்ளடக்கக் கூடிய (Grand Ball Room A/C)
- 100 பேர் வரை உள்ளடக்கக் கூடிய (Sangeeth Mahal A/C)

ஆகிய இரு மண்டபங்களும் இப்போது உங்கள் அனைத்து வித வைபவங்களுக்கும் ஏற்ற வகையில் இலவசமாக அனைத்து ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.



வில் மணவறை, ஐயர், மேளம், வாழைமரம்
பூ மாலை, கோலம், தலைப்பாகை,
கும்பம் மற்றும் அனைத்தும் எம்மிடமே.

ஒரே கூரையின் கீழ் பூ அலங்காரம்,
மேசை,அலங்காரம், கதிரை அலங்காரம்,
Cake, video, Gas Balloon, DJ / விவாக பதிவாளர்
மற்றும் அனைத்து ஏற்பாடுகளும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்



- உயர் தரத்தில் உன்னத சேவைகளை வழங்கும் எம்மிடம் சைவ / அசைவ / கீழைத்தேய மேலைத்தேய உணவு வகைகள், தேர்ச்சி பெற்ற இந்திய சமையல் வல்லுனர்களால் உங்கள் அனைவரினதும் சுவைக்கும், தேவைக்கும் ஏற்ற வகையில் பெற்றுக் கொள்ளலாம்.
- பாதுகாப்பான A/C மற்றும் Non A/C அறைகள்.
- குடும்பத்தினருடன் உண்டு மகிழக் கூடிய Family Restaurant, Pub
- பாதுகாப்பான வாகனத் தரிப்பிட வசதிகள்
- அனைத்து சேவைகளிலும் தரத்தினை பேணும் பிரைட்டன் ரெஸ்ட் உங்களை அன்புடன் வரவேற்கிறது.

No.214/2, Messenger Street, Colombo-12, Sri Lanka.
Tel: 011 2 329 664, 011 7 242 233, Mobile: 0774 930 620
Fax: 011 7 242 233 Email: brighten@eureka.lk




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புதியவை

## குளிரூட்டியுடன் கூடிய மோட்டார் சைக்கிள்!



ஏ.சி வசதியுடன் கூடிய பைக் ஐரோப்பிய நாடுகளில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இதன் விலை ரூ.34 லட்சம். சுவிட்சர்லாந்தை சேர்ந்த பெரவ்ஸ் என்ற நிறுவனம் கேபினுடன் கூடிய பைக்கை அறிமுகப்படுத்தியுள்ளது. ஹேண்ட்பார், 2 வீல்கள் ஆகியவை வழக்கமான பைக் போல. உட்கார சற்று அகலமான சீட். வண்டியை நிறுத்தி இறங்கும் போது பேலன்ஸ் தவறாமல் இருக்க சின்னப் பசங்க சைக்கிள் போல இரு புறமும் சப்போர்ட்டுக்கு 2 மினி சக்கரங்கள். இடது, வலது எந்த பக்கமும் இறங்கலாம். ஏறி அமர்ந்து கதவை மூடிக்கொண்டால் முன், பின் சக்கரங்கள் மட்டுமே வெளியே தெரியும். பேண்ட்டில் சேறு, சகதி அடிக்கிற இம்சைகள் கிடையாது. முன் பக்கவாட்டு பக்கங்களை பார்க்க பைபர் கண்ணாடி. எடை சற்று அதிகம் என்பதால் அதற்கேற்ப ரேஸ் பைக் இன்ஜின் பொருத்தியிருக்கின்றனர். ஏ.சி வசதியும் செய்யப்பட்டுள்ளது. மினி கார் அளவுக்கு தரமாக உருவாக்கப்பட்டிருப்பதால் விலை அதிகம். ரூ.34 லட்சம். "மோனோடிரேசர்" என்று பெயர் வைத்திருக்கின்றனர். சுவிட்சர்லாந்து மட்டுமின்றி பிரான்ஸ், ஜேர்மனி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் மோனோடிரேசரை அதிகம் காண முடிகிறது. பைக் தயாரிப்பில் முன்னணியில் உள்ள பல நிறுவனங்களும் ஏ.சி பைக் தயாரிப்பு பக்கம் பார்வையை திருப்பி யிருக்கின்றன. அவர்களும் களமிறங்கினால் விலை குறையலாம்.

## ஆணாக மாறும் பெண் மீனினம் !



அறிவியலில் ஒரு விந்தை ஆண்-பெண்ணாக பிறந்த நம் அனைவரினதும் கடமை அல்லவா?.. கிளௌன் ஃபிஷ் என்ற மீனுக்கு ஆண் பெண் என்பது உறுப்பை பொறுத்தது அல்ல.. பிறக்கும் எல்லா மீனுக்கும் "எல்லா உறுப்பும்" இருக்கும் ..இருப்பதிலேயே பெரிய மீன்,பெண் என்ற பதவியை ஏற்று அந்த பெண்ணாக செயல்படும்.. அதை விட சிறிய மீன் ஆண்.. இது ஆண் " வேலையை" செய்யும்.. அதையும் விட சின்ன மீன் எடுபிடி வேலைகளுக்கு அனுப்பபடும்.. அந்த பெண் மீன் இறக்க நேரிட்டால், இந்த ஆண் மீன் பதவி உயர்வு பெற்று பெண் என்ற பதவிக்கு வரும்..எடுபிடி மீன் ஆண் என்ற பதவியை அடைந்து இ தன் " பணியை" இனிதே ஆரம்பிக்கும்..



## தண்ணீரில் நடக்கும் ரோபோ !

தண்ணீரில் நடக்க வேண்டும் என்பது மனிதனின் கனவாக உள்ளது. அதை நிறைவேற்றும் வகையில் சீன விஞ்ஞானிகள் தண்ணீரில் நடக்கும் அதிசய ரோபோவை கண்டுபிடித்துள்ளனர். பூச்சி போன்று வடிவமைக்கப்பட்டுள்ள இந்த "ரோபோ"வால் தண்ணீரில் நடக்க மட்டுமின்றி ஓடவும் முடியும். தண்ணீரில் நடக்கும் ரோபோவுக்கு அசையக்கூடிய தடுப்புகள் போன்ற 2 கால்கள் பொருத்தப்பட்டுள்ளது. அதுதவிர தண்ணீரை நீந்தி கடக்கக்கூடிய வகையில் வயர்களால் ஆன 10 கால்கள் வடிவமைக்கப்பட்டுள்ளது.இவைகளை இயக்க கூடிய வகையில் 2 மிகச் சிறிய எந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. மிகவும் எடை குறைவானது. தண்ணீரில் மூழ்கி மீண்டும் மேல் எழுந்து வரக்கூடியது. சீனாவைச் சேர்ந்த ஜியாங் பல்கலைக்கழகத்தின் கெமிக்கல் என்ஜினியரிங் பேராசிரியர் குயின்மின்பான் தலைமையிலான குழுவினர் கண்டுபிடித்துள்ளனர். இதுபோன்ற "ரோபோ"க்கள் ராணுவ உளவுப் பணிக்கும், தண்ணீரில் மாசுபட்டதை கண்டறியவும் மற்றும் பல செயற்பாடுகளுக்கும் பயன்படும் என விஞ்ஞானிகளும் ஆராய்ச்சியாளர்களும் தெரிவித்துள்ளனர்.

## வியாழனை விடப் பெரிய கோள் !



விண்வெளியில் ஆய்வு நடத்த அமெரிக்காவின் நாசா விண்வெளி மையம் கெப்லர் என்ற விண்கலத்தை அனுப்பியுள்ளது. அது விண்ணில் பறந்து ஆய்வு செய்து வருகிறது. இந்நிலையில் தற்போது ஒரு புதிய கிரகம் இருப்பதைக் கெப்லர் விண்கலம் கண்டுபிடித்து போட்டோ எடுத்து அனுப்பியுள்ளது. அது அளவில் பெரிய கிரகமான வியாழனை விட மிக பெரியதாக உள்ளது. அதற்கு "ட்ரெஸ்-2 பி" என விஞ்ஞானிகள் பெயரிட்டுள்னர். இது மஞ்சள் நிறத்திலான நட்சத்திரங்களின் இடையே பதுங்கி கிடக்கிறது. அதன் மீது சூரியனின் 1 சதவீத வெளிச்சம் மட்டுமே விழுகிறது. இதனால் இந்த கிரகம் கரியைவிட மிகவும் கறுப்பு நிறத்தில் உள்ளது. இதன் மேற்பரப்பில் பல "கியாஸ்" பிரதிபலிக்கின்றன. வியாழன் கிரகத்தில் சூரியனின் வெளிச்சம் அதிக அள்வில் விழுகிறது. அதனால் வெள்ளை மற்றும் சிவப்பு நிற மேகங்கள் படர்ந்திருப்பது தெரிகிறது. ஆனால் புதிதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ள ட்ரெஸ் 2 பி கிரகத்தில் சூரிய கதிர்களின் வெளிச்சம் விழாததால் அதுபோன்ற மேக மூட்டங்கள் படர்ந்திருப்பதை காண முடியவில்லை. என விண்வெளி ஆராய்ச்சியாளர் டேவிட் கிப்பிங் தெரிவித்துள்ளார். அதே நேரத்தில் இந்த கிரகம் கடும் வெப்பமாக உள்ளது. இங்கு 1800 டிகிரி பாரன்கீட் வெப்பம் நிலவுகிறது. அதிலிருந்து வெளியாகும் வெப்ப கதிர்கள் மங்கலான சிவப்பு கதிர்களாக தெரிகிறது. ட்ரெஸ்- 2 பி கிரகம் குறித்து கெப்லர் விண்கலம் மூலம் தொடர்ந்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்து கொள்ளுங்கள்

Computer - கணினி/கணிப்பொறி
Key board - விசைப்பலகை
Software - மென்பொருள்
Application Software - பொதுப்பயன்பாட்டு மென்பொருள்
Hardware - வன்பொருள்
Screen - திரை
Laptop - மடிகணினி
Central Processing Unit - மையச் செயலகம்
Compact Disk - இறுவட்டு /குறுவட்டு
Memory - நினைவகம்
RAM - தற்காலிக நினைவகம்
Control Unit - கட்டுப்பாட்டகம்
registers - பதிவகம்
microprocessor - நுண்செயலகம்
Operating System - இயக்கு தளம்
Digital - எண்ணிமம்
Pointer - சுட்டி
Mouse - சொடுக்குப்பொறி
Binary Numbers (0,1)- இரும எண்கள் /துவித எண்கள்
Internet - இணையம் / இணையத்தளம்
Networking - வலைப்பின்னல் / வலையமைப்பு
Browser - உலாவி
Printer - அச்சுப்பொறி
Server - வழங்கி
Internet Server - இணைய வழங்கி
IC ( Integrated Circuit) - ஒருங்கிணைச் சுற்று
Data - தரவுகள் / Datum - தரவு
Command - கட்டளை
Button - பொத்தான்
Input - உள்ளீடு
Battery/Cell - மின்கலம்
Digital Versatile Disk(DVD)- பல் திறன் வட்டு
Port - பொருத்துவாய்
Liquid Crystal Display (LCD) - திரவப்படிகத் திரையகம்
Super computer - மீத்திறன் கணினி
File - கோப்பு
Output - வெளியீடு
e-mail - மின்னஞ்சல்
Download - பதிவிறக்கம்
Multi-media - பல்லூடகம்
Compiler/ interpreters - நிரல்மொழிமாற்றி
High Level Language - மேல்நிலை நிரல்மொழி
Low Level Language - கீழ்நிலை நிரல்மொழி
Source Language/ Source Code - மூல மொழி
Machine Language - பொறி மொழி
Executable Program - நிறைவேற்றத்தகு நிரல்
Execute - நிறைவேற்று
Source Code Optimizer - மூல மொழி ஊகவுறுத்தி
Code Generator - குறிமுறை இயற்றி/நிரல் இயற்றி
Target Code Optimizer - பெயர்ப்பு மொழி ஊகவுறுத்தி
Tool Bar - கருவிப்பட்டை
IT (information Technology) - தகவல் தொழில்நுட்பம்
Interface- இடைமுகம்/இடைமுகப்பு
table - அட்டவணை
List - பட்டியல்
object oriented language - பொருள்நோக்கு நிரல்மொழி
Data Base - தரவுத்தளம்
Free/Open - கட்டற்ற
Function - செயற்கூறு
modem- இணக்கி
chip - சில்லு


Atomium in Brussels, Belgium


Milwaukee Art Museum
(Museum of Art, Milwaukee). Milwaukee, USA



Church of hallgrimur
(Lutheran Church) in Reykjavik, Iceland



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# Kides KORNER





ஹாய் குட்டீஸ் !
அணிலுக்குப் பழமெடுக்க உதவுங்கள்



ஹாய் குட்டீஸ் !
இதை அழகாக வரைந்து சிறந்த
வர்ணம் தீட்டி
எமக்கு அனுப்பிவையுங்கள்





## HAPPY BIRTHDAY



### அபிராமி

செல்வி வரதுராஜா அபிராமி 28.08.2005 அன்று தனது 6 ஆவது பிறந்த தினத்தை பண்டாரவளையில் தனது இல்லத்தில் கொண்டாடினார் அவரை அப்பா,அம்மா,மாமா பாலன், உஷா, நிஷா, நிகிலேஷ் ஆகியோர் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாக வாழ வாழ்த்தினர்.



### ஷிண்டியா ஷோபியா

திரு. திருமதி. துஷ்யந்தன்,வாணி தம்பதிகளின் செல்வப் புதல்விகளான ஷோபியா, ஷிண்டியா ஆகியோர் தங்களது 2ஆவது பிறந்தநாளை 05.08.2011 அன்று தமது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடினார்கள். இவர்களை அன்பு அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா சித்தி, மாமி மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் சகல ஐஸ்வரியத்துடன் பல்லாண்டு காலம் வாழகவென்று வாழ்த்தினார்கள்.



### ஹர்ஜூனா

திரு.திருமதி செல்வராஜா,விஜயமலர் தம்பதிகளின் கனிஸ்ட புதல்வன் செல்வன் ஹர்ஜுனா தனது 8வது பிறந்த நாளை 28-7-2011 அன்று இல.65/2, 7ம் குறுக்குத்தெரு, திசவீரசிங்கம் மேற்கு, மட்டக்களப்பில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை பாசமிகு அப்பா, அம்மா, அக்காமார், அண்ணாமார், அம்மம்மா, அப்பம்மா, சித்திமார், சித்தப்பாமார், மாமிமார்,மாமாமார், மச்சாள்மார்,மச்சான்மார், மற்றும் உறவினர்கள் அனைவரும் மாமாங்கேஸ்வரர் அருள் பெற்று பல்கலையும் பெற்றுப் பல்லாண்டு காலம் நலமுடன் வாழ வாழ்த்தினார்கள்.



### பவிஸ்யானி

திரு.திருமதி.றோஹனகுமார் அஞ்சுனி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வி பவிஸ்யானி தனது 3ஆவது பிறந்தநாளை 01-09-2011 அன்று ரத்மலானையில் தனது இல்லத்தில் வெகுவிமரிசையாக கொண்டாடுகிறார். அவரை அம்மா அப்பா,அம்மம்மா,தாத்தா,அப்பம்மா,அப்பப்பா,மாமா,சித்தி மற்றும் அத்தைமார் பல்கலையும் பெற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முத்தையா முரளிதரன்

முத்தையா முரளிதரன் (Muttiah Muralitharan, பிறப்பு ஏப்ரல் 17, 1972, கண்டி) பொதுவாக முரளி என்றும் அழைக்கப்படுகிறார். இலங்கையின் மலையகத் தமிழரான இவர் இலங்கைத் துடுப்பாட்ட அணியின் முக்கிய சுழல்பந்து வீச்சாளர் ஆவார். இவர் துடுப்பாட்ட வரலாற்றில் தலைசிறந்த பந்து வீச்சாளராகக் கருதப்படுகிறார். தேர்வு (Test) துடுப்பாட்டப் போட்டிகளில் விளையாடி 800 இலக்குகளை (விக்கெட்டுகளை) வீழ்த்தி உலகசாதனை படைத்துள்ளார். 22 யூலை 2010 அன்று தேர்வுக் கிரிக்கெட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றார். ஒருநாள் பன்னாட்டுத் துடுப்பாட்டத்திலும் இவர் அதிகூடிய இலக்குகளை வீழ்த்திய பட்டியலில் முதலாவதாக உள்ளார். இவரது பந்துவீச்சின் தன்மை குறித்துப் பல சர்ச்சைகள் எழுப்பப்பட்டிருந்தன. ஆனால் ஆய்வுகூடப்பரிசோதனைகளின் பின்னர் சர்ச்சைகள் பொய்யென நிரூபிக்கப்பட்டன. 2004 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகளின் உலக உணவுத் திட்டத்தின் தூதுவராக இணைந்ததோடு வறுமை-எதிர்ப்புத் திட்டமொன்றிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். 2004 ஆம் ஆண்டு ஆழிப்பேரலையில் இருந்து 20 நிமிடங்களில் உயிர் தப்பிய முரளிதரன் பின்னர் அதனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்தார். இலங்கை துடுப்பாட்ட அணியில் விளையாடும் ஒரு சில தமிழர்களில் ஒருவரான முரளி 2005 இல் இந்தியரான மதிமலர் இராமானுதியைத் திருமணம் செய்துக்கொண்டார்.

### ஆரம்ப வாழ்க்கை

சின்னச்சாமி முத்தையா, இலக்ஷ்மி முத்தையா தம்பதிகளுக்கு மகனாக ஏப்ரல் 17, 1972 இல், கண்டி, குண்டகசாலை, நத்தரன் பொத்தவில் முரளிதரன் பிறந்தார். சிறிதரன், பிரபாகரன், சசிகரன் என்ற மூன்று சகோதரர்கள் உள்ளனர். முரளிதரனின் தந்தை இலங்கையில் பிரபல பிஸ்கட் தயாரிக்கும் நிறுனவமான லக்கிலாண்ட் நிறுவனத்தின் உரிமையாளர் ஆவார். கண்டி புனித அந்தோனியார் கல்லூரியில் பாடசாலைக் கல்வியைப் பயின்ற முரளிதரன், பாடசாலைத் துடுப்பாட்ட அணியில் விளையாடி அதற்குத் தலைமையும் தாங்கியிருந்தார். பாடசாலைக் காலத்தில் வேகப்பந்து வீச்சாளராக இருந்த முரளிதரன் அச்சமயம் பாடசாலை துடுப்பாட்ட அணியின் பயிற்றுனர் சுனில் பெர்னாண்டோவின் ஆலோசனைக்கேற்ப சுழல்பந்து வீச்சைத் தொடங்கினார். 1990 மற்றும் 1991 ஆம் ஆண்டுகளில் இலங்கையின் பாட்டா நிறுவனம் வழங்கும் "பாட்டா ஆண்டின் சிறந்த பாடசாலைத் துடுப்பாட்ட வீரர்" என்ற விருதைப் பெற்றார். 1991ஆம் ஆண்டு தமிழ் யூனியன் துடுப்பாட்டக் கழகத்தில் இணைந்து தனது துடுப்பாட்ட வாழ்வை ஆரம்பித்தார்.




### துடுப்பாட்ட வீரராக

இலங்கை அணிக்காக முதல் தேர்வுத் துடுப்பாட்டம் போட்டியில் 1992 இல் ஆஸ்திரேலியாவுக்கு எதிராகக் கொழும்பு பிரேமதாச அரங்கில் விளையாடினார். தனது முதல் ஒருநாள் பன்னாட்டுத் துடுப்பாட்டப் போட்டியை ஆகஸ்டு 12, 1993 இல் இந்திய அணிக்கு எதிராகக் கொழும்பு பிரேமதாச அரங்கில் விளையாடினார். துடுப்பாட்ட உலகின் பைபிள் என வர்ணிக்கப்படும் விஸ்டன் சஞ்சிகை உலகின் தலைசிறந்த வீரராக முரளிதரனைத் தெரிவு செய்துள்ளது. இந்த விருது வழங்கும் முறை உருவாக்கப்பட்டு நான்காவது வீரராக இம்முறை முரளிதரன் விஸ்டன் சஞ்சிகையால் தெரிவு செய்யப்பட்டுள்ளார். ஏற்கனவே, இந்த விருதுகளை அவுஸ்திரேலியாவின் றிக்கி பொன்டிங் மற்றும் ஷேன் வோர்ன், இங்கிலாந்தின் அன்றூ பிளின்டோவ் ஆகியோர் பெற்றுள்ளனர். 1992 இல் இலங்கை அணிக்கு விளையாடத் தொடங்கியதில் இருந்து இதுவரை 800 தேர்வு இலக்குகளையும் 500க்கும் அதிகமான ஒருநாள் இலக்குகளையும் வீழ்த்திச் சாதனை புரிந்துள்ளார்.

### முத்தையா முரளிதரனின் பல உலக சாதனைகள்...

- தேர்வு மற்றும் ஒருநாள் ஆட்டங்களில் மொத்தமாக அதிகூடிய இலக்குகள் பெற்றவர் (1155 இலக்குகள் ஜூலை 14 2007 இன் படி)
- தேர்வுத் துடுப்பாட்டத்தில் போட்டியொன்றில் 10 இலக்குகளுக்கதிகமாக அதிக சந்தர்ப்பங்களில் பெற்றவர் (20).
- தேர்வுத் துடுப்பாட்டத்தில் போட்டியொன்றில் 5 இலக்குகளுக்கதிகமாக அதிக சந்தர்ப்பங்களில் பெற்றவர் (60)
- ஜிம் லேக்கர் (இங்கிலாந்து) மற்றும் முரளிதரன் மாத்திரமே தேர்வு துடுப்பாட்டத்தில் சுற்று ஒன்றில் 9 இலக்குகளை இருமுறை பெற்றவர்களாவர்.
- தேர்வுத்துடுப்பாட்ட நாடுகள் அனைத்திற்கும் எதிராக 50 இலக்குகளைப் பெற்ற ஒரே வீரர்.
- தேர்வுத்துடுப்பாட்ட நாடுகள் அனைத்திற்கும் எதிராக ஒரு போட்டியில் 10 இலக்குகளைப் பெற்ற ஒரே வீரர்.
- வேகமான 350, 400, 450, 500, 550, 600, 650 மற்றும் 700 தேர்வு இலக்குகளைப் பெற்றவர்.
- நான்கு அடுத்தடுத்த தேர்வுப் போட்டிகளில் 10 இலக்குகளைப் பெற்ற ஒரே வீரர். முரளி இதனை இருமுறை செய்துள்ளார்.
- தேர்வுத் துடுப்பாட்டத்தில் நேரடி ஆட்டமிழப்புகள் அதிகமாகக் கொண்ட வீரர் (153) அதிக சாதகமான களத்தர் பந்துவீச்சாளர் சேரடி பிடி மஹேல ஜயவர்த்தன - பந்து முரளி (63)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# EDUCATION EXPRESS

# கல்வி என்பது....?

பாடசாலைகள் தரமான கல்வியை வழங்கும் நோக்குடன் அன்றுதொட்டு இன்று வரையிலும் பல்வேறு காலகட்டங்களில் மாணவரின் நலன் கருதி அரசு கல்வியமைச்சின் ஊடாகப் பலவாறான செயற்றிட்டங்களை அமுல்படுத்தி வருகின்றது. இச்செயற் திட்டங்கள் யாவும் இந்நாட்டுப் பிள்ளைகள் எந்தவிதமான தங்குதடையுமின்றிச் சீரான கல்வியை இடையறாது தொடரவும் அதற்கான ஊக்குவிப்பாக அவர்களுக்கான நூல்களும், சீருடை மற்றும் உணவு போன்றனவும் வழங்கப்பட்டு வருகின்றமை நாமறிந்த விடயம்தான். அதுமட்டுமா ? மாணவர்களுக்கு எவ்வாறு கற்பித்தலை மேற்கொள்ள வேண்டும் என்பது தொடர்பாகக் பல்வேறு நுணுக் கங்கள், ஆலோசனைகள், வழிகாட்டல்கள், உளவியற் கருத்துக்கள் போன்றவற்றையும் ஆசிரியருக்குப் பயிற்றுவித்து அதன் ஊடாகச் சிறந்த கல்வியையும், சீர்மிகு ஒழுக்க விழுமியங்களுடன் கூடியதான நாட்டிற்குகந்த பண்பாளனாகவும் மாற்றி நாளைய உலகின் தலைசிறந்த தலைவர்களையும், நாட்டுப்பற்றாளர்களையும், இன்னும் பல நோக்குகளையும் அடைந்து கொள்வதற்காகப் பாடசாலைக் கல்வி நடைமுறை தரம் ஒன்றிலிருந்து ஆரம்பித்து உயர்தரம் வரையிலும் வியாபித்து செல்கின்றது. ஆனால் இவ்வாறான நடவடிக்கைகள் அனைத்தும் வயதின் அடிப்படையிலும், உளரீதியான மனோ எழுச்சிகளின் அடிப்படையிலும் காலத்திற்குக்காலம் அறிஞர்கள் பலரின் ஒத்துழைப்புடனும் காலத்திற்கேற்றவாறு பாடங்களும், பாடத்திட்டங்களும், பிள்ளைகளின் நடத்தைவாத ஆய்வுகளின் பேறாகவும், நவீன உலகின் போக்குக்கு ஏற்பவும் கல்வித்துறை பாரிய பங்களிப்பினை ஆற்றிவருகிறது. கோடானு கோடி ரூபாய் களைச் செலவு செய்து மாணவர்களின் புரிந்துணர்வினைக் கைக்கொண்டு வெற்றி நடைபோடும் பாடசாலைக் கலைத்திட்டத்தின் உயிர் நாடியாக மாணவர்கள் திகழ்கிறார்கள். மாணவர்கள் இல்லை என்றால் எதற்குப் பாடசாலைகள்? என்கிற வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் தரம் ஒன்றில் சேருகின்ற பிள்ளைகளைச் சரியான முறையில், கற்பிக்கின்ற ஆசிரியர் அறிந்து கொண்டால் கற்றலுக்கான வழித்துணை அனைத்துமே சரியாக அமைந்துவிடும். 'முதற்கோணம் முற்றும் கோணம்' என்பார் மூத்தோர்கள். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? என்ன! இதுவும் நாம் தரப்போகிற விடயத்திற்கு ஒத்துழைக்கும் என நம்புகிறேன். சரி விடயத்திற்கு வருவோம். இன்று பாடசாலைகளில் தரம் ஒன்றில் பிள்ளைகளைச் சேர்ப்பதற்குப் போட்டியோ போட்டி, ஆறு மாதங்களுக்கு முன்னர் விண்ணப்பித்தும் சிலவேளை தாம் எதிர்பார்த்த பாடசாலையில் தனது பிள்ளைகளுக்கு இடம் கிடைக்கவில்லை என்கிற ஆதங்கம் ஒருபுறம் பெற்றோருக்கு. சில பாடசாலைகளில் பிள்ளைகளே சேரவில்லை என்கிற நச்சரிப்புக்கள் சில பாடசாலைகளின் அதிபர்களுக்கு, வகுப்பில் 40 க்கும் மேற்பட்ட மாணவர்களை என்ன செய்வது என்றே தெரியவில்லை என்கிற பிரச்சினை பெரிய பாடசாலைகளில். இவ்வாறு தரம் 1 இல் மாணவர்களைச் சேர்க்கின்ற நிலையில், அல்லற்படுகின்ற போது கல்வியமைச்சின் புதிய புதிய சுற்று நிருபங்கள் தரம் 1 இல் பிள்ளைகளை சேர்ப்பதில் இழுபறி இவற்றையும் தாண்டிப் பிள்ளை ஏதோர் பாடசாலையில் சேர்ந்த நிம்மதியில் பெற்றோர் இருந்து விடுகின்றனர். இனிமேல்தான் ஆரம்பிக்கிறது மாணவர்களின் தொழிற்பாடுகள். உண்மையில் பிள்ளை தரம் ஒன்றில் பாடசாலைக்கு வருமுன்னராக பெற்றோரையும் தன் சுற்றத்தாரையும், குறிப்பிட்ட உறவினரையும் பார்த்துப் பழகிய பிள்ளைக்குப் பாடசாலைச் சூழல் பாரியதோர் பிரச்சினையைத் தோற்றுவிக்கலாம். அப்போதுதான் தரம் ஒன்று கற்பிக்கின்ற ஆசிரியர் சரியான முறையில் மாணவர்களை இனங்கண்டு அவர்களை அறிந்து கொள்வதன் ஊடாகப் பாடசாலைக்கும், வீட்டுக்கும் இடையிலான தொடர்பைச் சிறந்த முறையில் பேணி, மாணவர்களினது கற்றலுக்குத் தயாராகும் நடவடிக்கைகளை ஆரம்பிக்க உதவும் இச்செயற்பாட்டைக் கட்டாயம் ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் செய்தேயாக வேண்டிய நிலைக்கு உட்படுகின்றனர். ஆதலால்தான் இதனை முறையாகச் செய்ய வேண்டும் என்பதற்காகவும் கடந்த 1999 ஆம் ஆண்டிலிருந்து நாட்டில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கல்வி மறுசீரமைப்பினைத் தொடர்ந்து, பின்னூட்டல் வேலைத் திட்டங்களினூடாகவும் கண்டறியப்பட்ட பல்வேறு விடயங்களையும் கருத்திற்கொண்டு, தேசிய கல்வி நிறுவகம் கடந்த 2005 ஆம் ஆண்டிலிருந்து முதலாம் தரத்தில் பாடசாலைக்குப் பிரவேசிக்கின்ற பிள்ளைகளை அறிந்து கொள்ளும் நோக்குடன் "பிள்ளைகளை அறிந்து கொள்வோம்" எனும் வேலைத்திட்டத்தை அறிமுகப்படுத்தி வருகின்றது.

இந்நடைமுறையானது பிள்ளைகளினது மனமகிழ்ச்சியைத் தொடராக வைத்திருந்து பாடசாலையும், வீடும் ஒரேயமைப்புடனே காணப்படுகிறது என்கிற உள்ளார்ந்த நிலையை இப்பாலகப் பிஞ்சுள்ளங்களில் படிப்படியாக உரமேற்றுவதற்குரிய வேலைத்திட்டங்களைத் தயாரித்து அதனூடாகக் கற்றலை ஒரு யுக்தியாக மேற்கொள்ளும் நோக்காவே இவை கருதப்படுகிறது. அவ்வாறு மேற்கொள்ளப்படுகின்ற விடயங்களை தேசிய கல்வி நிறுவகத்தின், ஆரம்பக் கல்வி, விசேட கல்விப்பிரிவு, பாடவிதான அபிவிருத்தி நிலையம் என்பன இணைந்து கல்வி வெயியீட்டுத் திணைக்களத்தின் உதவிகொண்டு இதனையொரு கையேடாக பாடசாலைகளுக்கு வழங்கியும் உள்ளன.


இதனில் காணப்படுகின்ற 16 வேலைத்திட்டங்கள் உண்மையாகவே பிள்ளைகளை அறிந்து கொள்வதற்கான வேலைத்திட்டத்திற்கு மேலும் வலுவூட்டி இரசனை மிக்கதாக்கும் நோக்குடன் பின்வரும் குறிக்கோள்களையும் அடையும் நோக்குக்கு அமைய இவைகள் திட்டமிடப்பட்டுள்ளன எனலாம். அவைகளாவன:

தரம் ஒன்றில் பிரவேசிக்கும் பிள்ளைகளிடத்தில் பாடசாலை தொடர்பான விருப்பை ஏற்படுத்தவும் தரம் 1 இல் சேருகின்ற மாணவர்களுக்கிடையிலான நட்பினை உருவாக்கிக் கொள்ளவும்.

மாணவருக்கும் ஆசிரியருக்குமிடையிலான நட்பினை ஏற்படுத்தவும்.

இப்பருவப் பிள்ளைகளின் உள்ளார்ந்த ஆற்றல்களை ஆரம்பத்தி லிருந்தே ஆசிரியர் இனங்காணவும்.

தொடரும்......



தொடரும்.........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளி சிறப்பிதழ்

எமது Global Express ன் இலவச மாதாந்த சஞ்சிகையின் ஐப்பசி மாத இதழான தீபங்கள் ஜொலிக்கும் இனிய "தீபாவளி" திருநாள் சிறப்பிதழைச் சிறப்பித்து உங்கள் அபிமான வாடிக்கையாளர்களுக்கும், அன்பான நண்பர்களுக்கும் உங்கள் வியாபாரத்தை மெருகேற்றும் அழகிய விளம்பரங்கள் மூலம் இனிய வாழ்த்துக்களைப் பரிமாறிக்கொள்ளுங்கள்.

விளம்பர முன்பதிவுகளுக்கு :

+94 777 38 44 62
+94 777 38 44 73
+94 112 55 67 77

## Global Express விநியோகஸ்தர்கள்

### யாழ்ப்பாணம்
Sangeetha Mobile Link,
No.412,Hospital Road,Jaffna.
Tel:021-2222525
Mob : 071-8739852

### மன்னார்
Mr.N.Mahendran,
No.91,Aum Saravanabava illam,5th cross Street,
Sinnakadai, Mannar.
Tel : 023-2222026 Mob : 071-6811895

### வவுனியா
KPK Book Centre,
Central Bus Stand,
Vavuniya.
Tel : 024-2222504

### திருகோணமலை
Manis Café
No.333,Main Street,Tricomalee.
Tel : 026-2220493

### மட்டக்களப்பு
Nishil's hair & Beauty salon and Academy
No.362/1/1,Trinco Road,Batticaloa.
Mob : 071-8159006

### கல்முனை
Mr.Nowfeer,
No.222,Hanifa Hotel,
Main Street, Kalmunai.
Tel : 067-2221925

### கண்டி
Mr.Umamaheswaran, Srilanka Traders,
No.195,Main Street,Mawanella,Kandy
Tel : 0777-533233,035-7200128,
Res : 081-2467528

### கொழும்பு
Spice Global (Pvt) Ltd,
No.48/3,1/1,Dharmarama Road,
Colombo-06.
Tel : 0112556777, 0112556774

மேலுள்ள விநியோகஸ்தர்களிடம் உங்கள் இலவச இதழைப் பெற்றுக்கொள்ளுங்கள்

**உங்கள் ஆக்கங்கள், கருத்துக்கள்,ஆலோசனைகள் ஆகியவற்றை எமக்கு எழுதி அனுப்பி வையுங்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்னியா வெந்நீரூற்று



## வரலாறு

தமிழ் வரலாற்றின் படி, பத்துத் தலை படைத்த இராவணன் தனது தாயாருக்கு இறுதிக் கிரியைகள் செய்வதற்காகஉடைவாளை உருவி ஏழு இடங்களில் குத்தியதாகவும் அந்த இடங்களில் இந்த வெந்நீர் ஊற்று உருவாகியதாகவும் ஐதீகம் உண்டு.தற்போதைய நிலை தற்போது பெருமளவு சுற்றுலாப் பயணிகள் இங்கு சென்று நீராடுகின்றனர். எனினும் உல்லாசப்பயணிகள் நீராடும் அளவுக்குப் போதியளவு நீர் அங்கு இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது இலக்கியம் கன்னியாவில் உள்ள ஏழு வெந்நீரூற்றுகள் பற்றிய

**நவாலியூர் சோமசுந்தரப் புலவரது ஒரு பாடல்:**

காதலனைப் பிரிந்தவளின் மனம் போல ஒன்று
கவி பாடிப் பரிசு பெறான் மனம் போல ஒன்று
தீது பழி கேட்டவன் தன் மனம் போல ஒன்று
செய்த பிழைக் கலங்குபவன் மனம் போல ஒன்று
நீதி பெறா வேளைதுயர் மனம் போல ஒன்று
நிறைபழித்த கற்புடையாள் மனம் போல ஒன்று

திருக்கோணமலை இலங்கையின் கிழக்குப் பகுதியிலுள்ள முக்கிய நகரங்களில் ஒன்றாகும். இதே பெயரே இந்த நகரம் அமைந்துள்ள மாவட்டத்துக்கும் வழங்கி வருகின்றது. இலங்கையின் கீழ் கரையில் அதாவது கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ளது. இதன் எல்லைகளாக அனுராதபுரம், பொலநறுவை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்கள் அமைந்துள்ளன.

இங்குள்ள இயற்கைத் துறைமுகம் காரணமாக இந்த நகரம் இலங்கைக்கு வெளியிலும் அறியப்பட்ட ஒன்றாகும். இங்கு அமைந்துள்ள தொன்மையான சிவன் கோயிலான திருக்கோணேஸ்வரம் கோயிலும் இலங்கையிலும் வெளிநாடுகளிலுமுள்ளஇந்து மக்கள் மத்தியில் பரவலாக அறியப்பட்டதாகும். இது கி.பி ஏழாம் நூற்றாண்டில் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரின்பாடல் பெற்ற தலமாகும். இது மட்டுமன்றி இலங்கையின் இன அரசியலிலும் திருக்கோணமலை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். 1987ல் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் தற்காலிகமாக இணைத்து நிர்வகிக்கப்படுகின்ற வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் தலைநகரமாகத் திருகோணமலையே விளங்கியது.

இது பண்டைய காலம் முதலே பிரபலமான துறைமுகமாக இருந்துள்ளது. ஒல்லாந்தர், ஆங்கிலேயர்,போர்த்துக்கேயர், பிரஞ்சு போன்றோரின் ஆட்சிக்குட்பட்டு இருந்தது. பிரட்ரிக் கோட்டை மேற்கத்தேய ஆதிக்கத்தின் எச்சமாக இன்றும் நகரில் காணக்கூடியதாக உள்ளது. இந்த கோட்டையினுள்ளேயே புகழ் பூத்த திருக்கோணேச்சர ஆலயம் அமைந்துள்ளது. கன்னியா வெந்நீரூற்று திருகோணமலை மாவட்டத்தில் உள்ள ஒரு இயற்கை வெந்நீரூற்று ஆகும். குறிப்பிட்ட அந்த இடத்தில் 90 - 120 செ.மீ ஆழமுடைய ஏழு சிறிய சதுர வடிவான கிணறுகள் அமைந்துள்ளன. இயற்கையாகவே ஏற்பட்டிருந்த வெந்நீரூற்றில், நாளடைவில் செயற்கைக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கிணற்றிலுமிருந்தும் வெவ்வேறு வெப்பநிலையில் நீர் ஊறி வந்து கொண்டிருக்கும். உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் இந்த வெந்நீரூற்று இலங்கையில் நடந்த உள்நாட்டுப் பிரச்சினைக் காலத்தின் போது சோபை இழந்து காணப்பட்டது. ஆயினும் யுத்தம் நிறைவடைந்த பின்னர் தற்போது அதிகமாக உல்லாசப் பிரயாணிகளைக் கவரும் ஒரு உல்லாசப் பிரயாண மையமாக இந்த கிணறுகள் திகழ்கின்றன. யுத்தம் நிறைவடைந்த பின்னர் இந்த உல்லாச பிரயாண மையத்தைச் சிங்களமயமாக்கும் நடவடிக்கைகள் நடைபெறுவதாக சிலர் எதிர்ப்புகளைத் தெரிவித்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விவேகானந்தர்

## மக்கள் தொண்டே மகேசன் தொண்டு

கடவுள் ஒவ்வொரு ஜீவனிலும் குடி கொண்டிருக்கிறார். இதைத்தவிர தனியாக வேறு ஒரு கடவுள் இல்லை. இந்த உண்மையை நாம் புரிந்து கொள்ளவேண்டும். மக்களுக்கு சேவை செய்பவன் உண்மையில் கடவுளுக்கு சேவை செய்பவனாகிறான். ஆண்டவனைத்தேடி நீங்கள் எங்கே போகிறீர்கள்? துன்பப்படுபவர்கள், ஏழைகள், பலவீனர்கள் இவர்கள் எல்லோரும் அத்தனைத் தெய்வ வடிவங்களே அல்லவா? ஏன் முதலில் இவர்களை ஆராதிக்கக்கூடாது? ஏழைகளை உங்கள் கடவுளாகக் கொள்ளுங்கள். அவர்களைப்பற்றி சிந்தியுங்கள் அவர்களுக்காக தொண்டு செய்யுங்கள், அவர்களுக்காக அவர்களுக்காக இடைவிடாமல் பிரார்த்தனை செய்யுங்கள் அப்போது ஆண்டவன் உங்களுக்கு வழிகாட்டுவான்.

உலகில் வாழும் மக்களும் மற்ற உயிர்களும்தான் நமது தெய்வங்கள். அதனால் முதலில் நம்மைச்சுற்றி இருப்பவர்களைத் தெய்வமாக நினைத்து வழிபடுங்கள். இதுவே நாம் தொண்டாடுவதற்குரிய வழிபாடாகும். பிறர் பொருட்டு இந்த ஒரு பிறவியை நீங்கள் தியாகம் செய்யுங்கள். வேதாந்தம் செய்வது, தியானம் செய்வது முதலிய காரியங்களை அடுத்த ஜன்மத்துக்கு வைத்துக்கொள்ளுங்கள். நாம் மற்றவர்களுக்கு செய்ய வேண்டிய கடமை, பிறருக்கு உதவி புரிவதும், இவ்வுலகிற்கு நன்மை செய்வதும்தான்.

உயர்ந்த பீடத்தில் நின்று உன்கையில் ஐந்து காசுகளை எடுத்துக்கொண்டு "ஏ பிச்சைக்காரா! இதை வாங்கிக்கொள்" என்று நீ சொல்லாதே. மாறாக, அவனுக்குக் கொடுப்ப தனால் உனக்கு நீயெ உதவி புரிந்துகொள்ள முடிந்ததை நினைத்து அந்த ஏழை அங்கேயிருந்ததற்காக அவனிடம் நன்றியுள்ளவனாக இரு. கொடுப்பவன் தான் பாக்கியசாலியே தவிர, பெறுபவன் அல்ல.இந்த உலகில் உன்னுடைய தர்ம சிந்தனையும் இரக்க மனப்பான்மையையும் பயன்படுத்த வாய்ப்புக் கிடைத்திருப்பதற்காக நீ நன்றியுள்ளவனாக இரு. இதன்மூலம் தூய்மையும் பரிபூரணத்தன்மையும் உன்னை வந்தடையும். பிறர் நலத்தினைப்பொருட்டு உழைப்பது மனதின் கோணல்களை திருத்துகிறது. சுயநலமா இல்லையா என்பதை உனது மனச்சாட்சியையே முதலில் கேட்டு தெரிந்து கொள். சுயநலம் என்பது இல்லையானால், பிறகு எதனையும் நீ பொருட்படுத்த வேண்டாம். எதுவும் உன்னைத் தடைசெய்யமுடியாது. செயலில் இறங்கு: அருகில் இருக்கும் செயலைச் செய்யச் செய்ய உண்மை உனக்கு எளிதில் புலப்படும்.

இதயபூர்வமாகக் காரியங்களைச் செய்பவனுக்கு இறைவனும் உதவிபுரிகிறான். ஆகவே உன்னால் இயன்றவரையில் நற்செயல்களைச்செய். உலகில் வாழும் உயிர்களுக்குத் தொண்டு செய்வதைக்காட்டிலும் சிறந்த அறம் வேறில்லை. உண்மையோடு ஒருவன் இந்த ஓர் அறத்தைக் கடைப்பிடிப்பானானால் அவன் முக்திப்பெறுவது நிச்சயம். திக்கற்றவர், ஏழை, எளியவர், கல்வி அறிவு இல்லாதவர்கள் ஆகியோருக்கு சேவை செய்வதை முக்கிய நோக்கமாக கொள்ளுங்கள். இவர்களுக்கு தொண்டு செய்தபின் நேரம் இருந்தால் உயர்குல மக்களுக்கு தொண்டு செய்யுங்கள்.

நமது நாட்டில் ஒரு நாய் உணவில்லாமலிருந்தாலும் அதற்கு உணவிடுவதே நமது மதமாகும்.

எழுந்திருங்கள் ஆண்மையுடன் பிறருக்கு தொண்டு புரிவதல் ஈடுபடுங்கள். எனது முதல் அறிவுரையாக, உன்னுடைய அறையிலுள்ள எல்லாக் கதவுகளையும், ஜன்னல்களையும் திறந்துவிடு. நீ வாழும் பகுதியில் ஏராளமான ஏழை மக்கள் வாழ்வதை காண்பாய். நீ அவர்கள் அணுகிச்சென்று ஆர்வத்துடனும், உற்சாகத்துடனும் தொண்டு செய். நோயாளிகளுக்கு தேவையான மருந்துவகைகளை வழங்க ஏற்பாடு செய். அறியாமையில் உள்ளவனுக்கு அறிவைப்புகட்டு. இப்படி நீ தொண்டு செயவாயேயானால் நிச்சயம் உனக்கு அமைதியும் ஆறுதலும் கிடைக்கும்.

மக்களிடம் சென்று "சோம்பலை ஒழித்து எழுந்திருங்கள், சோம்பியிருப்பதனால் பயனில்லை" என்பதை அவர்கள் உணரும்படிச் செய்யுங்கள். இன்னும் எவ்வளவு காலத்திற்குத்தான் அறியாமை என்ற தூக்கத்தில் ஆழ்ந்திருக்கப் போகிறீர்கள் என்று கூறி அவர்களைச் சீர்படுத்தி எவ்வாறு உயர்வு பெற முடியும் என்று விளக்கிக்கூறுங்கள். அத்துடன் நமது சாஸ்திரங்களில் சொல்லி இருக்கும் மகத்தான உண்மைகளையும் அவர்களுக்கு புரியும் படிச்செய்யுங்கள். அறிவுள்ளவர்கள் அறிவற்றவர்களிடம் பரிவு காட்டவேண்டும். அறிவுள்ளவன் ஒரு சிறு எறும்புக்காககூட தன்னுயிரைத் தியாகம் செய்வான். அவனுக்குத் தெரியும் உடல் அழியக்கூடியது என்று.

அமைதிக்காக உழைத்து அமைதியுடன் வாழ்பவர்கள் பாக்கியசாலிகள். பிறருக்காக வாழ்பவர்களே வாழ்வார்கள். மற்றவர்கள் நடைப்பிணத்திற்கு சமமானவர்களே. அதிகாரம், பதவி போன்றவை தாமதமாகவே தேடிவரும். நீங்கள் உழைப்பை பயன்படுத்துங்கள் அப்போது தாங்க முடியாத அளவுக்கு உங்களிடம் ஆற்றல் பெருகிவருவதை காண்பீர்கள். பிறருக்குச் செய்யும் அற்ப சேவை கூட உங்களிடம் பேராற்றலை விழிப்புறச் செய்யும் அதன் மூலம் நாளடைவில் உங்கள் மனம் சிங்கத்தை ஒத்த ஆற்றலைப் பெற்றுவிடும். உலகத்தில் கொடுப்பவனின் நிலையிலேயே நீ எப்போதும் நில். ஒவ்வொன்றையும் கொடுத்துவிடு, பிரதிபலனாக ஒன்றையும் எதிர்பார்க்காதே, அன்பைக்கொடு. உதவியைக்கொடு, பணியைக்கொடு, உன்னால் இயன்றளவு சிறிதாவது கொடு. ஆனால் அதனபொருட்டு விலை பேசுவதை ஒழித்துவிடு. நிபந்தனைகளை ஏற்படுத்தாதே. நம்மீது நிபந்தனை ஏதும் சுமத்தாமல், இறைவன் நமக்கு கொடுப்பதைப்போல. நமது தாராளமனத்தால் நாமும் கொடுப்போமாக. உங்கள் சகோதரர்களுக்கு தலைமை வகிக்க முயல வேண்டாம் அவர்களுக்கு ஊழியமே செய்யுங்கள். அனைவரையும் சரிசமமாக கருதுவீர்களாக. உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற வேறுபாட்டுணர்வாகிய பாவத்தை உங்களிடமிருந்து கழுவித்தூய்மை பெறுங்கள். நாம்அனைவரும் சரிசமமானவர்கள். உலகிற்கு நன்மை செய்வதே நமது நோக்கமாட்டும்என்றும் நலைத்திருப்பது தன்னலத்தியாகமே. சுயநலமல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏக்கம்...



இரு மனதுடன் பாதைக்கு வந்த கௌரி ஒரு தீர்மானத்துடன் தனது ஊருக்கான பயணத்தை தொடர்ந்தாள். மாலையாகி தனது ஊருக்கு வந்த கௌரி பஸ்ஸை விட்டு இறங்கி சுமார் ஒரு கிலோ மீட்டர் தூரமுள்ள தனது வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தாள். செல்லும் வழியில் தனது எதிர்காலம் பற்றிய சிந்தனையை சற்று சிந்திக்கலானாள். தன்னை நம்பியிருக்கன்ற தாய், தங்கை இருவரின் எதிர்காலத்திற்கு தனது வாழ்வை அர்ப்பணித்துக் வாழ்க்கையை ஏற்படுத்திக் கொள்ளவும் வேண்டும் என்ற எண்ணினாள்

கொள்ளவும், தனக்கென ஒரு கௌரி.

தனது மகளைக் கண்டவுடன் அவள் தாய்க்கு தலைகால் புரியாத சந்தோசம், கௌரியின் தங்கை மீனாவுக்கோ அதைவிட சந்தோசமாக இருந்தது. அதே நிலைதான் கௌரிக்கும். ஏனெனில் கௌரி பல்கலைக்கழகத்தில் படிக்கின்ற காலத்தில் ஒரு முறைதான் வீட்டிற்கு வந்துபோய் இருக்கின்றாள். குடும்ப சூழ்நிலை அவளை வீண் செலவுகளிலிருந்து கட்டுப்படுத்தி இருந்தது. படிக்கும் காலத்தில் ஹாஸ்டலை விட்டு எங்கும் அதிகமாக செல்லமாட்டாள். இதனால் நண்பர்களிடமும் பேச்சு வாங்கியிருக்கின்றாள். ஓய்வு நேரங்களில் கௌரி தனது கவனத்தையெல்லாம் படிப்பில் செலுத்தினாள் அதனால்தான் முதல் மாணவி என்ற பெயரையும் அவளால் பெற்றுக் கொள்ளக் கூடியதாக அமைந்தது. இடையில் தனக்கு ஏற்பட்ட அந்த சபலத்தையும் எண்ணி கவலை அடைந்தும் இருக்கின்றாள். இவை எல்லாவற்றிற்கும் மேலாக தான் முதன் முதலில் வீட்டிலிருந்து பல்கலைக்கழகத்திற்கு செல்லும் போது என்ன தீர்மானம் எடுத்தாளோ அதை நிறைவேற்ற வேண்டிய கடமையை நினைத்து எல்லாவற்றிற்கும் ஒரு முற்றுப் புள்ளி வைக்க மனதை திடப்படுத்திக் கொண்டுதான் வீட்டிற்கு வந்து சேர்ந்தாள்.

வீட்டிற்கு வந்த கௌரியிடம் சுகம் விசாரித்து விட்டு "மகளே கொஞ்சம் இரு தேத்தண்ணி போட்டுத்தாரன்" என்று அடுப்பை பத்தவைத்தவள் சின்னமகளிடம் சொல்லி பக்கத்து வீட்டிலிருந்து கொஞ்சம் பாலை வாங்கி நல்ல சூடாக ஒரு டம்லரில் தேத்தண்ணீ கொண்டு வந்து கொடுத்தாள். அதை கையில் வாங்கிய கௌரி தனது வீட்டு நிலமை எப்படி என்பதை ஏற்கனவே அறிந்தவளாதால், தனத தாயிடம் " அம்மா இனி இந்த கஸ்டம் எல்லாம் ஒரு சில காலத்திற்குத்தான், நானும் பரீட்சையில் நல்ல சித்தியடைந்துள்ளேன். அதற்கேற்றாற் போல் எனக்கு ஒரு நல்ல வேலையும் கிடைச்சிருக்கு இனிமேல் வீட்டை பராமரிக்க வேண்டியது எனது கடமை" என்று கூறி தேநீரை குடித்தாள். அதன் பிறகு வந்த களைப்புத்தீர பக்கத்திலிருந்த பாயை எடுத்துப்போட்டு ஒரு குட்டி தூக்கம் போட்டாள் கௌரி.



அவள் தூங்கி எழும்புவதற்குள் அவளது தாய் அவசர அவசரமாக வீட்டிலிந்த பொருள்களைக் கொண்டு சமையலை முடித்திருந்தாள். தூங்கி எழுந்தவளை "கௌரி போய் பீலியில் குளிச்சிட்டு வா சாப்பிடலாம் அப்பறம் மத்த விசயங்களைப் பற்றி பேசலாம்" என்றாள். கௌரியும் தனது தங்கையையும் கூட்டிக்கோண்டு குளிக்கச் சென்றாள். அங்கு அவளுடன் சின்ன வயதில் படித்தவர்களும் தெரிந்தவர்களும் அவளிடம் சுகம் விசாரித்தார்கள். எல்லோரிடமும் பேசிவிட்டு, குளித்து முடித்து வீடுக்கு வந்தாள். வீட்டிற்கு வந்தவளுக்கு உள்ளத்தில் நல்ல தெளிவும் பிறந்திருந்தது. நீண்ட நாட்களுக்கு பிறகு தனுது குடும்பத்துடன் சாப்பிடும் போது அவளுடைய மனம் சந்தோசமாகவும், அமைதியாகவும் இருந்தது. இனிமேல் தங்கை மீனாவை நன்றாக படிக்கவைக்க வேண்டும், தாயையையும் அவளுடைய சுமைகளிலிருந்து விடுவிக்க வேண்டும் அதற்கேற்றாற் போல் செயல்பட திட்டம் போட்டாள். இதையெல்லாம் செய்வதற்கு முதலில் தனக்கு கிடைத்த வேலையை பொறுப்பேற்க வேண்டும் அப்பொழுதுதான் தன் எண்ணம் நிறைவேறும் என்ற தீர்மானத்திற்கு வந்த கௌரி. தன்னுடைய பல்கலைக்கழக தோழிக்கு விரிவாக ஒரு கடிதமூலம் அறிவித்தாள். தனக்கு இடையில் ஏற்பட்ட மனக்குழப்பத்தையும், ஏக்கத்தையும் மறந்தாள். தனது புது வாழ்க்கையில் தனது பயணத்தை தொடரப் போகிறாள் கௌரி.

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுற்றுலா பக்கம்



## பாதுகாப்பான சுற்றுலா செல்ல....




சுற்றுலா என்பது நம் அன்றாட வாழ்க்கைச் சூழலில் பெற முடியாத ஒரு மகிழ்ச்சியையும், பல புதிய இடங்களைப் பார்ப்பதால் அடையும் திருப்தியையும் கொடுப்பதாகும். ஆனால் அந்தச் சுற்றுலாவை நாம் பாதுகாப்பான முறையில் செய்தால்தான் அது நம் நினைவில் நீங்கா இடம் பிடிக்கும்.

பாதுகாப்பான சுற்றுலா சென்று வருவதற்கான சில குறிப்புகள் :

பலரும், பகல் பொழுதை சுற்றுலா தலங்களைக் காண்பதற்கு ஒதுக்கிவிட்டு, பயணத்திற்காக இரவு நேரத்தை தேர்வு செய்வார்கள். ஆனால், பயணத்திற்காக இரவு நேரத்தை தெரிவு செய்வது மிகவும் தவறாகும். பல விபத்துக்கள் இரவு நேரத்தில்தான் நடக்கின்றன. எனவே முடிந்த வரை பகல் நேரத்திலேயே உங்களது பயணத்தை வைத்துக் கொள்ளுங்கள். இரவில் நன்றாக தூங்கினால்தான் உங்களால் சுற்றுலா தலங்களை உற்சாகத்துடன் காண முடியும். நீங்கள் சுற்றுலா செல்லும் இடங்கள் பாதுகாப்பானவையா என்பதை முதலில் தெரிந்து கொள்ளுங்கள். அபாயம் நிறைந்த இடங்களுக்கு சுற்றலா செல்வதை தவிர்த்துவிடுங்கள். அதிலும் குடும்பத்துடன் இதுபோன்ற இடங்களுக்குச் செல்வது முறையல்ல. ஒரு இடத்தில் மாலை இத்தனை மணி வரை தான் சுற்றிப் பார்க்க வேண்டும் என்று அனுமதிக்கப்பட்டிருந்தால் அந்த நேரத்திற்குள்ளாக அங்கிருந்து புறப்பட்டுவிடுங்கள். அது உங்களுக்கு பாதுகாப்பை அளிக்கும்.சிறு பிள்ளைகளுடன் செல்பவர்கள், சுற்றுலா செல்வதற்கு முன்பாகவே, தங்கும் இடங்களுக்கான அறைகளை பதிவு செய்து கொள்வது நல்லது. சுற்றுலாவிற்கு வந்த இடம்தானே என்று கண்ட இடத்தில் புகைப்பது, மது அருந்துவது, தீ மூட்டி குளிர்காய்வது போன்றவற்றை செய்ய வேண்டாம். இதில் ஏதாவது ஒன்று உங்களது பாதுகாப்பிற்கே கேள்விக்குறியாக முடியலாம்.நீங்கள் வனப்பகுதிக்குச் செல்ல விரும்பினால், அங்கிருக்கும் காட்டு விலங்குகள் பற்றியும், சில விஷச் செடிகள் பற்றியும் தெரிந்து வைத்துக் கொள்வது நல்லது.நீர் நிறைந்த பகுதிகளுக்குச் செல்லும் போது விளையாட்டாக குளிக்கலாம் என்று நண்பர்கள் அழைத்தாலும் அதனை மறுப்பது நல்லது. நீர் நிலைகளை (கடற்கரை) கண்டு ரசிக்கலாமே தவிர அதை அசுத்தப்படுத்தவோ, அதில் குளிப்பதற்காகவோ நீங்கள் சுற்றுலாவிற்கு வரவில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

சுற்றுலா செல்லும் இடங்களில் கிடைக்கும் தண்ணீரை அப்படியே குடிப்பதைத் தவிர்த்துவிடுங்கள். தண்ணீரில் பரவும் வியாதிகள்தான் அதிகம். இதனால் நீங்கள் மோசமான நோய்களைக் கூட அனுபவிக்க வேண்டி வரலாம். எனவே பாதுகாப்பான தண்ணீரை குடியுங்கள்.பயணத்தின் போது பாதுகாப்பற்ற சூழலை நீங்கள் உணர்ந்தால் உடனடியாக அருகில் இருக்கும் காவல்துறையையோ அல்லது அருகில் இருப்பவர்களையோ உதவிக்காக அழைக்கலாம்.நீங்கள் தற்போது எந்த இடத்தில் பயணித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை உங்களது நண்பர் அல்லது உறவினர் ஒருவருக்காவது அவ்வப்போது தெரிவித்துக் கொண்டிருப்பது நல்லது.வெளியூர்களுக்கு 10 நாட்களுக்கு மேல் சுற்றுலா செல்வதாக இருந்தால் அருகில் உள்ள காவல்நிலையத்தில் தெரிவித்துவிட்டுச் செல்வது உங்கள் வீட்டைப் பாதுகாக்க உதவும். நீங்களும் நிம்மதியாக இருக்கலாம். அதிக விலை மதிப்புடையப் பொருட்களை எடுத்துச் செல்வதை தவிர்த்துவிடுங்கள். தேவையற்ற டெபிட், கிரடிட் கார்டுகளையும் பாதுகாப்பாக உங்கள் வீட்டிலேயே வைத்து விடுவது நல்லது.அலுவலகத்தில் விடுமுறை எடுத்து சுற்றுலா செல்வதாக இருந்தால், முடிக்க வேண்டிய வேலைகளை முடித்துவிடுங்கள். இல்லை என்றால் சுற்றுலா செல்லும் தலங்களில் இது பற்றிய தொலைபேசி அழைப்புகளுக்கு பதில் சொல்ல வேண்டி வரும்.வீட்டில் அனைவரும் அவரவருக்கு ஒதுக்கப்பட்ட பைகளை பாதுகாக்கும்படி அறிவுறுத்துங்கள். இதனால் ஏதேனும் ஒரு பை தொலைந்துவிட்டது என்று தேடுவதும், கவலைப்படுவதும் தவிர்க்கப்படும்.

## இராமர் பாலமும் *நிஜ ஆதாரங்களும்*







தமிழ்நாட்டில் இராமேஸ்வரம் அருகில் திருப்புல்லாணிக்கரை உள்ளது.இங்கு கடலுக்குள் நவக்கிரகங்கள் உள்ளன.இங்குள்ள 70 வயதிற்கு மேற்பட்ட பெரியவர்களிடம் பேசிப்பார்த்தால் இராமர் பாலம் முழு நிஜம் என்பது தெரியவரும்.

மேலே அமெரிக்க விண்வெளி அமைப்பான நாசா எடுத்துள்ள சற்றலைட் புகைப்படத்தில் இருப்பது ராமர் பாலம் தான்.

சுமார் 30 மைல் நீளமும் 3 மைல் அகலமும் கொண்டதாக இது கடலில் முழ்கிக்கிடக்கிறது.

இந்த பாலம் கடல் அலைகளால் உருவாக்கப்படவில்லை.இதன் முனைகள் உறுதியாக உள்ளன.இதன் வயது சுமார் 17,50,000 ஆண்டுகள் ஆகும்.

நமது இந்துக்காலக்கணக்குப்படி முதல் யுகமான திரேதாயுகத்தின் முடிவில் இராமாயணம் நடைபெற்றது. இராமாயணத்தின் இறுதிக்கட்டத்தில் கட்டப்பட்டதே இந்த இராமர் பாலம்.கி.பி.1450 அளவில் இலங்கையை ஆண்ட மன்னன் தினமும் குதிரைவீரர்களிடம் இராமேஸ்வரம் இராமநாதசுவாமிக்கு அபிஷேகம் செய்வதற்குப் பால் கொடுத்து அனுப்பியுள்ளான்.அந்த குதிரைவீரர்கள் இந்த இராமர் பாலம் வழியாக இலங்கையிலிருந்து தினமும் இராமேஸ்வரத்திற்கு சென்று வந்தனர்.

இன்று இந்த இராமர் பாலத்தின் வழியாக நடந்தே இராமேஸ்வரத்துக்கு செல்ல முடியும்.பாலத்தின் ஆழம் குறைந்த பட்சம் 5 அடி(ஒரு ஆளின் உயரம்), அதிக பட்சம் 25 அடி(ஐந்து ஆள்களின் உயரம்)என திருப்புல்லாணிக் கரைப்பெரியவர்கள் கூறுகின்றனர்.

நாம் நமது முன்னோர்களின் படைப்புகள், புராதனச்சொத்துக்களைப் போல உருவாக்காவிட்டாலும் பரவாயில்லை பாதுகாப்பதனைக்கூடச் செய்யவில்லையெனில் வரலாறு நம்மை மன்னிக்குமா ?.....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறந்த தேதி பலன்கள்


### குரு 3

நீங்கள் 3,12,21,30 தேதிகளில் பிறந்திருந்தால் உங்கள் எண்ணின் நாயகன், வியாழன் வருவார். பிறருக்கு வழிகாட்டிடும் போதகர், முனிவர், தர்ம கர்த்தர், மந்திரி, நல் ஆசிரியர் போன்ற நல் உள்ளம், படைத்தவர் நீங்கள். கௌரவமான வாழ்க்கை அமையும். பொதுக் காரியங்களில் உங்களை ஈடுபடுத்தி மற்றவர்களுக்கு வழிகாட்டுவீர்கள். சமாதானப்பிரியர், பெரியோர்களிடம் பணிவும், கீழ்நிலையுள்ளவர்களிடம் அன்பும் காட்டுவீர்கள். தீர்க்கமான சொல் உங்களுடையதாக இருக்கும். பொது ஸ்தாபானங்கள் உங்களால் பெருமையடையும், புதிய விஷயங்களை உலகுக்குச் சொல்லக்கூடிய ஆற்றல் உங்களிடம் தான் அதிகம் இருக்கும். வாதிடும் திறமை அதிகம் உள்ளவர்கள் நீங்கள். பிறருக்கு மனமிரங்கிச் செயற்படுபவர்கள். மருத்துவர்களாகவும் சேவை மையம் நடத்துபவர்களாகவும், சமூக நோக்குடன் அரசியலிலும். ஈடுபடுவார்கள். பிராணிகள் வளர்ப்பதிலும் ஆர்வமிருக்கும். எண்ணில் பலம் குறையும் போது பிறர் அறியாவண்ணம் - சண்டை மூட்டி விடுவீர்கள். உங்களின் குறைபாடு குடும்பத்திலுள்ளவர்களைக் கவனிக்காமல் வெளியுலகத்தைப் பார்ப்பீர்கள். குடும்ப அங்கத்தினர்கள் மீது கவனம் செலுத்துங்கள். உங்கள் உடலில் ஏற்படும் நோய்கள் வயிற்று உபாதைகள். தீராத தலைவலி, எரிச்சலுடன் கூடிய நோய், வாதநோய், மன உளைச்சல், தொண்டை, நாக்கு, காது, தொடர்பான நோய்கள், நிவர்த்திக்குரிய வழிகள் அதிக பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளாதீர்கள், சாப்பிடும் நேரத்தையும், உறங்கும் நேரத்தையும் முறைப்படுத்துங்கள். நோய் நிவர்த்தியும். பிரச்சினைகளால் ஏற்படும் குழப்பங்களையும் போக்கி, அதிர்ஷ்டத்தை அள்ளித் தரும் இரத்தினக்கற்கள் - கனக புஸ்பராகம், அமிதிஸ்ட், டோபாஸ். உங்களுக்குரிய அதிர்ஷ்ட எண் - 3ன் வரிசை, 9ன் வரிசை. உங்களுக்குரிய அதிர்ஷ்ட நிறம் - தங்கநிறம், ரோஸ். உங்களுக்குரிய அதிர்ஷ்ட திசை -வட கிழக்கு. உங்களுக்குரிய அதிர்ஷ்ட கிழமை- வியாழன், நீங்கள் வணங்க வேண்டிய தெய்வம் - தெட்சணாமூர்த்தி.

### ராகு 4

நீங்கள் 4,13,22,31 ஆகிய தேதிகளில் பிறந்திருந்தால் உங்கள் எண்ணின் நாயகராக ராகு வருவார். எல்லாம் தெரிந்தவர் நீங்கள். பணம் பண்ணுவதை வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டவர் நீங்கள். அதனால் மற்ற விஷயங்களில் ஈடுபாடு கொள்ள மாட்டீர்கள். வசதி வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்வதில் சமர்த்தர். உங்கள் எண்ணங்கள் யாவும் சித்தியாகும். ஒருவரை வாழ வைக்கவும். வீழச்செய்யவும் உங்களால் முடியும். இவ்வளவு திறமையுள்ள உங்களுக்கு ஒரு வித மனக்குறை இருந்து கொண்டே ஏக்கம் கொள்ள வைக்கும். வித விதமான நவீனப் பொருட்களை வாங்கிச் சேர்ப்பீர்கள். கடினமான சூழ்நிலையிலும், மனதைத் தளரவிடாமல், காரியம் ஆற்றி வெற்றி பெறுவீர்கள். நீங்கள் தான் குடியிருக்கும், வீட்டை, தெருவை, பகுதியை, நாட்டைக் கூட்டிச் சீர்படுத்தும் ஓர் சீர்திருத்தவாதி, புதிய சிந்தனைகளால் தூண்டப்பட்டு மற்றவருக்கு வழிகாட்டுவீர்கள். பெற்றோர்கள், பெரியவர்கள் மனம் புண்படாமல் நடந்து கொள்ளுங்கள். தான தருமங்கள் அதிகமாகச் செய்யுங்கள். நோய் நிவர்த்தியும் பரோபகாரச் சிந்தனையும் மேலோங்கி அனைத்து வெற்றிகளையும் அளித்திடும். அதிர்ஷ்ட இரத்தினக் கல்-கோமேதகம், கார்னட் (Garnet) ஸ்பின்னல் (Spinel). உங்களுக்குரிய அதிர்ஷ்ட எண் - 28,31,1,10,19,27.40 உங்களுக்குரிய அதிர்ஷ்ட நிறம் - மெரூன், லைட்புளு உங்களுக்குரிய அதிர்ஷ்ட திசை - கிழக்கு உங்களுக்குரிய அதிர்ஷ்டகிழமை- ஞாயிறு, நீங்கள் வணங்க வேண்டிய தெய்வம் - துர்க்கை, பத்திரகாளி.

# குறுக்கெழுத்துப்புதிர்



### இடமிருந்து வலம்

1. இவைகள் இருந்தால் வானத்திலும் பறக்கலாம்
4. உழைக்கும் தொழிலாளி
7. இது தின்னக் கைக்கூலி தேவையா ?
9. இந்துக்கள் விஷேட தினங்களில் இது வைத்து வரவேற்பார்கள்.
10. இது ஒன்று துண்டு இரண்டு என்பார்கள் (மாறியுள்ளது)
11. இந்த அலைவரிசையிலும் பாடல் கேட்கலாம்.
13. பண்டைய அரசர்களின் விளையாட்டு (குழம்பியுள்ளது)
15. ஒரு பொருளை இப்படிக் கேட்டு வாங்குவார்கள்
16. இதைக் கிளப்பினால் மக்கள் கவலை அடைவார்கள் (குழம்பியுள்ளது)
17. அஜித்தின் 50ஆவது படம்
19. சில சாப்பாட்டுப் பொருள்களை இப்படிச் செய்து சாப்பிட்டால் சுவையாக இருக்கும். (குழம்பியுள்ளது)
22. ஆங்கிலேயர்கள் மட்டுமல்ல நம்மில் சிலரும் தந்தையை இப்படி கூப்பிடுவார்கள்.
24. இவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படக் கூடாது (குழம்பியுள்ளது)
26. இராமாயணத்தில் இராமனுக்குத் தோழன்.(குழம்பியுள்ளது)
27. இது போனால் சொல் போகும் (மாறியுள்ளது)
28. கேரள நடனம் (மாறியுள்ளது)
29. ஒரு சிலர் அன்பாக அம்மாவை ஆங்கிலத்தில் இப்படியும் அழைப்பார்கள். (மாறியுள்ளது)
30. இந்தியாவிலுள்ள முருகன் கோவில் உள்ள இடம். (குழம்பியுள்ளது)
33. இது போட்டால் பயிர்கள் நன்றாக விளையும் (குழம்பியுள்ளது)
34. முற்பிறவியில் செய்த பாவம். (குழம்பியுள்ளது)
35. இந்தியாவிலுள்ள நதி ஒன்று
36. இதைப் பிரித்தெடுக்க அதிக நேரம் எடுக்கும்.


### மேலிருந்து கீழ்

1. இங்குதான் நாகரிகம் தோன்றியதாகக் கூறுவார்கள்
2. மலையகத்தின் குரல் (குழம்பியுள்ளது)
3. யுத்தம் செய்யும் வீரர்கள் நிறைந்த கூட்டம். (குழம்பியுள்ளது)
4. தலைவலி என்றால் தேடுவார்கள் (ஆங்கிலச் சொல்)
5. உணவு வகைகளில் ஒன்று பேச்சுவழக்கில் இப்படியும் அழைப்பர்
6. ஒன்றும் தெரியாதவன் (தலைகீழ்)
8. காசிக்கு போனாலும் இது தொலையாது என்பார்கள்(குழம்பியுள்ளது)
12. பாம்பு குடியிருக்கும் இடம் (குழம்பியுள்ளது)
14. இலாபத்தில் இதைச் சமமாக பிரித்துக்கொள்வார்கள்
15. இந்த ஆட்டம் சினிமாவில் அதிகம்
18. குழந்தை நிம்மதியாக தூங்குமிடம். (குழம்பியுள்ளது)
20 இது ஒரு திசையாகும்
21. மாணவர்கள் படிப்பில் இப்படி இருக்க ஆசைப்படுவார்கள்.
23. விடுமுறை நாட்களில் இந்தப் பயணம் செய்வார்கள்
25. சிலர் இப்படி பேசுவார்கள் (குழம்பியுள்ளது)
30. இவை பலவிதம் என்பார்கள் (குழம்பியுள்ளது)
31. வீட்டில் தொலைக்காட்சி பெட்டியில் போட்டுப் பார்ப்பது ஆங்கிலச் சொற்றொடர் (குழம்பியுள்ளது)
32. வாத்து இப்படிக் கத்தும்

இப்புதிருக்கான விடைகளைச் சரியாக நிரப்பி எமக்கு அனுப்பிவையுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# இனிமை ! புதுமை !

வாரா வாரம் வந்து "கழுத்தறுக்கிற" படங்களுக்கு மத்தியில், வரமாக வந்து மனசை அறுக்கிற படங்களைப் பார்க்கும் போது கொண்டாட்ட -மாகத்தான் இருக்கிறது. அந்த வகையில் தெய்வத்திருமகள் நெஞ்சை நெகிழ வைக்கிறது. நடிகர் விக்ரம் நடிப்பில் ஒரு இமயம் என நிரூபித்து விட்டார். சின்னக் குட்டி சாராவும் அனைவரையும் கவர்ந்து விட்டாள். ஜி.வி.பிரகாஷ் குமாரின் பின்னணி இசை அபாரம். நெடிய காட்சிகளை கூட நிமிடத்தில் கடக்க உதவுகிறது அது. ஒரே ஒரு ஊர்ல ஒரே ஒரு ராஜாவாம் பாடலும் அது படமாக்கப்பட்ட விதமும் குழந்தைகள் ராஜ்ஜியத்தை ஒரு உலுக்கு உலுக்கி எடுக்கும். நீரவ்ஷா ஸாவின் ஒளிப்பதிவு காட்சிகளின் ஈரத்தையும் வெப்பத்தையும் எளிதாக உணர்த்துகிறது. பல காட்சிகளில் நம்மையறியாமல் கண்கலங்க வைக்கிற டைரக்டர் விஜய்யைப் பாராட்டுவது ஒன்றே தர்மம். அதுவும் ஒரே மாதிரி கதைகளை வேறு வேறு நடிகர்களை வைத்துக் கொண்டு "பிலிம் காட்டும்" இயக்குனர்கள் விஜய்யை மூன்று முறை சுற்றி வந்து வணங்கினால் பாவம் போக்கிக் கொள்ளலாம். விருதையே விருந்தாக நினைக்கும் வழக்கம் டைரக்டர் விஜய்க்கு இருக்குமானால், இலையை விரித்து வையுங்கள் நண்பரே.... கொள்ளாத விருந்து காத்திருக்கிறது!




கரனுக்கு இப்போதைய தேவை சுடச் சுட ஒரு ஹிட். அந்தச் சூட்டைக் கிளப்பப் போவது அநேகமாக தம்பி வெட்டோத்தி சுந்தரம் படமாக இருக்கலாம். கண்ணெதிரே தோன்றினாள், கொக்கி, கருப்பசாமி குத்தகைதாரர் போன்ற படங்களில் நான் நடிக்கும் போது உள்ளுக்குள் ஒரு பரவச மனநிலை இருந்தது. அந்த மனநிலை இந்தப் படம் வெளிவரப் போகும் இந்த நேரத்தில் எனக்குள் வந்திருக்கு. அதனால சொல்றேன், இந்தப் படம் தமிழ்சினிமாவின் தவிர்க்க முடியாத ஹிட் என்றார் கரன். படத்தின் இயக்குனர் வடிவுடையானுக்கு ஒரு பெரும் பொறுப்பு இருந்தது. அதென்ன வெட்டோத்தி? இவரை பார்க்கும் பலர் அவரிடமே கேட்டுவிட்டார்கள். கேட்காத பாதி பேர் அவரைத் தெரியாதவர்களாக இருந்தார்கள். அதனால் அதற்கான விளக்கத்தை முதலில் அளித்தார் வடிவு. கன்னியாக்குமரிப் பகுதியில் பயன்படுத்தப்படும் ஒரு ஆயுதம்தான் இது. இதைப் பயன்படுத்தி வந்த சுந்தரம் என்பவர் நாளடைவில் வெட்டோத்தி சுந்தரம் என்று அழைக்கப்பட்டார். கல்வியறிவில் முன் வரிசையில் இருக்கிற மாவட்டம் கன்னியாக்குமரி மாவட்டம்தான். ஆனால் இங்குதான் 80 சதவீத குற்றங்கள் நடப்பதாகச் சொல்கிறது புள்ளிவிபரம். நன்கு படித்து வாத்தியார் வேலைக்குப் போய்க் கொண்டிருந்த ஒருவன், சட்டத்திற்குப் புறம்பான காரியங்களில் இறங்கினால் என்னாகும்? இதுதான் இந்தப் படத்தின் கதை. அதுமட்டுமல்ல, உண்மைக் கதையும் கூட என்றார் வடிவுடையான். அங்காடித்தெரு படத்திற்கு அப்புறம் எனக்கு ரொம்ப புடிச்ச படம் இதுதான் என்றார் அஞ்சலி. எங்களுக்கும்தான். ஏனென்றால், ஒரு பாடல் காட்சியில் ஒரு குறிப்பிட்ட அங்கத்தில் மட்டும் அவர் கொடுத்திருக்கும் மூவ்மென்ட் இருக்கே, அது விழியுள்ளவர்கள் ரசிக்கக் கடவது!




## 7ஆம் அறிவு புகைப்பட முன்னோட்டம்







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மங்காத்தாவில் அஜீத் ரொம்ப ரொம்பக் கெட்டவன்

### வெங்கட் பிரபு பேட்டி !

மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கும் அஜீத்தின் 50வது படமான மங்காத்தா, இம்மாதம் 30ம் தேதி ரிலீஸ் ஆக இருப்பதாகவும், படத்தில் அஜீத் ரொம்ப ரொம்ப கெட்டவன் என்று படத்தின் இயக்குநர் வெங்கட் பிரபு கூறியுள்ளார். க்ளவுடு நைன் மூவீஸ் சார்பில், தயாநிதி அழகிரி தயாரிப்பில், வெங்கட் பிரபு இயக்கத்தில், அஜீத், அர்ஜுன், த்ரிஷா லட்சுமி ராய், அஞ்சலி, ஆண்டிரியா, வைபவ், பிரேம்ஜி அமரன் என்று ஒரு நட்சத்திர பட்டாளமே நடித்திருக்கும் படம் மங்காத்தா. இதுவரை நடித்திராத வித்யாசமான ரோலில் அஜீத் நடித்திருக்கிறார். கூடவே அஜீத்திற்கு இது 50வது படமும் கூட, அதனால் ரசிகர்கள் மத்தியில் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது. கடந்த சில தினங்களுக்கு முன்னர் தான் இப்படத்தின் ஆடியோ ரிலீஸ் நடந்தது. பாட்டும் நன்றாக வந்துள்ளது. கூடவே சி.டி கடைகள் அனைத்திலும் மங்காத்தா பாடல்கள் தான் அதிகளவுக்கு விற்பனையாகியும் உள்ளது. படத்தைப் பற்றி வெங்கட் பிரபு கூறுகையில், பொதுவாக என்னுடைய படங்கள் அனைத்தும் கிரிக்கெட்டோடு தொடர்புடையவை. அதேபோல் மங்காத்தா படமும் கிரிக்கெட் பின்னால் நடக்கும் சூதாட்டத்தை மையப்படுத்தி எடுக்கப்பட்டுள்ளது. படத்தில் அஜீத், வைபவ், பிரேம்ஜி அமரன் உள்ளிட்ட ஐந்து பேர் கெட்டவர்கள். அதில் அஜீத் ரொம்ப ரொம்பக் கெட்டவர். முதன்முறையாக இந்தபடத்தில் நெகட்டிவ் கேரக்டரில் நடித்துள்ளார். அஜீத்துக்குப் பிடித்தமான மோட்டார் சைக்கிள் ரேசையும் படத்தில் சேர்த்துள்ளோம். இந்த படத்தின் பாடல்களை யுவன்சங்கர்ராஜா பிரமாதமாக கொடுத்துள்ளார். ஹாலிவுட் நடிகர்களுக்கு மட்டுமே சாத்தியமான கெட்டப்பில் வெள்ளை முடியோடு அஜீத் வருகிறார். வித்தியாசமான ஆக்ஷன் திரில்லர் கதையாக உருவாகியுள்ளது. இம்மாதம் 30ம் தேதி படத்தை ரிலீஸ் செய்ய திட்டமிட்டுள்ளோம். இந்தப் படத்தில் அஜீத்துக்கு இணையான வேடத்தில் வருபவர் ஆக்ஷன் கிங் அர்ஜுன். இது அஜீத்தின் பொன்விழா படம். அஜீத்துக்குதான் முக்கியத்துவம் இருக்கும் எனத் தெரிந்தும் அர்ஜுன் பெருந்தன்மையுடன் நடிக்க ஒப்புக் கொண்டார்.

## நண்பனில் இணையப் போகும் ராகவா லாரன்ஸ் !



டைரக்டர் சங்கர் இயக்கத்தில் விஜய், ஜீவா, ஸ்ரீகாந்த் நடித்து வரும் புதிய படம் "நண்பன்" இந்தியில் வெளியாகி பட்டையை கிளப்பிய "3 இடியட்ஸ்" படத்தின் ரீ-மேக்கான இப்படத்தில் நடிகர் ராகவா லாரன்சும் நடிக்கவிருக்கிறார். "காஞ்சனா" படத்தின் மூலம் ஒரு நல்ல நடிகராக தன்னை அடையாளம் காட்டிக் கொண்ட நடிகர் லாரன்ஸை, தயாரிப்பாளர்கள் பலர் மொய்த்துக் கொண்டிருக்க, அவரோ நண்பனில் நடிக்க ஆர்வமாக இருக்கிறாராம். 'சங்கர் கொடுத்த வாய்ப்பை மறுக்காமல் நண்பனில் இணைய தயாராகி விட்ட லாரன்ஸ், விரைவில் நண்பன் சூட்டிங்கில் பங்கேற்க உள்ளார். லாரன்சும், விஜய்யும் இதற்கு முன்பு திருமலை படத்தில் இணைந்து நடித்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. அதேநேரம் "முனி 2" பட முடிவில், "முனி 3" தொடரும் என்று போட்டிருக்கும் லாரன்ஸ், "முனி 3" படத்துக்கான வேலைகளிலும் சத்தமில்லாமல் இறங்கியிருக் கிறாராம். "முனி 3"க்கு முன்பு சில படங்களில் நடித்து, இன்னும் மெருகேறிய நடிப்புடன் "முனி 3"ஐ தொடரத் திட்டமிட்டிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சூர்யாவின் 7ஆம் அறிவு



கஜினி படத்தின் மிகப்பெரிய வெற்றிக்குப் பிறகு சூர்யா- ஏ.ஆர்.முருகதாஸ் ஹிட் பார்முலா டீம் மீண்டும் இணைந்துள்ள படம் "ஏழாம் அறிவு". உதயநிதி ஸ்டாலினின் ரெட் ஜெயண்ட் மூவிஸ் தயாரிப்பில் உருவாகியுள்ள இந்தப் படம் தமிழ், தெலுங்கு, இந்தி என மூன்று மொழிகளிலும் திரையிடப்படவுள்ளது. இதில் ஸ்ருதி கமலஹாசன் நாயகியாக நடித்துள்ளார். இந்தியில் "லக்" படத்தில் நடித்துள்ள ஸ்ருதிக்கு "ஏழாம் அறிவு" தான் தமிழில் முதல் படம்.கமல் இதனது உன்னைப்போல் ஒருவன் படத்தின் மூலம் ஸ்ருதியை இசையமைப்பாளராக அறிமுகப்படுத்தினார். அதேபோல் ஏழாம் அறிவு படத்திலும் ஸ்ருதி நடிக்க காரணமும் அவர்தானாம். ஏழாம் அறிவு படத்தில் முதலில் நடிக்கவிருந்தவர் கமல்தான். இதில் நடிப்பதற்காக கமலிடம் முருகதாஸ் அணுகிய போது, வேறுபடங்களின் காலஷீட் பிரச்சினைகளால் இதில் நடிக்க முடியாது என்றார். அதன் பிறகு, இதில் நாயகியாக நடிப்பதற்கு ஸ்ருதியின் சம்மதம் கேட்டபோது, அவர் நடிக்க முடியாது போனதால் தனது மகளை நடிக்கவைத்தார் கமல். படத்தில் எப்படிப்பட்ட காட்சிகளாக இருந்தாலும் ஸ்ருதி ஒரே டேக்கில் ஓ.கே வாங்கிவிடுவாராம். இதனால் படக்குழுவினரின் பாராட்டுக்களைப் பலமுறை வாங்கியுள்ளார். (யாரு... உலக நாயகனின் பெண்ணல்லவா...) படத்தின் இசை ஹாரிஸ் ஜெயராஜ். ஏற்கனவே ஸ்ருதியை வாரணம் ஆயிரம் படத்தில் பாடவைத்து, அவரின் குரலை வெகுவாகப் பாராட்டியவர் ஹாரிஸ். தற்போது இந்தப் படத்தின் கதாநாயகியாகவும் இருப்பதால் பாடலின் ஸ்ருதியில் எல்லாம் ஸ்ருதியின் ஆளுமைதானாம்.எல்லாப் பாடல்களையும் இவரே பாடியிருப்பதாகவும் தகவல். இந்தப் படம் இந்தியிலும் டப்பிங் ஆகவுள்ளது. அதிலும் ஸ்ருதிதான் நாயகி. "லக்"கில் இல்லாத லக் ஏழாம் அறிவில் ஏற்படும் என்ற எதிர்பார்ப்பில் இருக்கிறார் ஸ்ருதி ஏறக்குறைய கஜினிப்படத்தின் அதே கூட்டணி இதிலும் இணைந்திருப்பதால், ஏழாம் அறிவும் இன்னொரு மெகா ஹிட்தான் என்று பேசப்பட்டு வருகிறது. உதயநிதியும் இந்தப் படம் தமிழ் தெலுங்கு, இந்தி என்று மிகப் பெரிய அளவில் வெற்றியடைய எல்லாவகையிலும் முயற்சித்து வருகிறார். இதுபோக தற்போது சூர்யா என்றாலே வெற்றியின் பிரகாசம் என்ற தனிச்சிறப்பும் ஏற்கனவே உண்டு.

## பாரதிராஜா படத்துக்கு இசையமைக்கிறார் ஜி.வி.பிரகாஷ்!



பாரதி ராஜா அடுத்து இயக்க போகும் புதிய படமான அன்னக் கொடியும் கொடிவீரனும் படத்திற்கு, ஜி.வி.பிரகாஷ்குமார் இசையமைக்க போவதாக தகவல் வெளியாகியுள்ளது. இயக்குநர் இமயம் என்ற பட்டத்திற்கு சொந்தக்காரர் ஆன டைரக்டர் பாரதிராஜா, காலத்திற்கு ஏற்றவாறு படங்களை கொடுப்பதில் வல்லவர். பொம்மலாட்டம் படத்திற்கு பிறகு, அவர் இயக்க போகும் படம் அன்னக் கொடியும் கொடிவீரனும். இப்படத்திற்கான இடம் தேர்வும், நடிகர், நடிகையர் தேடும் பணியும் தற்போது நடந்து வருகிறது. விரைவில் தொடங்க இருக்கும் இப்படத்திற்கு அவரது ஆஸ்தான இசையமை[illegible] இளையராஜா அல்லது ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைக்க போவதாக கூறப்பட்டது. ஆனால் இப்போது பாரதிராஜா இ[illegible]வரையும் விட்டு ஜி.வி.பிரகாஷ்குமாருடன் கூட்டணி அமைக்க போவதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும் படத்துக்கா[illegible] இரண்டு பாடல்கள் கூட கம்போஸிங் ஆகிவிட்டதாகவும் கூறப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிதைத் தொகுப்புகள்

## வழிகாட்டி !

ஒரு குழந்தையைப் போல் என் விரல்களை நீட்டினேன்
ஒரு தந்தையைப் போல் என்னை அழைத்துச் செல்ல!
ஒரு கவிஞனைப் போல் என் உணர்வுகளைச் வைக்கின்றேன்
ஒரு மனிதனைப் போல் என்னைப் புரிந்து கொள்ள !
ஒரு காதலியைப் போல் என் இதயத்தை தந்துவிடுகிறேன்
ஒரு கணவனைப் போல் என்னை அழைத்துச் செல்ல!
ஒரு பக்தனைப் போல் என் பலவீனத்தை சொல்லிக் காட்டுகிறேன்
ஒரு தெய்வத்தைப் போல் என்னை ஏற்றுக் கொள்ள !
ஒரு சீடனைப் போல் என் அறியாமையை முன் வைக்கிறேன்
ஒரு ஆசிரியரைப் போல் என்னை வழி நடத்த !
ஒரு குருடனைப் போல் என் பாதையை ஒப்படைக்கிறேன்
ஒரு வழி காட்டியாய் என்னை நடத்திச் செல்ல !

## அம்மா

அம்மா உன்னோடு என்னைச் சுமந்தாய்
உதிரத்தை உணவாக்கி உருக்கமாய் உவந்தளித்தாய்
உயிர் என்றும் உலகமென்றும் உள்ளம் குளிரவைத்தாய்
உன்னைவிட உயர்ந்தவர் உலகில் வேறுண்டோ

## புல்லாங்குழல்

நீ வாசித்த புல்லாங்குழலை விட்டு உன் விரல்கள்
ஒரு வீணையை மீட்டத் தயாராகிக் கொண்டு இருக்கும்
செய்தியைக் கேட்டவுடன் புல்லாங்குழலின் இதயம்
புண்ணாகிய விடயம் உனக்கு தெரிந்திருக்க நியாயமில்லை

ஆக்கம் இளம் கவிஞன்

ஆசிரியர் அவர்கட்கு,
Global Express
கொழும்பு,

பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குமுரிய
தங்களுக்கு என் அன்பும், வணக்கமும்.

கலை இலக்கிய உலகிற்கு நல்ல வரவாக எமக்கெல்லாம் விருந்து படைத்திருக்கிறது Global Express சஞ்சிகை. எம்மாலும் முடியுமென்பதை எடுத்தியம்பி ஈழத் தமிழனென்ற வகையில் எம்மையும் தலை நிமிர வைத்துள்ளீர்கள். எதிர்பாராமல் பார்க்கக் கிடைத்தது.

ஒரு ரோஜா மலரைக் கைகளினால் தொட்டது போன்றும், வானத்து நிலவை அருகில் நின்று பார்த்தது போன்றும் பரவசம் எமக்குள். அத்தனை அழகு. அவ்வளவு நேர்த்தி. கனதி. குறை சொல்ல ஒன்றுமில்லை என்பது என் கணிப்பு. ஆரோக்கியமான வெளியீடு. கலைப்பசிக்குத் தீனியிட வரவாக வரும் தலைசிறந்த சஞ்சிகையாக நிமிர, ஒளிர, வளர, வாழ வாழ்த்துகின்றேன்.

நன்றி
இப்படிக்கு
உண்மையுள்ள
S.தேனாள் சுமெஷ்,
எழுத்தூர் சந்தி, மன்னார்.

## மனிதனாக வாழ வழிகள்

| | |
|---|---|
| மிகவும் மதிப்புக்குரியவர்கள் | தாய், தந்தை |
| மிகமிக நல்லநாள் | இன்று |
| மிகப் பெரிய வெகுமதி | மன்னிப்பு |
| மிகவும் வேண்டியது | பணிவு |
| மிகவும் வேண்டாதது | வெறுப்பு |
| மிகப் பெரிய தேவை | நம்பிக்கை |
| மிகக்கொடிய நோய் | பேராசை |
| மிகவும் சுலபமானது | குற்றம் காணல் |
| தரமற்ற குணம் | பொறாமை |
| நம்பக்கூடாதது | வதந்தி |
| ஆபத்தை விளைவிப்பது | அதிக பேச்சு |
| செய்யக் கூடாதது | நம்பிக்கைத் துரோகம் |
| செய்யக் கூடியது | உதவி |
| விலக்க வேண்டியது | சோம்பேறித்தனம் |
| உயர்வுக்கு வழி | உழைப்பு |
| நழுவவிடக்கூடாதது | வாய்ப்பு |
| பிரியக் கூடாதது | நட்பு |
| மறக்கக்கூடாதது | நன்றி |
| ஒவ்வொரு நிமிடமும் இருக்கவேண்டியது | இறை பயம் |

## பசி !

பசி !
பாலிற்கு
வீறிட்டு
அழுதது குழந்தை :
கொடுப்பதற்கு
அந்தத் தாயிடம்
கடைசிவரை
இருந்தது
வெறும்
கண்ணீர் மட்டும்தான்!

பசித் தீ!
அடுப்பை மூட்டினாள்
அந்தத் தாய்
பற்றவைத்த
ஒவ்வொரு தடவையும்
தீ..........
அணைந்து போனது
அவள் அழுத கண்ணீரால் !

சத்தியமாய்
என் தலையில் கை வைத்துச்
சொல்லுகிறேன்
அவளதும்,
அவள் பிள்ளைகளதும்
வயிற்றில் மட்டும்
முளாசி
எரிந்து கொண்டேயிருந்தது
பசித் தீ!

ஆக்கம்:- தேனாள் சுமெஷ், மன்னார்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிமேட்டம்



# அருள்மிகு கருவேற்காடுபதி ஸ்ரீ தேவி கருமாரியம்மன் தேவஸ்தானம்

## களுபான - ஹல்துமுல்ல பெரகல ஆலய வரலாறு

இந்து சமுத்திரத்தின் முத்தெனப் போற்றப்படும் ஈழத்திருநாடாம் இலங்காபுரியின் ஊவா மாகாணத்தில் இயற்கையின் கொடைகளைத் தன்னகத்தே கொண்டு விளங்குகின்ற ஹல்துமுல்ல, களுபான பிரதேசத்தில் செழிப்பான மலை அடிவாரத்தில் வீற்றிருந்து தன்னைத் தேடிவரும் பக்தர்களுக்கு வேண்டும் வரமளிக்கும்சக்தி வாய்ந்த ஆலயம் தான் இந்த ஸ்ரீ தேவி கருமாரியம்மன் ஆலயமாகும்.

இவ்வாலயமானது சுமார் 100 வருடங்களுக்கு முன் தோன்றியதாக வரலாறு கூறுகிறது. 1900 ஆண்டளவில் அமரர் திரு.கனகராஜ்-பிள்ளை அவர்களும் அவர்தம் உறவு முறையிலானவர்களும் இங்குள்ள காணிகளில் குடியேறி வாழ்ந்து வரும்காலங்களில் தான் இவ்வாலயம் கட்டப்பட்டது. அதன் பின்னர் திரு. பாலசுப்ரமணியம் ஐயாவினால் இவ்வாலயத்தையும் அதனைச் சுற்றியுள்ள காணிகளையும் பொறுப்பேற்றுக் கொண்டு, இவர் தனது காணி உறுதியில் இக்கருமாரியம்மன் ஆலயத்திற்காக சுமார் இரண்டே கால் ஏக்கர் காணியை அன்பளிப்பாக ஒதுக்கி கொடுத்துள்ளார் என அறியப்படுன்றது. அதன் பின்னர் தற்போதைய தலைவர் திரு. பொன்னம்பலம் செல்வராஜா அவர்கள் ஆலயத்தை சுற்றியுள்ள காணிகளை விலைக்கு வாங்கினார். அமரர் திரு.பாலசுப்ரமணியம் ஐயா அவர்களின் வழி நடத்தலினாலும், செயற்ப்பாட்டினாலும் திரு. பொ.செல்வராஜாவின் அயராத முயற்சியினாலும், நூற்றுக் கணக்கான கொழும்பு வர்த்தகர்கள் வாரிவழங்கிய நன்கொடைகளினாலும் சிறிதாக இருந்த இவ்வாலயம் புதிய பரிமாணம் பெற்றது. மேலும் இவரது சீரிய முயற்சியின் பலனாக 1984ம் ஆண்டு முதன்முதலில் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இக் கும்பாபிஷேகத்தின் பின்னர் இக்கோயிலை வந்தடைந்த தற்போதைய ஆலய பிரதம்குரு ஸ்ரீ பாலமூர்த்தி சர்மா அவர்கள் நித்திய பூஜைகளைச் செய்து வருவதோடு, வரும் பக்தர்களுக்குக் கருமாரியம்மனின் பெயரால் திருநீறு. சந்தனம், குங்குமம் வழங்கி ஆலயம் மேலும் சிறப்புற சேவை செய்து வருகிறார்.

"கருவேற்காடுபதி" என இத்திருத்தலத்திற்குப் பெயர் வரக்காரணம், நீர்வளம், நிலவளம், செல்வவளம் நிறைந்த ஹல்துமுல்லை, களுபான கிராமத்தைச் சூழவுள்ள சுமார் 48 கிராமங்கள் 1960 முதல் 1980 வரை கரும்புச் செய்கையில் முதலிடம் வகித்தன. அக்காலகட்டத்தில் கரும்பைச் சாகுபடிச்செய்து வந்த விவசாயிகள் தமது சாகுபடிகள் நல்லபடியாக உற்பத்தியாகிப் பெருக வேண்டுமென்று இவ்வாலய அம்மனை வேண்டிக்கொண்டதோடு தமது முதல் சாகுபடியை அம்மனுக்கே படைத்துள்ளார்கள். இங்கு கரும்புச்செய்கையில் ஈடுபட்டு வந்த விவசாயிகளும், ஊழியர்களும். தமக்குத் துணை நிற்கும் அம்மனுக்கு நிலைத்து நிற்கும் வகையில் "கருவேற்காடுபதி" என்ற புனைபெயரை வைத்து வணங்கி வழிபட்டு வந்தனர் அன்று முதல் இவ்வாலயத்தின் பெயருடன் இரண்டற கலந்து "கருவேற்காடுபதி ஸ்ரீ தேவி கருமாரியம்மன் ஆலயம்" என்ற சிறப்புப் பெயருடன் இன்றும் விளங்கி வருகின்றது.

### தலப்பெருமை :

மிகப் பழமை வாய்ந்த இத்திருத்தலம் சோலைகள் நிறைந்தது. பல ஆன்மீகப் பெரியார்கள் வாசம் செய்ததுமுண்டு. இவ்வாலயத்தில் இயற்கையிலேயே அமைந்த வற்றாத இரண்டு நீர் ஊற்றுகள் உள்ளன. ஒரு ஊற்றிலிருந்து சுத்தமான நீர் அம்மனின் தீர்த்தத்திற்காகவும் அபிஷேகத்திற்காகவும், மற்றைய ஊற்றிலிருந்து வரும் நீரை பக்தர்களின் பாவனைக்காகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இரண்டாவது ஊற்றில் நீர் சுமார் 30,000 லீட்டர் வரை சேமிக்கப்படுகிறது. இவ்வூற்றுக்கள் இரண்டும் அம்மன் ஆலயத்திற்கு முன்னால் இருப்பதால் இவ்வூற்று நீரின் மூலம் ஆலய கும்பாபிஷேகம் மற்றும் காரியங்கள் நடைபெற்று வருகின்றன.

### பூசை விபரம் :

தினசரி குங்குமப் பூசையும், ஒவ்வொரு மாதமும் வரும் பௌர்ணமி தினத்தில் ஆலயத்தில் சங்காபிஷேகப் பூசை நடைபெறும். இப்பௌர்ணமி தின பூசையில் கலந்து கொள்ளும் மூவாயிரத்திற்கு குறையாத அம்மன் அடியார்களுக்கு அன்று பகல் பூசையின் பின்னர் அன்னதானமும் வழங்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆலய பரிபாலன சபை :



இவ்வாலய பரிபாலனத்திற்காக 2000ம் ஆண்டு ஸ்ரீ தேவி கருமாரியம்மாள் ஆலத்திற்கான பரிபாலன சபை ஒன்று கொழும்பு ஜிந்துபிட்டி ஸ்ரீ சுப்ரமணிய சுவாமி ஆலயத்தில் ஸ்ரீவள்ளி தெய்வயானை மண்டபத்தில் முறைப்படி அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. மறைந்த முன்னாள் கொழும்பு மேயர் கௌரவ திரு. கணேசலிங்கம் அவர்களின் தலைமையில் தேவஸ்தானத்துக்கென ஏழு பேர் கொண்ட, அறங்காவலர் சபை உருவாக்கப்பட்டது. அதன் பின்பு பரிபாலன சபைக்கென விதி முறைகள் கொண்ட திட்டம் தயாரிக்கப்பட்டு, அனைத்துப் பொறுப்புகளையும், ஆலயத்தின் செயற்பாடுகளையும் செவ்வனே செய்து வருகிறார்கள்.

## பாலஸ்தானமும், புனருத்தாரணமும் :

2001ம் ஆண்டு ஆலயம் புனருத்தாரணம் செய்வதற்காக பாலஸ்தானம் செய்யப்பட்டு தற்போது இந்து சாஸ்திரமுறைப்படி கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், சயன மண்டபம் ஸ்தம்ப மண்டபம், வசந்த மண்டபம், ஆகியவைகள் பதுமைகள், கமலங்கள் நிறைந்த சிற்ப வேலைப்பாடுகளுடன் கண்ணைக்கவரும் வண்ணம் உருவாகிக் கொண்டிருக்கின்றது. மேலும் இவ்வாலயத்தில் விநாயகர் சன்னிதானம், வள்ளி தெய்வயானை சமேத முருகன் சன்னிதானம், பைரவர் சன்னிதானம், நவக்கிரகங்கள் ஆகியவற்றுடன் தட்ஷிணாமூர்த்தி, சரஸ்வதி, இலட்சுமி, உற்சவமூர்த்தி என பரிசாரமூர்த்திகள் அமையப்பெற்றுள்ளன. இவற்றுடன் முழுமுதற் கடவுளான விநாயகப்பெருமான் அரசடி விநாயகராக ஆலயத்திற்கு முன்பாக அமர்ந்திருந்து அருள்கொடுப்பதற்காக அவருக்கும் கோவில் அமையவிருக்கின்றது. கொழும்பு, பதுளை நெடுஞ்சாலையில் இருந்து அமைக்கப்படும் 177 படிகள் அவரது வாசல்வரையிலும் வருவதோடு, ஆலயத்தின் மேற்புறங்கள் பல கலை அம்சங்களுடன் அமைக்கப்பட்டு உள்ளன.



## ஆலயத்தின் விசேட சிறப்பு

இக்கருமாரியம்மன் ஆலயத்தில் ஒரு கருநாகம் காணப்படுகிறது. அது பக்தர்களுக்கு இடையூறின்றிக் கருவறையிலும், ஆலயத்திற்கு மேலேயுள்ள அரசமரத்தடிப் பிள்ளையாரிடம் அமைந்துள்ள புற்றிலும் காணப்படும். பக்தர்கள் நடமாட்டமற்ற வேளைகளில் புற்றிலும், ஆலய மண்டபத்திலும் படமெடுத்தாடுவதைப் பக்தர்கள் கண்டுள்ளார்கள். இதற்கு ஆலய பிரதமகுரு பால் வைப்பது வழக்கத்தில் உள்ளது. நாகதோஷம் உள்ளவர்கள் நாகம் குடிகொண்டிருக்கும் புற்றைச்சுற்றி வந்து தோஷ நிவர்த்தி செய்து கொள்கின்றனர்.

## கருமாரியம்மன் மகிமை :



அண்டசராசரங்கள் அனைத்தையும் ஆட்டிப்படைக்கும் மகா சக்தியாக விளங்குபவள் அன்னை கருமாரி. கருவில் இருக்கும் குழந்தைக்கும் அருள்புரிவதால் கருமாரி என்ற பெயர் வரக்காரணமாகும். இக்கலியுகத்தில் கருமாரியானவள் தன் இன்னருளை வெளிப்படுத்தி, அருள் வாக்களித்து வாழ்வி வாழ்வில் துன்புறும் மக்கள் அனைவரையும் ஈடேற்ற ஆன்மீகத்தில் வழி நடத்துகின்றாள். வாழ்க்கையில் தனக்கு திருமணமே ஆகாதா என்று ஏங்கியவர்களும், தமக்குக் குழந்தைப் பாக்கியம் கிடைக்காதாவென அங்கலாய்த்துத் தத்தளிப்பவர்களும், தீராத நோயால் அவஸ்தைப் படுபவர்களும், இன்னும் பலவிதமான இன்னல்களுக்கு உட்பட்டவர்களும் இங்கு வீற்றிருக்கும் கருமாரியம்மன் பேரருளால் சுகம் பெற்றுச் சந்தோசமாக வாழ்கிறார்கள் என்றால் அது மிகையில்லை. இது ஆதாரபூர்வமான உண்மை.

## உற்சவங்கள் :

இவ்வாலயம் தற்பொழுது பாலஸ்தாபனம் செய்யப்பட்டுள்ளதால் வருடாந்த பூசை, உற்சவ பூசைகள், பாற்குடபவனி, தேர்த்திருவிழா, தீ மிதிப்பு என்பன தற்பொழுது நடைபெறுவதில்லை.

## ஆலய பரிபாலன சபையின் எதிர்பார்ப்பு

1. இவ்வாலயம் சாதி, மத, குல, பேதமின்றி அனைவரும் வந்து வழிபடும் ஆலயமாக விளங்க வேண்டும்.
2. இவ்வாலயத்தின் மூலமாக அடியார்களை ஆன்மீகத்தில் நெறிப்படுத்துதல்.
3. அடியார்களின் வாழ்வு அன்னையின் அருளால் வளம்பெற வேண்டுமென்பதேயாகும்.

தெய்வத்தை நம்புகின்றவர்கள் எப்பொழுதும் தம்மை மறந்து செயற்படுவார்கள். அப்படிச்செயற்படுபவர்களுக்குத் தெய்வம் என்றும் துணை நிற்கும். தெய்வத்தை நினைத்துத் துணிவுடன் ஒரு செயலைச் செய்யும் போது அதற்கு எந்தத் தடையும் வருவதில்லை. அப்படி தடை வந்தாலும் தெய்வம் தனது திருவிளையாடலை விளையாடி அடியவர்களின் குறைகளைத் தீர்த்து வைக்கும். இந்தத் தெய்வத்தின்


தகவல்: பழ. புஸ்பநாதன் (உப பொருளாளர்) தொ.பே : 0777552923



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

global express
*we strive for your success!*






கடந்த ஆடி மாதம் எமது Global Express மாதாந்த சஞ்சிகையின் LBN விளம்பரப்பக்கத்தில் கேட்டகப்பட்ட வினாவிற்குப் பதில் எழுதியனுப்பிய 350 வாசகர்களில் குலுக்கல் முறையில் தெரிவுசெய்யப்பட்டு அழகிய வர்ணப்புடவை பரிசாகப் பெற்ற வெற்றியாளர்

## திருமதி.N.சந்திரிகா

இல.12/1,புனித லூர்து மாவத்தை,சிலாபம்.

மேலும் எங்களால் தொடுக்கப்படும் வினாக்களுக்குச் சரியான பதிலை எழுதியனுப்பி பரிசுகளை வென்றெடுங்கள்.





# ஐந்தாவது இதழின் முதற்பிரதி வெளியீடு

எமது Global Express ன் ஐந்தாவது இதழின் முதற்பிரதி 07-07-2011 அன்று கொழும்பு-3 இல் அமைந்திருக்கும் ஓசஸ் அழகுதாவர விற்பனை நிறுவன உரிமையாளர் செல்வி.சித்ரா டி சில்வா அவர்களுக்கு எமது விற்பனைத்துறை ஒருங்கமைப்பாளர் திரு.ரஜீவ் அவர்களினால் கையளிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# OUR PROPOSED 9TH PROJECT



*Now at*

**34, Ebenezer Place, Dehiwala.**

Span Tower
Striving for Excellence

## *Valuable Gift For Your Loved Ones*

- Rose 600 Sq.ft (1 Bedroom, 1 Bathroom)
- Orchid 715 Sq.ft (2 Bedrooms, 1 Bathroom)
- Lotus 1385 Sq.ft (3 Bedrooms, 2 Bathrooms)
- Lily 850 Sq.ft (2 Bedrooms, 2 Bathrooms)
- Tulips 1060 Sq.ft (2 Bedrooms, 2 Bathrooms)
- Jasmine 1030 Sq.ft (3 Bedrooms, 2 Bathrooms)

*Few Units Available*

**Kaviya - 0777 415 656**
**Roshan - 0777 415 665**
**Pooja - 0773 686 000**
**Aakash - 0777 415 662**


SPAN ENGINEERING

## Span Engineering (Pvt) Ltd

48/3 B1, Dharmarama Road, Colombo 06, Sri Lanka.
Tel : +94 11 2 507 997 / +94 11 2 508 655 Fax : +94 11 2 559 165
E-mail : mkt@spantower.com Web : www.spantower.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிகழ்வுகள்



யாழ்ப்பாணம் வண்ணை வீரமாகாளி அம்மன் ஆலய
வருடாந்த தேர் உற்சவ வைபவத்தின் போது எடுக்கப்பட்ட படங்கள்



மட்டக்களப்பு பெரியகல்லாறு
உதயபுரம் ஸ்ரீ வடபத்திரகாளியம்மன்
ஆலய புனருத்தாரண நிகழ்வும் மகாகும்பாபிஷேகமும்
இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்....

## வாசகர் கருத்து !

உலகத்தரமான பல்சுவை இலவச Global Express சஞ்சிகை கிடைத்தது. பரவசமானேன் இன மத பிரதேச சார்பற்ற சஞ்சிகை. குறுக்கெழுத்துப் போட்டி இல்லாத குறை. பசுமை கண் கவர் வர்ணம் சமகால நிகழ்வுகள் தாங்கிவரும் ஒரே ஒரு இலவச இதழ். சேவை தொடர இறை அருள் ஆசி வேண்டி வாழ்த்தும்.

தி. சதானந்தன், சிலாபம்.

தமிழ் வளர்க்கும் தரமான சஞ்சிகையாக வெளிவரும் இச்சஞ்சிகை கிழக்கு மண்ணில் தடம் பதிப்பது மகிழ்ச்சி. இனிவரும் காலங்களிலும் சிறப்புடன் வெளிவர எனது வாழ்த்துக்கள்.

கௌரவ முதலமைச்சர், சிவனேசதுரை சந்திரகாந்தன்.
கிழக்கு மாகாணம்.

எங்கும் கண்டிராத வர்ணமயமாக வெளிவரும் இச்சஞ்சிகையின் வழி சேவை நலம் இனியது. இச்சேவை தமிழ் சேவை. இது மேலும் தொடர வாழ்த்துக்கள்.

திரு. பொ. பியசேன, திகாமடுல்ல தொகுதி
பாராளுமன்ற உறுப்பினர்.

இனிமையுடன் சுவையும் தாங்கி வெளிவரும் இச்சஞ்சிகை மிகவும் சுவாரஸ்யமாகவும் வாசிக்க இனிமையாகவும் உள்ளது. அத்துடன் கிழக்கின் நிகழ்வுகள் சுமந்து வருவது பெருமை. இது போல் இச்சஞ்சிகை வளர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

கௌரவ மாநகர மேயர் மட்டக்களப்பு.
திருமதி.சிவகீத்தா பிரபாகரன்

சுவாரஸ்யமான அம்சங்கள், கல்விசார் கட்டுரைகள் எனப் பல்வேறுபட்ட சிறப்புகளைத் தாங்கி வடபுலத்தில் மிளிரும் Global Express மிகவும் சிறப்பான தமிழ்ச் செழிவுடன் வருகின்றது. இது மேலும் சிறப்புப் பெற வாழ்த்துக்கள்

திரு. கே. கௌதமன்
யாழ், பல்கலைக்கழகம்

உங்கள் கருத்துக்களுக்கும்
வாழ்த்துக்களுக்கும்
ஆலோசனைகளுக்கும்
மனமார்ந்த நன்றிகள்

- எக்ஸ்பிரஸ் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரும்பிப் பார்க்கின்றோம்



















Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ASLAM PREMIER LEAGUE

(2nd Floor Only)

DATE : 2011-07-14 (Poya Day)
AVENUE: St.Anthony's School - (Wattala)



**Kings 11**
Winner Champion (1st Place)





**Knight Riders**
Second Champion (2nd Place)



**Royal Challengers**
Third Place (3rd Place)



**Super Kings**
Fouth Place (4th Place)



Shakib
Man of the Series
(Kings 11)

கடந்த 14-07-2011 அன்று வத்தளை புனித அந்தோனியார் (St.Anthony's School) பாடசாலை மைதானத்தில் கொழும்பு-11 அஸ்லாம் மார்க்கட் (Aslam Market) 2nd Floor அனுசரணையில் நடத்தப்பட்ட APL (Aslam Premier League) 6 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட 11 பேர் கொண்ட மென்பந்து சுற்றுப்போட்டியில் Super Kings, Kings 11, Knight Riders, Royal Challengers ஆகிய அணிகள் பங்குபற்றியதும் அதன்போது இடம் பெற்ற நிகழ்வுகளின் போதும் எடுக்கப்பட்ட புகைப்படங்களில்



Abba
Man of the Match
(Knight Riders)











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org